www.tamilarangam.net

# முரண்பாடு பற்றி...



மாசேதுங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முரண்பாடு பற்றி...

(கட்டுரைகள்)

மாசேதுங்

வெளியீடு
சரவண பாலு பதிப்பகம்
விழுப்புரம் - 605 602

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பதிப்புரை

தோழர் மாசேதுங் எழுதிய **முரண்பாடு பற்றி...** மற்றும் **நடைமுறை பற்றி...** கட்டுரைகளை நூலாக வெளியிடுவதில் பெருமையடைகிறோம்.

முரண்பாடு பற்றிய... கட்டுரை, நடைமுறை பற்றி... என்ற கட்டுரையைத் தொடர்ந்து எழுதப்பட்டது. சீனப் பொதுவுடைமைக் கட்சிக்குள் தென்பட்ட வறட்டுத் தத்துவச் சிந்தனையின் கடுமையான பிழைகளை முறியடிக்கும் நோக்கத்திற்காகவே அது எழுதப்பட்டது.

முரண்பாடு பற்றிய கட்டுரை பீகிங் மக்கள் பதிப்பகத்தினரால் 1952 ஜுலையில் வெளியிடப்பட்ட (தேர்ந்தெடுக்கப்பட்ட மாசேதுங் படைப்புகள் - தொகுதி 1)-ல் கண்டுள்ள சீன மொழியிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது. தோழர் நீலகண்டன் அவர்களால் ஏற்கனவே வெளியிடப்பட்ட இக்கட்டுரை சிறிய திருத்தங்களுடன் மீண்டும் வெளியிடப்பட்டுள்ளது.

நடைமுறை பற்றி... கட்டுரை அயல்மொழிகள் பதிப்பகம், பீகிங் 1968-ல் வெளியிட்ட 'நான்கு மெய்யியல் கட்டுரைகள்' என்ற ஆங்கில நூலின் முதல் கட்டுரையின் மொழியாக்கம் ஆகும்.

இருகட்டுரைகளும் யேனானிலிருந்த சப்பானிய எதிர்ப்பு இராணுவ, மற்றும் அரசியல் கல்லூரியில் மாவோ ஆற்றிய உரைகளாகும். பின்னர் 'தேர்ந்தெடுக்கப்பட்ட மாசேதுங் படைப்புகளில்' அவர் இவற்றைச் சேர்க்கும்போது அவற்றில் சில மாற்றங்கள் செய்துள்ளார்.

மார்க்சிய - லெனினிய மெய்யியலை ஆழ்ந்து கற்பதற்கான மாவோவின் இன்னொரு கட்டுரையான **"சரியான கருத்துகள் எங்கிருந்து வருகின்றன?"** என்பதையும் சேர்த்து வெளியிட்டுள்ளோம்.

இந்நூல் வெளிவர உதவிய தோழர்கள் சாம்ராஜ், சே. கோச்சடை, நா. சண்முகநாதன் அச்சடிப்புப் பணிக்கு உதவிய எழில் பிரிண்ட்ஸ், ரங்கராஜ் கிராபிக்ஸ், லீலா கிராபிக்ஸ் ஆகியோருக்கு எங்களது நன்றி.

**விழுப்புரம்**
**02.04.2001**

ச. சந்திரசேகரன்

# I. முரண்பாடு பற்றி ...

(ஆகஸ்டு 1937)

**மாசேதுங்**

அனைத்துப் பொருள்களிலும் எதிர்மறைகள் (ஒற்றுமையாக —unity) உடன்வாழ்கின்றன; எதிர்மறைகளின் ஒற்றுமை பற்றிய விதி, முரண்பாடு பற்றிய விதி எனப்படும். இந்த விதி பொருள் முதல் வாதத்தின் அடிப்படை விதியாகும். முறையான பொருளில் (அர்த்தத்தில்) சொன்னால் **இயங்கியல் என்பது பொருட்களின் முக்கிய சாரத்தில் உள்ள முரண்பாட்டைப் பற்றி ஆராய்ந்து கற்பதே ஆகும்**[1] என்று **லெனின்** சொன்னார். இந்த விதி இயங்கியலின் முக்கிய சாரமானது என்று **லெனின்** அடிக்கடி குறிப்பிடுவார்; அவர் அதை இயங்கியலின் உட்கரு (Kernel) என்றும் குறிப்பிடுவதுண்டு.[2] எனவே இவ்விதியை நாம் ஆராயும் பொழுது இயங்கியல் தொடர்பான பல்வேறு வகைப் பிரச்சினைகளை, எத்தனையோ தத்துவப் பிரச்சனைகளைத் தொடாமல் இருக்க முடியாது. நாம் இப்பிரச்சனைகள் அனைத்திலும் தெளிவு பெற்றுவிட்டால் பொருள்முதல்வாத இயங்கியலின் அடிப்படையைப் புரிந்தவர்களாவோம்.

இப்பிரச்சனைகளாவன:

1. இரு உலக நோக்குகள்
2. முரண்பாட்டின் அனைத்தும் தழுவிய தன்மை
3. முரண்பாட்டின் குறித்ததன்மை
4. முதன்மை முரண்பாடும் ஒரு முரண்பாட்டின் முதன்மைக் கூறும் (அம்சமும்)
5. முரண்பாட்டுக் கூறுகளின் ஒத்த இயல்பும் போராட்டமும் (identity and struggle)
6. முரண்பாட்டின் பகைமைத் தன்மையின் இடம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அண்மை ஆண்டுகளில் டெபோரின்[3] கொள்கைக் குழாமின் (Deborin School) கருத்து முதல்வாதம் (Idealism) சோவியத் தத்துவ வட்டாரங்களில் திறனாய்வுக்கு (விமர்சனத்துக்கு) உள்ளாகி வருகிறது. இந்தத் திறனாய்வு நம்மிடையே மாபெரும் ஆர்வத்தைத் தூண்டியிருக்கிறது. டெபோரினின் கருத்து முதல்வாதம் சீனப் பொதுவுடைமைக் கட்சியில் ஒரு மோசமான தாக்கத்தை உண்டாக்கியுள்ளது. நம் கட்சியிலுள்ள வறட்டு தத்துவச் (Dogmatic) சிந்தனை டெபோரின் குழுவினரது பார்வையோடு தொடர்பில்லாதது என்று சொல்ல முடியாது. எனவே, நமது இப்போதைய தத்துவ படிப்பு, வறட்டு தத்துவச் சிந்தனையைத் துடைத்து அழிப்பதை முக்கிய நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

## 1. இரு உலக நோக்குகள்

மனித அறிவின் வரலாறு முழுக்க இப்பேரண்டத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியின் விதி பற்றி இரண்டு வகைக் கண்ணோட்டங்கள் இருந்து வருகின்றன. ஒன்று **இயங்காவியல் கருத்தியல்*** (metaphysical conception — இயக்க மறுப்பியல்), மற்றது **இயங்கியல் கருத்தியல்** (dialectical conception — இயக்கவியல் கருத்தியல்). இவை இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரான இரு உலகக் கண்ணோட்டங்கள்.

லெனின் கீழ்க்கண்டவாறு கூறினார்.

*வளர்ச்சி (படி முறை வளர்ச்சி, பரிணாமம்) பற்றிய இரண்டு அடிப்படையான (அல்லது இரண்டு சாத்தியமான? அல்லது வரலாற்று ரீதியாகக் காணத்தக்க) கருத்தியல்களாவன: ஒன்று இறக்கம் அல்லது ஏற்றமான வளர்ச்சியாகப் பார்ப்பது; இது திரும்பத் திரும்ப நிகழ்வதாகப் பார்க்கப்படுகிறது. மற்றது இதற்கு நேர்மாறானது. இது எதிர்மறைகளின் (***opposite*** *— எதிரானவை) ஒற்றுமையாக வளர்ச்சியைப் பார்ப்பது. (ஒரு பொருள் இரண்டு எதிரும் புதிருமான எதிர்மறைகளாக உடைவதாகவும்; அவற்றுக்கு இடையிலான தலைகீழ் உறவாகவும் வளர்ச்சியைப் பார்ப்பது)* [4]

இங்கே இரண்டு வெவ்வேறு உலகக் கண்ணோட்டங்களையே லெனின் சுட்டிக் காட்டுகிறார்.



இயங்காவியலைக் குறிப்பதற்காக **வான் ஹசுவே** (bsuan/bsueb) என்ற வேறொரு சொல்லும் சீனாவில் பயன்படுத்தப்படுகிறது. சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகளில், உலகக் கண்ணோட்டத்தின் பிரிக்க முடியாத பகுதியாக உள்ள கருத்து முதல்வாத சிந்தனை முறை, வரலாற்றின் நீண்ட நெடுங்காலமாக மனித சிந்தனையில் ஆட்சி செலுத்தி வந்தது.

ஐரோப்பாவில் முதலாளிய வர்க்கத்தின் தொடக்கக் காலத்தில் அந்த வர்க்கத்தின் பொருள் முதல் வாதம், இயங்காவியல் தன்மை கொண்டதாகவே இருந்தது. பல ஐரோப்பிய நாடுகளில் சமூகப் பொருளாதாரம் மிக வளர்ச்சியடைந்த முதலாளியப் பொருளாதாரமாக முன்னேற்றம் அடைந்தது; உற்பத்திச் சக்திகள், வர்க்கப் போராட்டங்கள், அறிவியல் கண்டுபிடிப்புகள் முதலியன முன் எப்போதும் காணாத அளவிற்கு வளர்ந்தன; தொழிற்துறைப் பாட்டாளி வர்க்கம் வரலாற்று வளர்ச்சியில் மாபெரும் உந்து சக்தியாக வளர்ந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் பொருள் முதல்வாத இயங்கியல் பார்வை என்ற மார்க்சிய உலக நோக்கு தோன்றியது. பின்னர் பொருள் முதல்வாதஇயங்கியலை எதிர்ப்பதற்காக தோன்றிய வெளிப்படையானதும் வெட்கம் கெட்டதுமான பிற்போக்கு கருத்து முதல்வாத கொள்கையுடன், கொச்சைப் பரிணாமவாதக் கொள்கையும் சேர்ந்தே வெளிப்பட்டது.

இந்த இயங்காவியல் அல்லது கொச்சைப் பரிணாமவாத உலக நோக்கானது பொருட்களை தனித்தனியாக இயங்கிக் கொண்டிருக்கின்றனவையாகவும், நிலையானதாகவும், ஒரு தலைச் சார்பானதாகவும் பார்க்கிறது. அது பேரண்டத்தில் உள்ள அனைத்துப் பொருட்கள், அவற்றின் வடிவங்கள் வகைகள் ஆகியவற்றை ஒன்றுக்கொன்று என்றுமே பிரிந்துள்ளவையாகவும் மாறாத இயல்புடையனவாகவுமே கருதுகிறது. மாற்றம் என்பதை அளவில் கூடுதல் அல்லது குறைதல் அல்லது இடமாற்றம் என்றே இக்கண்ணோட்டம் (இயங்காவியல் கண்ணோட்டம்) பார்க்கிறது. அளவு கூடுவது அல்லது குறைவது, அல்லது பொருட்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு மாறுவது போன்றவற்றிற்கான காரணம் (cause) பொருட்களின் உள்ளே இருப்பதில்லை; மாறாக பொருட்களுக்கு வெளியே உள்ளது- அதாவது மாற்றத்துக்கான உந்து சக்தியானது பொருட்களின் வெளியில் உள்ளது என்று இந்நோக்குக் கருதுகிறது.

இப்பேரண்டத்தில் உள்ள வெவ்வேறு வகையான அனைத்துப் பொருட்களும் அப்பொருட்களின் எல்லாப் பண்புகளும், அவை முதலில் தோற்றம் பெற்ற காலத்தில் எப்படி இருந்தனவோ அப்படியேதான் மாற்றமின்றி இருந்து வருகின்றன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று இயங்காவியலாளர்கள் கருதுகின்றனர். பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள் அனைத்தும் அளவில் ஏற்பட்ட கூடுதல் அல்லது குறைவாகவே இருக்கின்றன என்றும் அவர்கள் கருதுகின்றனர். ஒரு பொருள் மீண்டும் மீண்டும் அதே பொருளாகவே திரும்பவும் மாறுகிறது; அவ்வாறின்றி அதிலிருந்து மாறுபட்ட வேறு ஒரு பொருளாக அது மாற்றமடைய முடியாது எனவும் அவர்கள் வாதாடுகின்றனர். அவர்களுடைய கருத்தின்படி, முதலாளியச் சுரண்டல் முதலாளியப் போட்டி, முதலாளியச் சமுதாயத்தின் தனி மனிதச் சித்தாந்தம் ஆகிய அனைத்தையும் பண்டைய அடிமைச் சமுதாயத்திலும் அதற்கும் முந்தைய தொண்மைச் சமுதாயத்திலும் கூடக் காணமுடியும். அவை ஒரு போதும் மாறாமலேயே இருந்து வரும்.

புவியியல், வெட்பதட்ப நிலைமை போன்ற சமுதாயத்துக்கு வெளியே உள்ள காரணிகளையே இவர்கள் சமூக வளர்ச்சிக்கான காரணங்களாகக் காட்டுகின்றனர். இவர்கள் ஒன்றின் வளர்ச்சிக்கான காரணத்தை, அதற்கு வெளியே, மிகவும் எளிதான வழியில் கண்டறிய முயல்கின்றனர்; அத்தோடு அதற்குள்ளேயுள்ள முரண்பாடுகளிலிருந்துதான் அதன் வளர்ச்சி உருவாகிறது என்கிற பொருள் முதல்வாத இயங்கியல் கோட்பாட்டையும் மறுக்கின்றனர். இதன் விளைவாக பொருட்களின் பண்புகளில் உள்ள பல்வேறு வகையான வேறுபாடுகளையோ, ஒரு பண்பு மற்றொரு பண்பாக மாறுவதையோ இவர்களால் விளக்க முடிவதில்லை. ஐரோப்பாவில் இத்தகைய சிந்தனை 17-ஆம், 18-ஆம் நூற்றாண்டுகளில் எந்திரவியல் பொருள் முதல்வாதமாகவும், 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கொச்சைப் பரிமாணவியலாகவும் இருந்தது. சீனாவில், **''விண்ணுலகம் மாறுவதில்லை; அது போல 'தாவோ'வும் மாறுவதேயில்லை''**[5] என்ற கூற்றில் இந்த இயங்காவியல் சிந்தனை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இக் கருத்து உளுத்துப்போன நிலவுடைமை ஆளும் வர்க்கங்களால் நெடுங்காலமாக தூக்கி நிறுத்தப்பட்டு வந்தது. ஐரோப்பாவிலிருந்து கடந்த நூற்றாண்டுகளாக இறக்குமதி செய்யப்பட்டு வந்த எந்திரவியல் பொருள் முதல்வாதமும், கொச்சைப் பரிணாமவியலும் முதலாளிய வர்க்கத்தால் ஆதரிக்கப்பட்டே வருகின்றன.

இந்த இயங்காவியல் உலக நோக்குக்கு எதிராக பொருள் முதல்வாத இயங்கியல் உலக நோக்கு அமைந்துள்ளது. ஒரு பொருளின் வளர்ச்சியை ஆய்ந்தறிய வேண்டுமானால் நாம் அதை உள்ளார்ந்தும், அப்பொருள் இதர பொருள்களுடன் கொண்டுள்ள தொடர்புகளைக் கொண்டும் ஆய்ந்தறிய வேண்டுமென்று பொருள் முதல் வாத இயங்கியல் சொல்கிறது. பொருள்



களின் வளர்ச்சி என்பதை அப்பொருளின் உள்ளியக்கம், அவற்றின் இன்றியமையாத் தன்னியக்கம் என்றே புரிந்து கொள்ள வேண்டும். அதே வேளையில் ஒவ்வொரு பொருளும் தனது இயக்கத்தில் தன்னைச் சுற்றியுள்ள பொருட்களுடன் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவும், ஒன்றையொன்று பாதிப்பனவாகவும் இருக்கிறது என்றும் பார்க்க வேண்டும். ஒரு பொருளின் வளர்ச்சிக்கான அடிப்படைக் காரணம் பொருளுக்கு வெளியே இருப்பதன்று; அதற்கு உள்ளேயே இருப்பதாகும். இது அதற்குள்ளே நிலவும் முரண்பாட்டியல்பில் பொதிந்துள்ளது. ஒவ்வொரு பொருளிலும் இந்த உள்முரண்பாட்டு *(அக முரண்பாடு - வழக்குச் சொல்)* இயல்பு உள்ளது. எனவேதான் அப்பொருளானது இயக்கமும் வளர்ச்சியும் பெறுகிறது.

ஒரு பொருளுக்குள்ளே உள்ள முரண்பாட்டியல்புதான் அப்பொருளின் வளர்ச்சிக்கான அடிப்படைக் காரணம். அதே வேளையில் அப்பொருள் பிற பொருள்களுடன் கொண்டுள்ள உறவுகளும், அவை ஒன்றையொன்று பாதிப்பதும் (interaction) அப்பொருளின் வளர்ச்சிக்கான இரண்டாம் நிலைக் காரணங்களேயாகும். இவ்வாறாக, எந்திரவியல் பொருள் முதல் வாதமும், கொச்சைப் பரிணாமவியலும் கற்பிக்கிற புறக்காரணக் கோட்பாட்டை — வளர்ச்சிக்கான உந்து சக்தி பொருளுக்கு வெளியில் உள்ளது என்ற கொள்கையை —பொருள் முதல்வாத இயங்கியல் எதிர்க்கிறது. வெறும் புறக் காரணங்கள் எந்திரவியல் இயக்கத்தை அதாவது அளவு மாற்றங்களை மட்டுமே ஏற்படுத்த வழிவகுக்கும். ஆனால் பொருட்களின் பண்புகள் ஆயிரமாயிரம் வகைகளில் ஏன் மாறுபடுகின்றன என்பதையோ, ஒரு பொருள் வேறு ஒரு பொருளாக மாறுவது ஏன் என்பதையோ அக்கொள்கையால் விளக்க முடியாது.

உண்மையில், புறச்சக்தியால் தூண்டப்படுகிற எந்தரவியல் இயக்கமும்கூட பொருட்களுக்குள் இருக்கும் உள் முரண்பாட்டியல்பால்தான் ஏற்படுகிறது. இதேபோல தாவரங்களிலும், விலங்குகளிலும் ஏற்படுகிற இயல்பான வளர்ச்சி, அவற்றின் அளவில் (quantitative) ஏற்படும் வளர்ச்சி ஆகியவற்றுக்கான முதன்மைக் காரணம் அவற்றில் உள்ள உள் முரண்பாடுகளே. அதுபோலவே சமுதாய வளர்ச்சிக்கு முதன்மையாக இருப்பவை புறக்காரணங்கள் அல்ல — உட்காரணங்கள்தான். ஒரே வகையான புவியியல், வெட்பதட்ப நிலைமைகளைக் கொண்ட பல்வேறு நாடுகள் தத்தம் வளர்ச்சியில் வேறுபாடுகளும், ஏற்றத் தாழ்வுகளும் கொண்டவையாகவே உள்ளன. மேலும், புவியியல் அமைப்பும், வெட்ப தட்ப நிலைமையில் மாற்றங்கள் ஏற்படாத நிலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யிலும் கூட அதே நாட்டில் மாபெரும் சமுதாய மாற்றங்கள் உண்டாகக் கூடும். ஏகாதிபத்திய ரஷ்யா, சோசலிச சோவியத் ஒன்றியமானது. உலகிலிருந்து ஒதுங்கி நின்ற நிலவுடைமை ஜப்பான் ஏகாதிபத்திய ஜப்பானாகியது. இருந்தும் இந்நாடுகளின் புவியியலிலும், வெட்ப தட்ப நிலைமைகளிலும் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. நீண்ட நெடுங்காலமாக நிலவுடைமை ஆளுமைக்கு உட்பட்டிருந்த சீனம் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக மாபெரும் மாறுதல்களுக்கு உட்பட்டு வருகிறது; இப்போது அது விடுதலையும் சுதந்திரமும் பெற்ற ஒரு புதிய சீனமாக மாறும் திசையை நோக்கிச் சென்றுக் கொண்டிருக்கிறது. இருந்தும் சீனத்தில் புவியியலிலோ, வெட்ப தட்ப நிலையிலோ யாதொரு மாறுதலும் இதுவரை ஏற்படவில்லை.

இப்புவி முழுவதிலும், அதன் பகுதி ஒவ்வொன்றிலும் புவியியலிலும், வெட்ப தட்ப நிலைமைகளிலும் மாறுதல்கள் ஏற்படத்தான் செய்கின்றன. ஆனால் அத்தகைய மாறுதல்கள் சமுதாய மாற்றங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் அற்பமானவையாகவே இருக்கின்றன. புவியியல், வெட்ப தட்ப நிலைகளில் மாறுதல்கள் வெளிப்பட பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் பிடிக்கின்றன. ஆனால் சமுதாய மாற்றங்கள் ஏற்பட ஆயிரக்கணக்கான, நூற்றுக்கணக்கான, சில பத்தாண்டுகள் அவ்வளவு ஏன் புரட்சியின் காலத்தில் ஒரு சில ஆண்டுகள் அல்லது ஓரிரு மாதங்கள் கூட பிடிக்கின்றன. இயற்கையில் ஏற்படும் மாறுதல்களுக்கான முதன்மைக் காரணம் இயற்கையில் உள்ள உள் முரண்பாடுகளின் வளர்ச்சியே என பொருள் முதல்வாத இயங்கியல் கூறுகிறது. சமுதாய மாற்றங்களுக்கான முதன்மைக் காரணம், சமுதாயத்தில் உள்ள உள் முரண்பாடுகளின் வளர்ச்சியே. அதாவது, உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையே உள்ள முரண்பாடு, வர்க்கங்களுக்கிடையே உள்ள முரண்பாடு, பழமைக்கும் புதுமைக்கும் இடையே உள்ள முரண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சியேயாகும். இம் முரண்பாடுகளின் வளர்ச்சியே, சமுதாயத்தை முன்னுக்குத் தள்ளி, பழைய சமுதாயத்தை அகற்றி புதிய சமுதாயத்தை நிறுவுவதற்கான உந்து சக்தியை வழங்குகிறது.

பொருள் முதல்வாத இயங்கியல், புறக் காரணங்களை ஒரு போதும் புறக்கணிப்பதில்லை. **புறக்காரணங்கள் மாறுதல்களுக்கான சூழ்நிலை; அகக்காரணங்களே மாறுதல்களுக்கான அடிப்படை; புறக்காரணங்கள் அகக் காரணங்கள் வழியாகவே செயல்படுகின்றன** என்று பொருள் முதல்வாத இயங்கியல் கருதுகின்றது. பொருத்தமான வெப்பநிலையில் ஒரு முட்டை குஞ்சாக



மாறுகிறது. ஆனால் எந்த வெப்ப நிலையிலும் ஒரு கல் குஞ்சாக மாறுவதில்லை. ஏனெனில் இரண்டுமே வெவ்வேறான அடிப்படை கொண்டவை.

வெவ்வேறு நாட்டு மக்களுக்கிடையே இடைவிடாத இடைவினை (interaction) இருந்து வருகின்றது. முதலாளிய சகாப்தத்தில், இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால், ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் சகாப்தத்தில் பல்வேறு நாடுகளுக்கிடையே உள்ள அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் துறைகளில் இந்நாடுகள் ஒன்றுக்கொன்று ஏற்படுத்திக் கொள்ளும் செல்வாக்கும் தாக்கங்களும் மிகப் பெரியவை. அக்டோபர் சோசலிச புரட்சி ரஷ்ய வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றிலும் கூட ஓர் புதிய சகாப்தத்தை உருவாக்கியது. இது உலகின் பிற நாடுகளில் உள் மாறுதல்கள் ஏற்படுவதற்கு உரியதொரு செல்வாக்கினை உருவாக்கியது. அதைப் போலவே, இன்னும் குறிப்பிடத்தக்க ஆழமான முறையில் சீனத்தின் உள்மாறுதல்களிலும் அப்புரட்சி செல்வாக்கு செலுத்தியது. ஆயினும் இம்மாற்றங்கள் சீனம் உட்பட இந்நாடுகளின் வளர்ச்சியின் உள்விதிகளுக்கு ஏற்பத்தான் நடந்தேறின.

போரில் ஒரு படை வெல்கிறது; மற்றொரு படை தோற்கடிக்கப்படுகிறது. வெற்றியும் தோல்வியும் அகக் காரணங்களால்தான் முடிவு செய்யப்படுகின்றன. தனது வலிமையைக் கொண்டோ அல்லது திறமை வாய்ந்த தலைமைப் பண்பு கொண்டோ ஒரு படை வெல்கிறது. தனது வலுக்குறைவினாலோ அல்லது திறமையற்ற தலைமைப் பண்பு காரணமாகவோ மற்றொரு படை தோல்வியடைகிறது. எனவே அகக் காரணங்கள் வழியாகவே புறக்காரணங்கள் செயல்படுகின்றன.

1927-ல் சீனத்தில் பாட்டாளி வர்க்கம் சீனப் பெரும் முதலாளிய வர்க்கத்தால் தோற்கடிக்கப்பட்டது ஏன்? சீனப் பாட்டாளி வர்க்கத்துக்குள்ளேயே (சீனப் பொதுவுடைமைக் கட்சிக்குள்ளேயே) இருந்த சந்தர்ப்ப வாதமே இத்தோல்விக்குக் காரணமாகும். நாங்கள் இந்த சந்தர்ப்ப வாதத்தை துடைத்தழித்தப் பின்னரே சீனப்புரட்சி தொடர்ந்து முன்னேறத் தொடங்கியது. அதற்குப் பிறகும் சீனப் புரட்சி பகைவர்களால் கடுமையான பின்னடைவுகளுக்கு உள்ளாக்கப்பட்டது. நமது கட்சிக்குள் துணிச்சல் வாதம் தலையெடுத்ததுதான் அதற்குக் காரணமாகும். இத்துணிச்சல் வாதத்தை நாங்கள் துடைத்தழித்தோம். எமது லட்சியம் மேலும் முன்னேறியது. இவ்வாறு, ஓர் அரசியல் கட்சியானது தனது அரசியல் வழியில் சரியாக இருந்தால், தனது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைப்புகளை உறுதியாக அமைத்துக் கொண்டிருந்தால் புரட்சியை வெற்றிக்கு வழிநடத்திச் செல்ல முடியும்.

பண்டைக் காலத்திலேயே சீனத்திலும் ஐரோப்பாவிலும் இயங்கியல் உலக நோக்கு தோன்றியது. எனினும் இப்பண்டைய இயங்கியல், தன்னியல்பான எளிமையான தன்மையைக் கொண்டிருந்தது. அப்போதைய சமுதாய வரலாற்று நிலைமைகளில், முறையானதொரு கோட்பாட்டமைப்பை அப்போது உருவாக்கிக் கொள்ள அதனால் முடியவில்லை. எனவே அதனால் உலகைப் பற்றிய முழுமையான விளக்கத்தைச் சொல்ல முடியவில்லை. அதனுடைய இடத்தை இயங்காவியல் எடுத்துக் கொண்டது. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த புகழ்பெற்ற ஜெர்மன் தத்துவவாதி **ஹெகல்**, இயங்கியலுக்கு மிகத் தலையாயப் பங்களிப்பை வழங்கினார். ஆனால் இவரது இயங்கியல், கருத்து முதல் வாதமாகவே இருந்தது. பாட்டாளி வர்க்க இயக்கத்தின் மாபெரும் செயல் வீரர்களாகிய **மார்க்சும் எங்கெல்சும்** மனித அறிவின் வரலாற்றில் உள்ள ஆக்கப்பூர்வமான சாதனைகளையெல்லாம் ஒன்றிணைத்து, ஹெகலின் இயங்கியலில் உள்ள அறிவுக் கூறுகளைத் திறனாய்வு நோக்கில் உள்வாங்கிக் கொண்டு இயங்கியல் பொருள் முதல்வாதம், வரலாற்றுப் பொருள் முதல் வாதம் என்னும் மாபெரும் கோட்பாட்டைப் படைத்தார்கள். அதன் பின்னரே மனித அறிவின் வரலாற்றில் இதற்கு முன் எப்போதும் நடந்திராத பெரும் புரட்சி நடந்தேறியது. இக் கோட்பாட்டை லெனினும் ஸ்டாலினும் மேன்மேலும் வளர்த்தெடுத்தனர். சீனத்தில் இது பரவியதுடன், மிக விரைவில் சீனச் சிந்தனை உலகில் மாபெரும் மாறுதல்களை ஏற்படுத்தியது.

இந்த இயங்கியல் உலக நோக்கு முதன்மையாக நமக்குக் கற்றுத் தருவது என்ன? வெவ்வேறு வகைப்பட்ட பொருட்களில் உள்ள முரண்பாடுகளின் — எதிரும் புதிருமான கூறுகளின் — இயக்கத்தைக் கூர்ந்து கவனித்து பகுப்பாய்வு செய்வதில் தேர்ச்சி பெறவேண்டும் என்றும் இத்தகைய பகுப்பாய்வின் அடிப்படையில் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை சுட்டிக் காட்ட வேண்டுமென்றும் நமக்கு இது சொல்லுகிறது. எனவே பொருள்களில் உள்ள முரண்பாட்டின் நியதியை பருண்மையான முறையில் உணர்ந்து கொள்வது நமக்கு மிக மிக முதன்மையாகும்.



## 2. முரண்பாட்டின் அனைத்தும் தழுவிய தன்மை

விளக்கம் கூற வசதியாக இருக்கும் பொருட்டு, முரண்பாட்டின் அனைத்தும் தழுவிய தன்மையை முதலிலும் முரண்பாட்டின் குறித்த தன்மையைப் பின்னரும் விளக்கலாம் என்று நான் கருதுகின்றேன். அனைத்தும் தழுவிய முரண்பாட்டை — எங்கும் நிறைந்த முரண்பாட்டை — சுருக்கமாக விளக்கிட முடியும் என்பதால்தான் அதை முதலில் எடுத்துக் கொள்கின்றேன்.

மார்க்சியத்தின் மாபெரும் படைப்பாளர்களான மார்க்சு, எங்கெல்சு ஆகியோராலும், தொடர்ந்து அதைக் கடைபிடித்து வளரச் செய்தவர்களான லெனின், ஸ்டாலின் ஆகியோராலும் பொருள் முதல்வாத இயங்கியல் கண்டறியப்பட்டது. அது முதல், மனித வரலாறு, இயற்கையின் வரலாறு ஆகியவற்றின் பல்வேறு கூறுகளைப் பகுத்தாராயவும், சமுதாயம் இயற்கை ஆகியவற்றின் பல கூறுகளை மாற்றியமைக்கவும் (சோவியத் ஒன்றியத்தில் செய்யப்பட்டது போல) பொருள் முதல் வாத இயங்கியல் வெற்றிகரமாக கையாளப்பட்டதால் எங்கும் நிறைந்த முரண்பாடு என்பது பரவலாக புரிந்து கொள்ளப் பட்டுள்ளது.

இதே வேளையில் முரண்பாட்டின் குறித்த தன்மையைப் பற்றி பல தோழர்கள், குறிப்பாக வறட்டுவாதிகள் இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை. முரண்பாட்டின் குறித்த தன்மையில்தான் எங்கும் நிறைந்த முரண்பாடு நிலவுகிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. நம்மை எதிர் கொள்ளும் திட்டவட்டமான பிரச்சனைகளில் உள்ள முரண்பாட்டின் குறித்த தன்மை பற்றிய ஆய்வானது புரட்சிகர நடை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முறையை வழி நடத்திச் செல்வதற்கு எவ்வளவு முக்கியமானது என்பதும் இவர்களுக்குப் புரியவில்லை. எனவே முரண்பாட்டின் குறித்த தன்மையைப் பற்றிய ஆய்வுக்கு அழுத்தம் அளிப்பதும், அதை விரிவாக விளக்குவதும் இன்றியமையாதனவாகும். இக் காரணம் கருதியே பொருட்களில் உள்ள முரண்பாடு பற்றிய விதியை நாம் ஆராயும்பொழுது எங்கும் நிறைந்த முரண்பாட்டை முதலில் ஆராய்வோம். பின்னர் முரண்பாட்டின் குறித்த தன்மையைப் பற்றிய ஆராய்விற்கு சிறப்பான அழுத்தம் தருவோம். இறுதியில் எங்கும் நிறைந்த முரண்பாட்டை மீண்டும் ஆராய்வோம்.

முரண்பாட்டின் எங்கும் நிறைந்த தன்மை அல்லது சார்பிலாத் தன்மை என்பது இரு பொருள் கொண்டது; ஒன்று எல்லா வற்றின் வளர்ச்சி இயக்கத்திலும் முரண்பாடு இருந்து கொண்டிருக்கிறது என்பதாகும். மற்றொன்று, ஒவ்வொன்றின் வளர்ச்சி இயக்கத்திலும் எதிர்மறைகளின் இயக்கம் தொடக்கம் முதல் இறுதி வரை இருந்து கொண்டிருக்கிறது என்பதாகும்.

**இயக்கமே ஒரு முரண்பாடுதான்**[6] என எங்கல்சு கூறினார். **''இயற்கையின் அனைத்து நிகழ்வுகளிலும் இயக்கப் போக்குகளிலும் (இவற்றில் மனம் (Mind), சமுதாயம் ஆகியவை அடங்கும்) முரண்பாடான, ஒன்றையொன்று மறுத்து நிற்கின்ற, எதிர்மறையான போக்குகளைப் புரிந்து கொள்ளல் (கண்டறிதல்)'' என்பது எதிர்மறைகளின் ஒற்றுமை பற்றிய விதியாகும்**[7] என லெனின் வரையறுத்தார். இக் கருத்துகள் சரியானவையே. பொருட்கள் அனைத்திலும் காணப்படும் முரண்பட்ட கூறுகளுக்கிடையே ஒன்றுக்கொன்று உள்ள சார்பும், இவற்றுக்கிடையே உள்ள போராட்டமும்தான் அவற்றின் வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன. அவற்றின் வளர்ச்சியை உந்தித் தள்ளுகின்றன. முரண்பாடு இல்லாத பொருள் என்று எதுவும் இல்லை; முரண்பாடு இல்லாமல் எதுவும் இருக்காது.

சிக்கலற்ற இயக்க வடிவங்களுக்கும் (உதாரணமாக — எந்திர இயக்கம்) உயர்மட்ட, சிக்கலான இயக்க வடிவங்களுக்கும் முரண்பாடே அடிப்படையாகும்.

எங்கும் நிறைந்த முரண்பாடு பற்றி **எங்கெல்சு** பின்வருமாறு விளக்கினார்:

''எளியதொரு இயந்திரமய இடமாற்றத்துக்கு முரண்பாடு காரணமாக உள்ளது. பொருளினுடைய இயக்கத்தின் உயர் வடிவங்களுக்கு இவ்வுண்மை மேலும் பொருந்தும். குறிப்பாக, வாழ்கின்ற உயிரினங்களுக்கும் அவற்றின் வளர்ச்சிக்கும் அது இன்னும் கூடுதலாகப் பொருந்தும்.... உயிர் என்பதே நிச்சயமாகவும் முதன்மையாகவும் இதில்தான் அமைந்திருக்கிறது. ஒரு உயிர்ப் பொருள் ஒவ்வொரு நொடியும் ஒன்றாகவும் வேறாகவும் இருக்கின்ற ஒன்றுதான். அதாவது மாறிக் கொண்டே இருக்கின்ற ஒன்றுதான். எனவே உயிர் என்பது கூட பொருட்களின் இயக்கப் போக்குகளில் இருப்பதைப் போன்ற ஒரு முரண்பாடுதான். இம்முரண்பாடு இடைவிடாமல் தோன்றிக் கொண்டும், தீர்வு கண்டுக் கொண்டும், அழித்துக் கொண்டும் இருக்கின்றது. இம் முரண்பாடு முடிவுற்றதும் உயிர் அடங்குகிறது. சாவு வருகிறது. வாழ்வும் ஒரு முடிவுக்கு வருகிறது.

இது போலவே சிந்தனை உலகிலும் கூட இம் முரண்பாட்டை நாம் காணாமல் இருக்க முடியாது. உதாரணமாக மனிதனுக்கு இயல்பாக உள்ள கட்டுப்படுத்தப்படாத அறிவுத் திறமைக்கும், அது உண்மையில், புற நிலைமைகளால் கட்டுப்படுத்தப்பட்டு எல்லைக்குட்பட்ட அறியும் ஆற்றலுடைய மனிதர்களிடம் மட்டுமே இருப்பதற்கும் இடையில் உள்ள முரண்பாடாகும். நம்மைப் பொறுத்தவரையில், நடைமுறையில் முடிவில்லாத் தலைமுறை தலைமுறையான சந்ததித் தொடரில், எல்லையில்லாத வகையில் அறிவு வளர்ச்சியடைந்து கொண்டே இருக்கிறது. இதிலேயே தீர்வும் அடங்கியுள்ளது...

... உயர் கணிதத்தின் அடிப்படை விதிகளில் ஒன்று முரண்பாடுதான்...

... எனினும் தொடக்க கணிதத்திலும் முரண்பாடுகளை நிறைய காணலாம்...''[8]

எங்கும் நிறைந்த முரண்பாடு பற்றி லெனின் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

| | | |
|---|---|---|
| **கணிதத்தில்** | : | கூட்டலும், கழித்தலும்; பகுத்தலும், தொகுத்தலும்; |
| **எந்திரவியலில்** | : | வினையும், எதிர் வினையும்; |
| **இயற்பியலில்** | : | நேர்மின்சாரமும், எதிர்மின்சாரமும்; |
| **வேதியியலில்** | : | அணுக்களின் சேர்க்கையும், பிரிவும்; |
| **சமூக விஞ்ஞானத்தில்** | : | வர்க்கப் போராட்டம்''[9] |

போரில்: தாக்குதலும், தற்காப்பும்; முன்னேறுதலும் பின் வாங்குதலும்; வெற்றியும், தோல்வியும் — இவையெல்லாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிகழ்ச்சிகள். ஒன்றில்லாமல் மற்றது இருக்க முடியாது. இவ்விரண்டு கூறுகளும் ஒரே வேளையில் ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன; ஒன்றையொன்று சார்ந்து இருக்கின்றன. இவை போர் என்ற முழுமையை உருவாக்குகின்றன. போரின் வளர்ச்சியை உந்தித் தள்ளுகின்றன. அதன் சிக்கல்களுக்குத் தீர்வு காண்கின்றன.

மனிதனது கருத்துகளில் உள்ள ஒவ்வொரு வேறுபாடும் ஒருபுற முரண்பாட்டையே எதிரொலிக்கின்றது. புற முரண்பாடுகள் அகச் சிந்தனையில் பிரதிபலிக்கின்றன. இதுதான் எதிரும் புதிருமான கருத்துக்கள் முட்டி மோதுகிற இயக்கத்தை உருவாக்குகிறது. இது சிந்தனையின் வளர்ச்சியை முன் தள்ளுகிறது. மனித சிந்தனையின் பிரச்சினைகளைத் தொடர்ந்து தீர்த்து வைக்கிறது.

கட்சிக்குள் மாறுபட்ட கருத்துகளிடையே எதிர்ப்பும் போராட்டமும் இடைவிடாது நிகழ்கின்றன. இவை, சமுதாயத்தில் உள்ள வர்க்கங்களுக்கு இடையிலும் புதியவை, பழையவை இரண்டுக்குமிடையிலும் உள்ள முரண்பாடுகள் கட்சிக்குள் ஏற்படுத்தும் எதிரொலிப்பாகும். *கட்சிக்குள் முரண்பாடுகளே இல்லையென்றாலும் அவற்றைத் தீர்ப்பதற்கான சித்தாந்தப் போராட்டங்கள் எதுவுமே இல்லையென்றாலும் கட்சியின் வாழ்வு முடிந்துவிடும்.*

இவ்வாறாக எளிய இயக்க வடிவங்களாகட்டும், அல்லது சிக்கலான இயக்க வடிவங்களாகட்டும், புற நிகழ்ச்சிகளாகட்டும், சித்தாந்த நிகழ்ச்சிகளாகட்டும் முரண்பாடு என்பது எங்கும் நிறைந்ததாகவும், எல்லா நிகழ்ச்சிப் போக்குகளிலும் இருந்து வருகிறது என்பதும் நமக்கு இப்போது தெளிவாகிவிட்டது. ஆனால் ஒவ்வொரு இயக்கப் போக்கின் தொடக்க நிலையிலும் கூட முரண்பாடு இருந்து வருகிறதா? ஒவ்வொரு தனிப் பொருளின் வளர்ச்சிப் போக்கில் தொடக்கம் முதல் இறுதி வரை எதிர் மறைகளின் இயக்கம் இருக்கிறதா?

சோவியத் தத்துவ அறிஞர்கள், **டெபோரின் கொள்கைக் கூட்டத்தைத்** திறனாய்வு செய்து எழுதியுள்ள கட்டுரைகள் சுட்டிக் காட்டுவது என்ன? முரண்பாடு ஒரு இயக்கப் போக்கின் தொடக்கத்திலேயே தோன்றுவதில்லை; அவ்வியக்கப் போக்கு ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்கு வளர்ச்சியடைந்த பின்னரே முரண்பாடு தோன்றுகிறது என்பதே டெபோரினது சித்தாந்தமாகும். இதைத்தான் அக்கட்டுரைகள் சுட்டிக் காட்டுகின்றன. அப்படியானால் வளர்ச்சியின் இயக்கப் போக்கு இக்கட்டத்தை அடைவதற்கு முந்திய வளர்ச்சிக்குக் காரணம் புறக் காரணமாக இருக்குமேயன்றி அகக்காரணமாக இருக்க முடியாது. இவ்வாறு, புறக் காரணமும் எந்திரவியல் விளக்கமும் சொல்லும் இயங்காவியல்



கோட்பாடுகளையே டெபோரின் நாடிச் செல்கிறார். பருண்மையான பிரச்சனைகளைப் பகுப்பாய்வதில் டெபோரின் கொள்கைக் குழுவினர் இக்கண்ணோட்டத்தை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பதைக் காண்போம். சோவியத் யூனியனில் பணக்கார விவசாயிகளுக்கும் சாதாரண விவசாயிகளுக்கும் இடையில் வேற்றுமைகள் இருப்பதாகக் கூறுகின்றனரேயன்றி, முரண்பாடுகள் இருப்பதாகக் கூறவில்லை. இவ்வகையில் அவர்கள் **புகாரினின்**[10] கருத்தை முழுமையாக ஏற்கின்றனர்.

பிரஞ்சுப் புரட்சியை ஆராயும்பொழுதும் இத்தகைய கண்ணோட்டத்தையே டெபோரின் கொள்கைக் குழுவினர் கடைபிடிக்கின்றனர். பிரஞ்சுப் புரட்சிக்கு முன்பு தொழிலாளர், விவசாயிகள், முதலாளிகள் ஆகியோரைக் கொண்ட மூன்றாம் எஸ்டேட் என சொல்லப்படும் சமூகப் பிரிவுக்கு வேற்றுமைகள் இருந்தனவேயன்றி முரண்பாடுகள் இல்லையென இக்கொள்கைக் குழுவினர் கருதுகின்றனர். டெபோரின் கொள்கையினரின் இக்கருத்துகள் மார்க்சியத்திற்கு எதிரானவை. ஒவ்வொரு வேறுபாட்டிலும் ஒரு முரண்பாடு அடங்கியுள்ளது என்பதையும், வேறுபாடு என்பதே முரண்பாடுதான் என்பதையும் இக்கொள்கையினர் புரிந்து கொள்ளவில்லை. உழைப்பாளி வர்க்கம், முதலாளிய வர்க்கம் இரண்டும் அவை தோன்றிய நாள் முதற்கொண்டே ஒன்றுக்கொன்று முரண்பட்டு நிற்கின்றன என்பதும் தொடக்கத்தில் மட்டுமே அம்முரண்பாடுகள் கடுமையாக தீவிரமடையவில்லை என்பதும்தான் உண்மையாகும்.

சோவியத் யூனியனில் இப்போதுள்ள சமூகச் சூழலிலும் கூட தொழிலாளர்களுக்கும் உழவர்களுக்கும் இடையே வேற்றுமை இருந்துதான் வருகிறது. இவ்வேறுபாடு என்பதே முரண்பாடுதான். இதே வேறுபாடு, உழைப்பாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையில் உள்ள முரண்பாடு போல இல்லாதபோதிலும் முரண்பாடாகவே அமைகிறது. இது பகைமையாகும் அளவிற்கு தீவிரமடையா விட்டாலும் வர்க்கப் போராட்ட வடிவங்களை எடுக்காவிட்டாலும் இது முரண்பாடுதான். சோசலிசத்தை உருவாக்கும் போக்கில் தொழிலாளரும் உழவரும் உறுதியானதோர் நட்பு அணியை உருவாக்கியுள்ளதோடு, சோசலிசத்திலிருந்து பொதுவுடைமை அமைப்பிற்கு முன்னேறும் பாதையில் இம்முரண்பாட்டிற்குப் படிப்படியாகத் தீர்வு கண்டு வருகின்றனர். எனவே இங்குள்ள பிரச்சனை வெவ்வேறு வகை முரண்பாடுகள் இருப்பதைப் பற்றியதேயன்றி, முரண்பாடு இருக்கிறதா, இல்லையா என்பதைப் பற்றியதன்று. முரண்பாடு எங்கும் நிறைந்ததாகவும், சார்பற்றதாகவும் இருக்கிறது. அது எல்லாவற்றின் வளர்ச்சிக் கட்டத்திலும் இருந்து வருகிறது. ஒவ்வொரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கப் போக்கினூடேயும் தொடக்கம் முதல் இறுதி வரை ஊடுருவி பரவியுமிருக்கிறது.

ஒரு புதிய இயக்கப் போக்கு தோன்றியுள்ளது என்பதற்குப் பொருள் என்ன? ஒன்றினுள் ஒன்று இணைந்துள்ள எதிரும் புதிரு மான கூறுகள் மறைந்து அவ்விடத்தே மற்றுமொரு புதிய தன்மை வாய்ந்த முரண்பாடுகளின் ஒற்றுமை தோன்றுவதுதான் புதுமை. இங்கு பழைய நிகழ்வுகள் முறை முடிவு பெற்று புதிய நிகழ்வுகள் முறை தொடங்குகிறது. புதிய இயக்கப் போக்கு புதிய முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. இது தொடங்கும் சொந்த வரலாறு இதிலுள்ள முரண்பாடுகளின் வளர்ச்சி என்ற வரலாறுதான்.

ஒவ்வொன்றின் வளர்ச்சிப் போக்கிலும் தொடக்கம் முதல் இறுதிவரை ஊடுருவிப் பரவியுள்ள எதிர்மறைகளின் இயக்கத்தை எப்படி பகுப்பாய்வது? இதற்கான எடுத்துக்காட்டை காரல் மார்க்சு தனது 'மூலதனம்' என்ற நூலில் நமக்கு வழங்கியுள்ளார் என்பதை லெனின் சுட்டிக் காட்டுகிறார். எந்த ஒன்றின் வளர்ச்சியை ஆய்வு செய்வதானாலும், கடைபிடிக்க வேண்டிய முறை இதுதான். லெனினும்இம்முறையை சரியாகக் கையாண்டு தமது படைப்புகள் அனைத்திலும் இதைப் பின்பற்றினார்.

லெனின் பின்வருமாறு கூறியுள்ளார்:

*மார்க்சு தமது 'மூலதனம்' என்ற நூலில் எளிய, மிகச் சாதாரண மான, மிக அடிப்படையான, மிகப் பொதுவானதுமான முதலாளிய (வர்த்தக — **Commodity)** சமுதாயத்தின் அன்றாட உறவை, பல்லாயிரம் முறை எதிர்கொள்ளப்படும் உறவை அதாவது பண்டமாற்றை ஆராய்கிறார். முதலாளிய சமுதாயத்தின் 'உயிரணு'வாகிய இந்த எளிமையான நிகழ்ச்சிப் போக்கில், நவீன சமுதாயத்தின் அனைத்து முரண்பாடுகளும் (அல்லது அனைத்து முரண்பாடுகளின் மூல வித்துக்களும்) இருப்பதை இப்பகுப்பாய்வு வெளிப்படுத்துகிறது. அடுத்து வரும் விளக்கம், இச்சமுதாயத்தில் தொடக்கம் முதல் இறுதிவரை இயங்கி வரும் முரண்பாடுகளின் வளர்ச்சி (வளர்ச்சி, இயக்கம் இரண்டும்) இச் சமுதாயத்தின் பல்வேறு விதத்தில் உள்ள முரண்பாடுகளின் முழுச் சேர்க்கையின் விளைவு என்பதை எடுத்துக் காட்டுகிறது.*

**இயங்கியலை விளக்கும் பொதுவான முறை (அல்லது கற்றல்) இப்படித்தான் இருக்க வேண்டும்**[11] என லெனின் மேலும் கூறியுள்ளார்.

சீனப் பொதுவுடைமையாளர்களும் இம்முறையைக் கற்றுக் கொள்ள வேண்டும். இதன் பின்னரே சீனப் புரட்சியின் வரலாற்றையும், அதன் தற்போதைய நிலையையும் சரியாக ஆராயவும் அதன் எதிர்காலத்தை ஊகித்தறியவும் அவர்களால் முடியும்.



## 3. முரண்பாட்டின் குறித்த தன்மை

அனைத்துப் பொருட்களின் வளர்ச்சிப் போக்கிலும் முரண்பாடு இருந்தே வருகிறது. அது ஒவ்வொன்றின் வளர்ச்சிப் போக்கிலும் தொடக்கம் முதல் இறுதிவரை ஊடுருவிப் பரவியுள்ளது. இதுதான் முரண்பாட்டின் எங்கும் நிறைந்த இயல்பும், சார்பற்ற தன்மையும் ஆகும். இதுபற்றியே நாம் இதுவரை விவாதித்தோம். இனி நாம் முரண்பாட்டின் குறிப்பிட்ட தன்மை — முரண்பாட்டின் குறித்த தன்மை — (Particularity) பற்றியும் அதன் சார்புத் தன்மை (Relativity) பற்றியும் விவாதிப்போம்.

இப்பிரச்சனை பல மட்டங்களிலும் ஆராயப்பட வேண்டும்.

முதலாவதாக பருப்பொருளின் இயக்க வடிவம் ஒவ்வொன்றிலும் இருக்கும் முரண்பாடு தனக்கே உரிய குறிப்பிட்ட தனி இயல்பைக் கொண்டதாயுள்ளது. சடப்பொருள் பற்றி மனிதன் அறிந்துள்ளவையெல்லாம், அப்பொருளின் இயக்க வடிவம் பற்றிய அறிவேயாகும். ஏனெனில் இயக்கத்தில் உள்ள பொருள்களைத் தவிர இவ்வுலகில் வேறு ஏதும் இல்லை. இவ்வியக்கம் குறிப்பிட்ட வடிவங்களை எடுத்தே தீர வேண்டும். சடப்பொருளின் இயக்க வடிவம் ஒவ்வொன்றையும் நாம் ஆராயும்பொழுது அதற்கும், வேறு இயக்க வடிவங்களுக்குமிடையே உள்ள ஒத்த அம்சங்கள் என்ன என்பதையும் நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

ஒரு பொருளைப் பற்றிய நமது அறிவின் அடித்தளமாக அமையும் பருப்பொருளின் இந்த இயக்க வடிவத்தில் உள்ள குறிப்பிட்ட தனி இயல்பு என்ன? — குறித்த தன்மை என்ன? — என்பதைக் கவனிப்பதுதான் தனி முக்கியத்துவம் வாய்ந்ததும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒன்றைப் பற்றி நாம் அறிந்து கொள்வதற்கு அடிப்படையாக அமையக் கூடியதுமாகும். அதாவது இந்த இயக்க வடிவத்திற்கும் இதர வடிவங்களுக்குமிடையே உள்ள பண்பு வகை வேறுபாட்டைக் கவனிப்பதேயாகும். இதைச் செய்தால்தான் பொருட்களிடையே உள்ள வேறுபாட்டை நம்மால் காண இயலும்.

ஒவ்வொரு இயக்க வடிவமும் தன்னகத்தே தனக்கே உரிய தனியானதொரு குறிப்பிட்ட முரண்பாட்டைக் கொண்டுள்ளது. இந்த குறிப்பிட்ட முரண்பாடுதான் ஒரு பொருளை வேறு ஒரு பொருளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிற அதன் சாரத்தை உருவாக்குகிறது. இது, உலகிலுள்ள எண்ணிலடங்காப் பல்வகைப் பொருட்களுக்கான அகக்காரணம், அல்லது அடிப்படை எனலாம். எந்திரவகை இயக்கம், ஒலி, ஒளி, வெப்பம், மின்னாற்றல், பிரிகை, (diosociation) சேர்க்கை என்பன போன்று பல இயக்க வடிவங்கள் இயற்கையிலேயே உள்ளன. சடப் பொருளின் இவ்வியக்க வடிவங்கள் எல்லாம் ஒன்றையொன்று சார்ந்து இருப்பன. ஆயினும் அவை தமது சாரத்தில் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டவை. ஒவ்வொரு இயக்க வடிவத்தின் தனித்தன்மை கொண்ட சாரம் அதற்கே உரிய அதன் தனி இயல்புடைய முரண்பாட்டாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. இது இயற்கைக்கு மட்டுமின்றி சமுதாய நிகழ்ச்சிப் போக்குகளுக்கும், சித்தாந்த விஷயங்களுக்கும்கூட பொருந்தக் கூடியதாகும். ஒவ்வொரு சித்தாந்த வடிவமும் அதற்கே உரிய குறித்த முரண்பாட்டையும், தனக்கே உரிய சாரத்தையும் கொண்டுள்ளது.

அறிவியல்கள் எவ்வாறு பாகுபடுத்தப்படுகின்றன? அவை எந்த எந்த அம்சங்களை — கூறுகளைத் தம் ஆய்வுகளுக்கு எடுத்துக் கொள்கின்றனவோ அக்கூறுகளில் இயல்பாய் அமைந்துள்ள முரண்பாடுகளின் அடிப்படையில்தான் அவை பாகுபடுத்தப்படுகின்றன. எனவே, நிகழ்ச்சிப் போக்குகளின் குறிப்பிட்ட ஒரு துறையைச் சார்ந்த தனிப்பட்ட முரண்பாடுதான், குறிப்பிட்ட அறிவியல் பிரிவின் ஆய்வுக்குரிய பொருளாக அமைகிறது. எடுத்துக்காட்டாக, **கணிதத்தில்** — நேர்மறை மற்றும் எதிர்மறை எண்கள்; **எந்திரவியலில்** —வினையும், எதிர் வினையும்; **இயற்பியலில்** — நேர்மின்சாரமும் எதிர்மின்சாரமும்; **வேதியியலில்** — அணுக்களின் சேர்க்கையும், பிரிவும்; **சமூக அறிவியலில்** — உற்பத்தி சக்திகளும் உற்பத்தி உறவுகளும் மற்றும் வர்க்கங்களும் வர்க்கங்களுக்கிடையேயான போராட்டங்களும்; **இராணுவ அறிவியலில்** — தாக்குதலும் தற்காப்பும்; **தத்துவத்தில்** — கருத்துமுதல்வாதமும், பொருள்முதல் வாதமும்; இயங்கியல் நோக்கும், இயங்காவியல் நோக்கும் — இவை போன்று ஒவ்வொரு அறிவியல் பிரிவுக்கும் அதற்கே உரிய ஆய்வுக்கான குறிப்பிட்ட தனி



இயல்புடைய முரண்பாடுகள் உள்ளன. மேற்கூறியவை யாவும் வெவ்வேறான அறிவியல் பிரிவுகளுக்குரிய ஆய்வுப் பொருட்கள் ஆகும். ஏனெனில் ஒவ்வொரு பிரிவும் தனக்கே உரிய குறிப்பிட்ட தனி முரண்பாட்டையும் தனக்கே உரிய குறிப்பிட்ட சாரத்தையும் கொண்டுள்ளது.

முரண்பாட்டின் எங்கும் நிறைந்த தன்மையைப் புரிந்து கொண்டாலொழிய, பொருட்களின் இயக்கத்திற்கோ, வளர்ச்சிக்கோ உரிய பொதுக் காரணத்தையோ, பொது அடிப்படையையோ கண்டறிவதற்கு நமக்கு எந்த வழியும் இருக்காது என்பது உண்மைதான். ஆயினும் முரண்பாட்டின் குறிப்பிட்ட தனி இயல்பை நாம் ஆராயாவிட்டால் ஒரு பொருளை பிற பொருட்களிலிருந்து வேறுபடுத்துகிறதும், அப்பொருளுக்கே உரிய குறிப்பிட்ட தனி இயல்புடைய உட்சாரத்தையும் வரையறுத்துச் சொல்ல நமக்கு வழியேதுமில்லை. ஒரு பொருளின் இயக்கம் அல்லது வளர்ச்சிக்கான குறிப்பிட்ட காரணத்தையோ குறிப்பிட்ட அடிப்படையையோ கண்டுபிடிக்கவும் வழியேதுமில்லை. ஒரு பொருளை வேறொன்றிலிருந்து பிரித்தறியவோ, அறிவியல் துறை ஒவ்வொன்றுக்கும் எல்லை வகுக்கவோ வழியேதுமிராது.

மனித அறிவின் இயக்கத்திலுள்ள ஒழுங்கு முறையை வரிசைப்படுத்தினால், அது எப்போதுமே குறிப்பிட்டவை, தனிப்பட்டவை பற்றிய அறிவாகத் தொடங்குகிறது. பின்னர், படிப்படியாக பொதுவானவை பற்றிய அறிவாக வளர்கிறது. பல்வேறு பொருட்களின் தனி இயல்புடைய ஒவ்வொரு உட்சாரத்தையும் புரிந்து கொண்ட பிறகே மனிதனால், அப்பொருட்களைப் பொதுமைப்படுத்தவும், அவற்றின் பொதுவான உட்சாரத்தை அறியவும் இயலும். பொதுவான இந்த உட்சாரத்தை அறிந்து கொண்ட பிறகு அவன் இவ்வறிவைத் தனது வழிகாட்டியாகப் பயன்படுத்தி இதற்கு முன் ஆராயப்படாத அல்லது முற்றாக ஆராயப்படாத பல்வேறு திட்டவட்டமான பொருட்களை ஆராய்ந்தறிய முயல்கின்றான்; அப்பொருட்கள் ஒவ்வொன்றிலுமுள்ள குறிப்பிட்ட தனி இயல்பைக் கண்டுபிடிக்கவும் முற்படுகிறான். இவ்வாறுதான் மனிதன் பொருட்களின் பொது உட்சாரம் பற்றிய அறிவைப் பெருக்கிக் கொள்ள முடியும். அதோடு அதை நிறைவுபடுத்தி, செழுமைப்படுத்தி வளர்ச்சியடையச் செய்யவும் இயலும்; அது மட்டுமன்று, அத்தகைய அறிவு உலர்ந்து உதிராமலும் கெட்டி தட்டிப் போகாமலும் பாதுகாக்க முடியும்.

அறிவதில் இரு போக்குகள் உள்ளன. **ஒன்று**, குறிப்பிட்ட தனி இயல்பிலிருந்து பொதுவானதைப் பற்றி அறிவது, **மற்றொன்று,**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொதுவானதிலிருந்து குறிப்பிட்ட தனி இயல்பு வாய்ந்ததை அறிந்து கொள்வது. இவ்வாறு அறிவு எப்போதுமே சுழல் வட்டங்களாக (அறிவியல் முறை நெறி பிறழாமல் கடைபிடிக்கப்படும் வரை இயங்குகிறது) ஒவ்வொரு சுழல் வட்டமும் மனித அறிவை மேலும் ஒருபடி உயர்த்தி அதை மேன்மேலும் ஆழமானதாக்குகிறது.

இப்பிரச்சினையில் நமது வறட்டு தத்துவவாதிகள் எங்கே தவறுகிறார்கள் தெரியுமா? ஓர்புறம் முரண்பாட்டின் எங்கும் நிறைந்த இயல்பையும் பொருட்களின் பொது உட்சாரத்தையும் போதிய அளவு அறிந்து கொள்ளும் முன்பாக பொருட்களில் உள்ள முரண்பாட்டின் குறிப்பிட்ட தன்மையையும், தனித்ததொரு பொருளின் அதற்கே உரிய குறிப்பிட்ட தனி இயல்புடைய உட்சாரத்தையும் ஆராய வேண்டும் என்பதை வறட்டு தத்துவவாதிகள் புரிந்து கொள்வதில்லை. மற்றோர்புறம், பொதுவான உட்சாரத்தைப் புரிந்து கொண்ட பிறகு, நாம் தொடர்ந்து சென்று, இதுவரை முற்றாக ஆராய்ந்தறியப்படாத அல்லது இப்போது புதிதாகத் தோன்றியுள்ள பருண்மையான பொருட்களையெல்லாம் ஆராய வேண்டும் என்பதையும் அவர்கள் புரிந்து கொள்வதில்லை. அதனால்தான் அவர்கள் தவறிழைக்கின்றனர்.

நமது வறட்டு தத்துவவாதிகள் முழுச் சோம்பேறிகள். அவர்கள் பருண்மையான விஷயங்களைப் பற்றி ஆராய எவ்வித முயற்சியையும் எடுக்க மறுக்கிறார்கள். பொது உண்மைகள் வெறுமையிலிருந்து (சூன்யத்திலிருந்து) தோன்றுவதாகக் கருதுகிறார்கள். அவர்கள் அவற்றைச் சிறிதும் புலனீடற்ற அருவமான ஆழங்காண முடியாத ஓட்டை வாய்ப்பாடுகளாக ஆக்கி விடுகிறார்கள். இவ்வாறு அவர்கள், உண்மையை அறிய மனிதன் மேற்கொள்கிற இயல்பான ஒழுங்கு முறையை முற்றாக மறுக்கின்றனர். இவ்வொழுங்கு முறையைத் தலைகீழாக்குகின்றனர். அறிதலில் உள்ள இரண்டு போக்குகளான, அதாவது தனிப்பட்டதிலிருந்து பொதுவானதற்கும் பொதுவானதிலிருந்து தனிப்பட்டதற்கும் உள்ள, ஒன்றுக்கொன்றான தொடர்பைப் பற்றியும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் அறிவு பற்றிய மார்க்சியக் கோட்பாடு எதையும் புரிந்து கொள்வதில்லை.

பொருளின் இயக்க வடிவங்களின் பேரமைப்புகளை எடுத்துக் கொள்ளுங்கள். இவை ஒவ்வொன்றிலுமுள்ள குறிப்பான முரண்பாட்டையும், அம்முரண்பாட்டால் நிர்ணயிக்கப்படுகிற உட்சாரத்தையும் பற்றியும் ஆராய வேண்டும். மேலும் பருப்பொருளின் ஒவ்வொரு இயக்க வடிவத்தின் நீண்ட வளர்ச்சிப் பாதையில் இருக்கின்ற, ஒவ்வொரு இயக்கப் போக்கி



லுமுள்ள குறிப்பிட்ட தனி முரண்பாட்டையும், குறிப்பிட்ட உட்சாரத்தையும் ஆராய்வது இன்றியமையாதது ஆகும். ஒவ்வொரு இயக்க வடிவத்திலுமுள்ள ஒவ்வொரு உண்மையான, கற்பனையற்ற வளர்ச்சிப் போக்கும் வேறு வேறு பண்புடையதாகவே உள்ளது. இதனை வலியுறுத்துவதோடு நமது ஆய்வை இங்கிருந்தே தொடங்கவேண்டும்.

பண்பால் வேறுபட்ட முரண்பாடுகளைப் பண்பால் வேறுபட்ட முறைகளாலேயே தீர்க்க வேண்டும். எடுத்துக்காட்டாக, பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளிய வர்க்கத்திற்கும் இடையில் உள்ள முரண்பாடு சோசலிசப் புரட்சி முறையால் தீர்க்கப்பட வேண்டும். பரந்துபட்ட மக்களுக்கும், நிலவுடைமை அமைப்புக்கும் இடையில் உள்ள முரண்பாடு ஜனநாயகப் புரட்சி முறையால் தீர்க்கப்பட வேண்டும். குடியேற்ற நாடுகளுக்கும் (காலனிகளுக்கும்) ஏகாதிபத்தியத்திற்கும் இடையில் உள்ள முரண்பாடு தேசியப் புரட்சி யுத்த முறையால் (National revolutionary war) தீர்க்கப்படவேண்டும். சோசலிச சமுதாயத்தில் தொழிலாளி வர்க்கத்திற்கும் விவசாயி வர்க்கத்திற்கும் இடையே உள்ள முரண்பாடு விவசாயத்தைக் கூட்டுறவுமயமாக்கி, அதை எந்திரமயமாக்கும் முறையால் தீர்க்கப்படவேண்டும். பொதுவுடைமைக் கட்சிக்குள் நிலவும் முரண்பாடு விமர்சனம், சுயவிமர்சனம் என்ற முறையில் தீர்க்கப்படவேண்டும். சமுதாயத்திற்கும் இயற்கைக்கும் இடையில் உள்ள முரண்பாடு உற்பத்தி சக்திகளை வளர்ச்சியுறச் செய்யும் முறையால் தீர்க்கப்படவேண்டும்.

இயக்கப் போக்குகள் மாறுகின்றன. பழைய இயக்கப் போக்குகளும், பழைய முரண்பாடுகளும் மறைகின்றன. புதிய இயக்கப் போக்குகளும், புதிய முரண்பாடுகளும் தோன்றுகின்றன. இவற்றுக்கேற்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் முறைகளும் மாறுபடுகின்றன. ரஷ்யாவில் பிப்ரவரிப் புரட்சியால் தீர்க்கப்பட்ட முரண்பாடுகள், அக்டோபர் புரட்சியால் தீர்க்கப்பட்ட முரண்பாடுகள் ஆகியவற்றுக்கு இடையிலும் இவற்றைத் தீர்ப்பதற்கு பயன்படுத்தப்பட்ட முறைகளுக்கு இடையிலும் அடிப்படையான வேறுபாடு ஒன்று இருந்தது. வேறுபட்ட முரண்பாடுகளைத் தீர்க்க, வேறுபட்ட முறைகளைப் பயன்படுத்தும் கோட்பாடு, மார்க்சிய - லெனினியர்கள் கட்டாயம் கடைபிடிக்க வேண்டிய ஒன்றாகும். நமது வறட்டுத் தத்துவவாதிகள் இக்கோட்பாட்டைக் கடைபிடிப்பதில்லை. வெவ்வேறு வகையான புரட்சியில் அதனதன் நிலைமைகள் வேறுபடுகின்றன என்பதையும் அவர்கள் புரிந்து கொள்வதில்லை. எனவே வேறுபட்ட முரண்பாடுகளைத் தீர்க்க வேறுபட்ட வழிமுறைகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதற்கு மாறாக தாங்கள் கற்பனை செய்துக் கொண்ட மாற்ற முடியாத வாய்ப்பாடு ஒன்றை எப்போதும் எல்லா இடங்களிலும் தங்கள் மனம் போனபடி எதிலும் கையாளுகின்றனர். இது புரட்சிக்குப் பின்னடைவுகளை உருவாக்குகின்றன, அல்லது சிறப்பாகச் செய்யக் கூடியவைகளை முற்றாகக் குழப்பி விடுகின்றன.

ஒரு பொருளின் வளர்ச்சியில் இருக்கும் எந்த ஒரு இயக்கப் போக்கிலும் உள்ள முரண்பாடுகளின் குறிப்பான இயல்பை, அந்த முரண்பாடுகளின் முழுமையிலோ, அல்லது அவற்றின் ஒன்றுக்கொன்றான தொடர்பிலோ வெளிப்படுத்துவதற்கு எது அவசியம்? அதாவது அந்த இயக்கப் போக்கின் உட்சாரத்தை — சாராம்சத்தை — வெளிப்படுத்துவதற்கு இன்றியமையாதது எது? அது இந்த இயக்கப் போக்கில் உள்ள முரண்பாடுகள் ஒவ்வொன்றிலும் எதிரும் புதிருமாக உள்ள இரு கூறுகளின் குறிப்பான இயல்பை வெளிப்படுத்துவதுதான். இதைச் செய்யாவிட்டால் இந்த இயக்கப் போக்கின் உட்சாரத்தைக் கண்டறிவது இயலவே இயலாது. அதுபோலவே நமது ஆய்வில் மிகக் கூடுதலான கவனம் இதிலும் செலுத்த வேண்டும்.

பெரும் நிகழ்ச்சிப் போக்குகள் எதை எடுத்துக் கொண்டாலும் அதன் வளர்ச்சிப் பாதையில் பல முரண்பாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக சிக்கலான சூழல்களைக் கொண்ட சீன முதலாளிய ஜனநாயகப் புரட்சியின் பாதையைப் பார்ப்போம். சீன சமுதாயத்தில் உள்ள அனைத்து ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுக்கும், ஏகாதிபத்தியங்களுக்குமிடையில் உள்ள முரண்பாடு; மிகப் பரந்துபட்ட மக்கள் திரளுக்கும், நிலவுடைமை அமைப்புக்கும் உள்ள முரண்பாடு; பாட்டாளி வர்க்கத்திற்கும், முதலாளிய வர்க்கத்திற்குமிடையில் உள்ள முரண்பாடு; ஓர் புறமுள்ள விவசாயிகள், நகர சிறு முதலாளிய வர்க்கம் ஆகியவற்றிற்கும், மற்றோரு புறமுள்ள முதலாளிய வர்க்கத்திற்கும் இடையே உள்ள முரண்பாடு; பல்வேறு பிற்போக்கு ஆளும் குழுக்களுக்கிடையே உள்ள முரண்பாடு - எனப் பல்வேறு வகையான முரண்பாடுகள் உள்ளன.

இம் முரண்பாடுகள் ஒவ்வொன்றும் தனக்கே உரிய தனிப்பட்ட குறிப்பான தன்மையைக் கொண்டிருப்பதால் இம்முரண்பாடுகளை ஒரே மாதிரியாகக் கையாள முடியாது. மேலும் ஒவ்வொரு முரண்பாட்டிலும் உள்ள இரு கூறுகளையும் ஒரே சீராகக் கையாள முடியாது. ஏனெனில் முரண்பாட்டில் உள்ள ஒவ்வொரு கூறும் அதற்கே உரிய குறிப்பான பண்புகளைக் கொண்டுள்ளது. சீனப் புரட்சியில் ஈடுபட்டுள்ள நாம், முரண்பாடுகளின் முழுமையில் அதாவது அவற்றிற்கிடையே உள்ள ஒன்றுக்கொன்றான தொடர்பில், இம்முரண்பாடுகளின் குறிப்



பான தன்மையை மட்டுமல்லாது, ஒவ்வொரு முரண்பாட்டிலுமுள்ள இரு கூறுகளையும் ஆழ்ந்து பயில வேண்டும். முழுமையைப் புரிந்து கொள்வதற்கான வழிமுறை இதுதான். ஒரு முரண்பாட்டில் உள்ள ஒவ்வொரு கூறையும் புரிந்து கொள்ளுதல் என்பதன் பொருள் என்ன? இதன் பொருள் கீழ்க்கண்டவற்றைப் புரிந்து கொள்ளுதல்தான்:-

ஒவ்வொரு கூறும் மேற்கொள்ளும் குறிப்பிட்ட தனி நிலை யாது? தனது எதிர்மறையுடன் சம்பந்தப்பட்டிருக்கும் தொடர்பிலும், முரண்பட்டும் இருக்கும்போது அது மேற்கொள்ளும் பருண்மையான, வடிவங்கள் யாவை? இவ்விரு கூறுகளும் ஒன்றை ஒன்று சார்ந்தும், அதே வேளையில் முரண்பட்டும் இருக்கும் போதும், இச்சார்பு தகர்ந்த பின்னரும்கூட ஒரு கூறு தனது எதிர்மறையுடன் மேற்கொள்ளும் போராட்டத்தில் கடைபிடிக்கும் பருண்மையான வழிமுறைகள் என்ன? இந்தப் பிரச்சனைகளைப் பற்றியும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இப்பிரச்சனைகளை ஆழ்ந்து கற்பது முதன்மையானது ஆகும். **மார்க்சியத்தில் மிக அடிப்படையானதும் அதன் உயிர் நிலை என்பதும் பருண்மையான நிலைமைகளைப் பற்றிய பருண்மையான ஆய்வே**[12] என லெனின் கூறியபோது மேற்காணும் கருத்தையே அவர் மனதில் கொண்டிருந்தார்.

நமது வறட்டு தத்துவவாதிகள் லெனின் புகட்டிய கல்வியை மீறி விட்டார்கள். எதையும் பருண்மையாக ஆராய்வதற்கு, அவர்கள் தமது சொந்த மூளையைப் பயன்படுத்துவதில்லை. தமது எழுத்திலும் பேச்சிலும் உள்ளடக்கம் ஏதுமற்ற, அலுப்பூட்டும் பழைய முறைகளையே எப்போதும் பின்பற்றுகிறார்கள். இது நமது கட்சியில் மிகக் கேடு பயக்கும் வேலை முறையைத் தோற்றுவிக்கிறது.

ஒரு பிரச்சனையை ஆராயும் பொழுது, அக நிலைப் போக்கு, ஒருதலைப்பட்ச போக்கு, மேலோட்டமான போக்கு ஆகியவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

**அகநிலைப் போக்கு** என்பது, பிரச்சனைகளைப் புற நிலையில் பார்க்கத் தவறுவது ஆகும். அதாவது, பிரச்சனைகளைப் பார்க்கும் போது பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தில் பார்க்கத் தவறுவது ஆகும். ''நடைமுறை பற்றி'' என்ற கட்டுரையில் நான் இதை விளக்கியுள்ளேன்.

**ஒருதலைப் பட்சப் போக்கு** என்பது, பிரச்சனைகளை முழுமையாகப் பார்க்கத் தவறுவதாகும். எடுத்துக்காட்டாக, ஜப்பானைப் புரிந்து கொள்ளாமல், சீனாவை மட்டும் புரிந்து கொள்வது;



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோமிங்டாங்கைப் புரிந்து கொள்ளாமல் சீனப் பொதுவுடைமைக் கட்சியை மட்டும் புரிந்து கொள்வது; முதலாளிய வர்க்கத்தைப் புரிந்து கொள்ளாமல் பாட்டாளி வர்க்கத்தை மட்டும் புரிந்து கொள்வது; பெருநில உடைமையாளர்களைப் புரிந்து கொள்ளாமல் விவசாயிகளை மட்டும் புரிந்து கொள்வது; எதிர்காலத்தைப் புரிந்து கொள்ளாமல், கடந்த காலத்தை மட்டும் புரிந்து கொள்வது; முழுமையைப் புரிந்து கொள்ளாமல், தனிப் பகுதியை மட்டும் புரிந்து கொள்வது; சாதனைகளைப் புரிந்து கொள்ளாமல், குறைபாடுகளை மட்டும் புரிந்து கொள்வது; எதிர் வழக்காடுபவரைப் (பிரதிவாதியை) புரிந்து கொள்ளாமல், வழக்காடுபவரை (வாதியை) மட்டும் புரிந்து கொள்வது; வெளிப்படையான புரட்சிப் பணியைப் புரிந்து கொள்ளாமல், இரகசிய (மறைமுக) புரட்சிப் பணியை மட்டும் புரிந்து கொள்வது - முதலியன ஒருதலைப் பட்சமான போக்காகும். சுருங்கக் கூறினால் ஒரு முரண்பாட்டின் ஒவ்வொரு கூறுக்குமுரிய பண்பைப் புரிந்து கொள்ளத் தவறுவதாகும். இதுவே ஒருதலைப்பட்சமாகப் பிரச்சனைகளைப் பார்ப்பது என்பதாகும். *முழுமையைப் பார்க்காமல், பகுதியை மட்டும் பார்ப்பது; காட்டைப் பாராமல் மரங்களை மட்டும் பார்ப்பது என்றும் இதைக் கூறலாம்.*

இம்முறையின் மூலம் முரண்பாட்டைத் தீர்ப்பதற்குரிய வழிமுறையைக் காண்பது இயலாது. புரட்சியின் கடமைகளை நிறைவேற்றுவதோ, ஒப்படைக்கப்பட்ட பணிகளைச் செம்மையாகச் செய்வதோ அல்லது உட்கட்சிச் சித்தாந்தப் போராட்டத்தைச் சரிவர வளர்ப்பதோ சாத்தியமாகாது.

**பகைவனை அறிந்து கொள். உன்னைப் பற்றியும் அறிந்து கொள். தோல்வியைப் பற்றி கவலையே இன்றி நூறு போர்களை நடத்த முடியும்** எனப் போர்க்கலையைப் பற்றி விளக்குகையில் ஸுன்-வு-ஸு கூறினார். இங்கு அவர் போர்க்களத்தின் இரு தரப்புகளையும் குறிப்பிடுகிறார். டாங் வம்சத்தைச் சேர்ந்த **வெய் செங்**[13] என்பவரும் ஒரு தலைப்பட்ச போக்கு தவறானது என்பதை உணர்ந்திருந்தார் என்பதைக் கீழ்காணும் அவரது கூற்று விளக்குகிறது: **இருதரப்புக்கும் செவி கொடு, அப்போது நீ தெளிவு பெறுவாய்; ஒரு தரப்புக்கு மட்டும் செவி கொடு, அப்போது நீ இருளில் தடுமாறுவாய்** என்றார். ஆனால் நமது தோழர்கள் அடிக்கடி பிரச்சனைகளை ஒரு தலைப்பட்ச நோக்கில் பார்ப்பதால் இடையூறுகளுக்கு ஆட்படுகிறார்கள்.

**ஷுய்-ஹு-சுவான்**[14] என்ற நாவலில் **ஸுங்-சியாங்** என்ற ஒரு கதைப் பாத்திரம். இவர் 'சூ' கிராமத்தின் மீது மும்முறை தாக்குதல் தொடுத்தார். அக்கிராமத்தின் உள்நிலைமைகளைப் பற்றித்



தெளிவான அறிவு இல்லாததாலும் தவறான முறைகளைக் கையாண்டதாலும் அவர் இருமுறை தோல்வியைத் தழுவினார். பிறகு அவர் தமது முறைகளை மாற்றிக் கொண்டார். முதலில் அவர் நிலைமைகளை ஆராயத் தொடங்கினார். ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கும் சாலைகளைப் பற்றி அறிந்து கொண்டார். லீ, ஹு, ஸு என்ற கிராமங்களின் இணைப்பைத் துண்டித்தார். வெளிநாட்டுக் கதை ஒன்றில் வரும் 'ட்ரோஜன்' குதிரையைப் போன்றதொரு தந்திரத்தைப் பயன்படுத்தி தனது போர் வீரர்களுக்கு மாறுவேடமிட்டு அவர்களை பகைவர் முகாமிற்குள் மறைமுகமாக கொண்டு போய் காத்திருக்க வைத்தார். மூன்றாம் முறைத் தாக்குதலில் வெற்றி பெற்றார். ''ஷுய்-ஹு-சுவான்'' கதை, பொருள் முதல்வாத இயங்கியலுக்கு பல எடுத்துக்காட்டுகளை வழங்குகிறது. அவற்றுள் 'சூ' கிராமத்தின் மீது நடைபெற்ற மூன்று தாக்குதல்கள் பற்றிய கிளைக்கதை மிகச் சிறந்ததாகும். நாம் லெனினது பின்வரும் சொற்களை நினைவில் கொள்ள வேண்டும்.

> *''ஒரு பொருளை உண்மையாக அறிய வேண்டுமானால், நாம் அப் பொருள்களின் அனைத்துப் பகுதியையும், எல்லாத் தொடர்புகளையும், 'இடைத் தொடர்பு' களையும் தழுவிய வகையில் ஆராய வேண்டும். இதை நாம் ஒருபோதும் முழுமையாக சாதிக்க இயலாது. ஆனால் எல்லா பகுதிகளையும் ஆராய வேண்டும் என்ற கோரிக்கை, தவறுகளுக்கு எதிரான, வளைந்து கொடுக்காத இறுகிய தன்மைக்கு எதிரான பாதுகாப்பு வழங்குகிறது.''*[15]

முரண்பாட்டின் முழுமையான பண்புகளையோ, அல்லது முரண்பாட்டின் ஒவ்வொரு கூறுக்குமுரிய பண்புகளையோ ஆராயத் தவறுவது **மேலோட்டமான போக்கு** எனப்படும். ஒரு பொருளை ஆழமாகத் துருவிப் பார்த்து அதிலுள்ள முரண்பாட்டின் பண்புகளை நுணுக்கமாக ஆராயும் தேவையை மறுப்பதும், இதற்கு மாறாக அதைத் தொலைவிலிருந்து நோக்கி, முரண்பாட்டின் மேலோட்டமான தோற்றத்தை மட்டும் ஓரளவு பார்த்துவிட்டு, அதற்கு உடனடியாகத் தீர்வு காண (கேள்விக்கு விடை பெற, தகராறு ஒன்றைத் தீர்க்க, ஒரு பணியைக் கையாள, போர் நடவடிக்கைகளுக்கு வழிகாட்ட) முயல்வதும் ஆகும். இவ்வகைச் செயல்முறைகள் தொல்லைகளுக்கே வழி வகுக்கும். சீனத்தில் இந்த வறட்டுத் தத்துவவாதத் தோழர்களும் அனுபவவாதத் தோழர்களும் தவறுகளைச் செய்யக் காரணம் அவர்கள் அகநிலை நோக்குடன் இருப்பதும், ஒருதலைப் பட்சமாகவும், மேலோட்டமாகவும் பிரச்சனைகளைப் பார்ப்பதுமேயாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருதலைப்பட்ச போக்குடனும், மேலோட்டப் போக்குடனும் இருப்பதற்குரியக் காரணம் அதேசமயம் அவர்கள் அகநிலை நோக்குடன் இருப்பதே ஆகும்.

புறநிலையில் உள்ளவை அனைத்தும், உண்மையில் ஒன்றுக் கொன்று தொடர்புடையவை; அக விதிகளின் நியதிக்குட்பட்டவை. ஆனால் ஒரு சிலரோ, பொருட்கள் உண்மையில் எவ்வாறு உள்ளனவோ அவ்வாறே அவற்றைச் சிந்தனைக்கு உட்படுத்தும் கடமையைச் செய்வதற்குப் பதிலாக, அவற்றை ஒருதலைப்பட்சமாகவும், மேலோட்டமாகவும் மட்டும் பார்க்கிறார்கள். அவை ஒன்றுக்கொன்று கொண்டுள்ள தொடர்புகளையோ, அவற்றின் அக விதிகளையோ அறியாதிருக்கின்றனர். எனவே அவர்களுடைய வழிமுறை அகநிலைப் போக்காக உள்ளது.

ஒரு பொருளின் வளர்ச்சியிலுள்ள எதிர்மறைகளினுடைய இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கு முழுவதும் சிறப்புத் தன்மைகளைக் கொண்டிருக்கிறது. இச்சிறப்புத் தன்மை, அவை ஒன்றுக் கொன்று கொண்டுள்ள தொடர்பிலும், அவற்றின் ஒவ்வொரு கூறிலும் காணப்படுகிறது. அதோடு அவ்வளர்ச்சிப் போக்கிலுள்ள ஒவ்வொரு கட்டமும் அக் கட்டத்திற்கே உரிய சிறப்புத் தன்மைகளைக் கொண்டுள்ளது. இவற்றிலும் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

ஒரு பொருளின் வளர்ச்சிப் போக்கிலுள்ள அடிப்படை முரண்பாடும், இந்த அடிப்படை முரண்பாட்டால் நிர்ணயிக்கப்பட்ட உட்சாரமும், இவ்வளர்ச்சிப் போக்கு முற்றுப் பெறும் வரை மறையாது; ஆனால் ஒரு நீண்ட வளர்ச்சிப் பாதையில் உள்ள ஒவ்வொரு கட்டத்திலும் அதனதன் நிலைமைகள் வேறுபடும். ஏனெனில், ஒன்றின் வளர்ச்சிப் போக்கில் அடிப்படை முரண்பாட்டின் (Fundamental Contradiction) தன்மையும், இந்த அடிப்படை முரண்பாட்டால் நிர்ணயிக்கப்பட்ட உட்சாரமும், இந்த போக்கு முற்றுபெறும் வரை மறையாது. ஆனால் ஒரு நீண்ட வளர்ச்சிப் பாதையில் உள்ள ஒவ்வாரு கட்டத்திலும் நிலைமைகள் வேறுபடுவது இயல்பு. ஏனெனில் ஒன்றின் வளர்ச்சிப் போக்கிலுள்ள அடிப்படை முரண்பாட்டின் தன்மையும், வளர்ச்சிப் போக்கின் உட்சாரத்தின் தன்மையும் மாறாமல் இருந்த போதிலும், இந்நீண்ட போக்கில் ஒரு கட்டத்திலிருந்து அடுத்தக் கட்டத்திற்குச் செல்லும்போது அடிப்படை முரண்பாடானது மேன்மேலும் கடுமையானதாகிறது. கூடவே, அடிப்படை முரண்பாட்டால் நிர்ணயிக்கப்படுகிற அல்லது அதன் தாக்கம் பெறுகிற பல்வேறு பெரிய அல்லது சிறிய முரண்பாடுகளில் சில கடுமையாகின்றன. சில தற்காலிகமாகவோ, அல்லது அரைகுறையாகவோ



தீர்வு பெறுகின்றன; அல்லது அவற்றின் கடுமை தணிக்கப் பெறுகின்றன. அத்துடன் சில புதிய முரண்பாடுகளும் தோன்றுகின்றன. இதனால்தான் இந்த போக்குகள் பல கட்டங்களாக வடிவம் பெறுகின்றன. ஒரு பொருளின் வளர்ச்சிப் போக்கில் உள்ள பல கட்டங்களில் கவனம் செலுத்த முடியாதவர்களால் அம்முரண்பாடுகளைச் சரியாக கையாள முடியாது.

எடுத்துக்காட்டாக முதலாளிய காலகட்ட சமூகத்தை எடுத்துக் கொள்வோம். இக்கட்டத்தில் பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளிய வர்க்கத்திற்கும் இடையில் உள்ள முரண்பாடுதான் அடிப்படையான முரண்பாடு. இந்த முரண்பாடுதான் ஒரு சமுதாயம் முதலாளிய சமூகம் என்றாகிய உட்சாரத்தை நிர்ணயிக்கிறது. சுதந்திரப் போட்டியை வளர்த்த காலத்திலிருந்தே முதலாளியச் சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடாக இருந்து வருவதும் இந்த முரண்பாடுதான். இதே முதலாளியம் ஏகாதிபத்தியமாக வளர்ச்சி பெற்ற போதும் இவ்வடிப்படை முரண்பாட்டில் இருந்த இவ்விரு வர்க்கங்களின் வர்க்கத் தன்மையில் மாறுதல் ஏதும் ஏற்படவில்லை. முதலாளிய சமுதாயம் என்ற உட்சாரத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. ஆயினும் இவ்விரு வர்க்கங்களுக்கிடையேயான முரண்பாடுகள் தீவிரமடைந்தன. ஏகபோக மூலதனத்திற்கும், ஏகபோகமல்லாத மூலதனத்துக்குமிடையே முரண்பாடு தோன்றியது.

குடியேற்ற நாடுகளை (காலனி) ஆள்வோருக்கும், குடியேற்ற நாடுகளுக்குமிடையே உள்ள முரண்பாடு கடுமையாகியது. ஏற்றத் தாழ்வான வளர்ச்சியின் காரணமாக, முதலாளித்துவ நாடுகளுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடு குறிப்பிடத்தக்கக் கூர்மையுடன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது. இவ்விதமாக, முதலாளியத்தின் சிறப்புமிகு கட்டமான ஏகாதிபத்திய கட்டம் தோன்றியது. லெனினியம் என்பது ஏகாதிபத்தியக் கால கட்டத்தின், பாட்டாளி வர்க்கப் புரட்சிக் காலத்தின் மார்க்சிய மாகியது. லெனினும், ஸ்டாலினும் இம்முரண்பாடுகளைச் சரியாக விளக்கி, இவற்றைத் தீர்ப்பதற்கான பாட்டாளி வர்க்கக் கோட்பாடுகளையும், போர்த் தந்திரங்களையும் சரியாக வகுத்ததுதான் அதற்கானக் காரணமாகும்.

சீனத்தின் முதலாளிய ஜனநாயகப் புரட்சியை எடுத்து கொள்ளுங்கள். 1911-ன் புரட்சிதான் இதன் தொடக்கம். இந்த முதலாளிய ஜனநாயகப் புரட்சியில் குறிப்பிட்டு வேறுபடுத்திக் காட்டக் கூடிய பல கட்டங்களைக் காணலாம். குறிப்பாக முதலாளிய வர்க்கத் தலைமை இருந்த காலகட்ட புரட்சியையும், பாட்டாளி வர்க்கத் தலைமை உள்ள காலகட்டப் புரட்சியையும் எடுத்துக் கொள்வோம். இவை ஒன்றுக்கொன்று மிகவும் மாறுபட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரலாற்றுக் கட்டங்களை எடுத்துக் காட்டுகின்றன. வேறு வகையாக இவைகளைப் பார்த்தால், பாட்டாளி வர்க்கத் தலைமையானது புரட்சியின் முழுத் தோற்றத்தை அடிப்படையிலேயே மாற்றியுள்ளது. புதிய வர்க்க உறவுமுறை ஒன்றை அமைத்துள்ளது; விவசாயப் புரட்சியில் மாபெரும் பேரெழுச்சியொன்றைத் தோற்றுவித்துள்ளது. ஏகாதிபத்தியத்திற்கும் நிலவுடைமைக்கும் எதிரான புரட்சிக்கு, நிறைவான தன்மையை வழங்கியுள்ளது; ஜனநாயகப் புரட்சியிலிருந்து சோசலிசப் புரட்சிக்கு மாறும் சாத்தியப்பாட்டை உருவாக்கியுள்ளது. இப்படி பல.

முதலாளிய வர்க்கம் புரட்சிக்குத் தலைமை தாங்கிய கால கட்டத்தில் மேற்கண்டவற்றுள் எதுவுமே சாத்தியமடையவில்லை. இவ்வளர்ச்சிப் போக்கு முழுவதிலும் அடிப்படை முரண்பாட்டின் தன்மையில், அதாவது ஏகாதிபத்திய நிலவுடைமைத்துவ எதிர்ப்புத் தன்மை கொண்ட ஜனநாயகப் புரட்சியின் தன்மையில் (இதன் எதிர்மறை — அரைக் குடியேற்ற, அரை நிலவுடைமைத் தன்மை) எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஆயினும் கடந்த இருபதுக்கும் மேலான ஆண்டுக் காலத்தில் இந்தப் போக்கு பல வளர்ச்சிக் கட்டங்களினூடே சென்றுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் மாபெரும் நிகழ்ச்சிகள் பல நடந்துள்ளன. அவை:

*1911*-ஆம் ஆண்டுப் புரட்சியின் தோல்வி; வட மாநில யுத்தப் பிரபுக்களின் ஆட்சி நிறுவப்படுதல்; முதலாவது தேசிய ஐக்கிய முன்னணியின் தோற்றம்; *1924-27* ஆம் ஆண்டுகளின்[16] புரட்சி; ஐக்கிய முன்னணி உடைதல்; முதலாளிய வர்க்கம் எதிர் புரட்சி முகாமிற்கு ஓடுதல்; புதிய யுத்தப் பிரபுக்களிடையே போர்; உழவர்களின் புரட்சிப் போர்; இரண்டாவது ஐக்கிய முன்னணி நிறுவப்படுதல்; ஜப்பானிய எதிர்ப்புப் போர் ஆகியவைகளாகும்.

இந்தக் கட்டங்களில் கீழ்க்காணும் தனிச்சிறப்பு வாய்ந்த கூறுகளைக் காணலாம்:

1. *சில முரண்பாடுகள் தீவிரமாயின.*

   (எடுத்துக்காட்டாக, விவசாயிகளின் புரட்சிகரப் போரும்;+ நான்கு வடகிழக்கு மாநிலங்கள் மீது நடந்த ஜப்பானிய ஆக்கிரமிப்பும்)[17]

2. *சில முரண்பாடுகள் தற்காலிகமாகவோ அல்லது ஓரளவிற்கோ தீர்வு பெற்றன.*

   (எடுத்துக்காட்டாக, வடமாநில யுத்த பிரபுக்கள் அழித்தொழிக்கப்பட்டனர்; நில உடமையாளர்களின் நிலம் நம்மால் பறித்தெடுக்கப்பட்டது)



3. *வேறு சில முரண்பாடுகளின் தோற்றம்.*

   (எடுத்துக்காட்டாக, புதிய யுத்தப் பிரபுக்களிடையே மோதல்கள் ஏற்பட்டன; தென்மாநிலங்களில் நாம் புரட்சி தளப் பகுதிகளை இழந்த பின்னர், நிலஉடைமையாளர்கள் நிலங்களைத் திரும்பக் கைப்பற்றிக் கொண்டார்கள்)

ஒரு பொருளின் வளர்ச்சிப் போக்கிலுள்ள ஒவ்வொரு கட்டத்தையும் நாம் எடுத்துக் கொள்வோம். இந்த ஒவ்வொரு கட்டத்திலுமுள்ள முரண்பாடுகளின் குறித்த தன்மைகளைப் பற்றி நாம் ஆராயும்பொழுது, நாம் அவற்றை, அவை ஒன்றோடொன்றான தொடர்புகளிலோ அல்லது அவற்றின் முழுமையின் சேர்க்கையிலோ மட்டும் பார்க்கக் கூடாது. ஒவ்வொரு கட்டத்திலுமுள்ள இருகூறுகளையும் நாம் பார்க்க வேண்டும்.

உதாரணமாக, ‘கோமிங்டாங்’ கட்சியையும், பொதுவுடைமைக் கட்சியையும் எடுத்துக் கொள்வோம். இவற்றில் ஒரு கூறான கோமிங்டாங் கட்சியைப் பார்ப்போம்.

1. முதலாவது ஐக்கிய முன்னணி காலத்தில் கோமிங்டாங், **சன்யாட் சென்**னின் முப்பெரும் கொள்கைகளான — ரஷ்யாவுடன் ஒற்றுமையைப் பேணுதல்; பொதுவுடைமைக் கட்சியுடன் ஒற்றுமை பேணுதல்; விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு உதவி செய்தல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தியது. அப்போது கோமிங்டாங் புரட்சிகரமானதாகவும் உயிர்த் துடிப்புள்ளதாகவும் (Vigorous) விளங்கியது. பல்வேறு வர்க்கங்களுடைய ஜனநாயகப் புரட்சிக்கான நட்பு அணியாய் அது விளங்கியது.

2. இருப்பினும் *1927*-ஆம் ஆண்டுக்குப் பின்னர், கோமிங்டாங் நேர் எதிர்மாறானதாகியது. நிலவுடைமையாளர்கள், பெருமுதலாளிகள் ஆகியோருக்கான பிற்போக்குக் கும்பலாகியது.

3. *1936*-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஏற்பட்ட ‘சியான்’[18] (Sian) நிகழ்ச்சிக்குப் பிறகு உள்நாட்டுப் போரை நிறுத்தி வைத்த ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஒன்றிணைந்த கூட்டு எதிர்ப்புக்காக பொதுவுடைமைக் கட்சியுடன் ஒத்துழைக்கும் திசையில் அது மற்றொரு மாற்றம் பெறத் தொடங்கியது.

மேற்கூறிய மூன்று கட்டங்களிலும் கோமிங்டாங் கட்சியிலிருந்த குறிப்பிட்ட தனி இயல்புகள் இவைதான். இந்த குறிப்பிட்ட தனி




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயல்புகள் தோன்ற பலவகைக் காரணங்கள் இருந்தன என்பதே உண்மை.

இனி மற்றொரு கூறான சீனப் பொதுவுடைமைக் கட்சியை எடுத்துக் கொள்வோம்.

1. முதலாவது ஐக்கிய முன்னணிக் காலத்தில் சீனப் பொதுவுடைமைக் கட்சி தனது குழந்தைப் பருவத்தில் இருந்தது. அது 1924-27-ஆம் ஆண்டுகளின் புரட்சிக்கு, துணிவுடனும் வீரத்துடனும் தலைமை தாங்கியது. ஆனால் புரட்சியின் தன்மை, கடமைகள், வழி முறைகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்வதில் தனக்கு இருந்த பக்குவமின்மையை இக்கட்சி வெளிப்படுத்தியது. அதன் காரணமாக புரட்சியின் பிற்பகுதியில் தோன்றிய ''சென்-து-சியூ''வின் கொள்கை[19] மேலோங்கி புரட்சிக்குத் தோல்வியைக் கொண்டு வந்தது.
2. 1927-ஆம் ஆண்டுக்குப் பின்னர் பொதுவுடைமைக் கட்சி நிலப்புரட்சி யுத்தத்திற்குத் துணிவுடன் தலைமை தாங்கியது, புரட்சிகரப் படையையும், புரட்சிகரத் தளப் பகுதிகளையும் உருவாக்கியது. இருப்பினும் படை, தளப் பகுதிகள் இரண்டுக்குமே மிகப் பெரும் இழப்புகளை உருவாக்கிய 'துணிச்சல் வாதத்' தவறுகளைச் செய்தது. 1935 முதல் நம் கட்சி இத் தவறுகளைத் திருத்தியுள்ளதோடு, ஜப்பானிய எதிர்ப்புக்கான புதிய ஐக்கிய முன்னணிக்குத் தலைமை தாங்கியும் வருகிறது. இம்மாபெரும் போராட்டம் இப்போது வளர்ச்சி பெற்று வருகிறது.
3. இப்போதைய கட்டத்தில் பொதுவுடைமைக் கட்சி, இரண்டு புரட்சிகளினூடேயும் புடம் போட்டு எடுக்கப்பட்ட செழிப்பான அனுபவம் பெற்ற ஒரு கட்சியாகியுள்ளது.

இவைதான், மூன்று கட்டங்களிலும் சீனப் பொதுவுடைமைக் கட்சிக்குள்ள குறிப்பிட்ட தனி இயல்புகள் ஆகும். இந்தக் குறிப்பிட்ட தனி இயல்புகள் தோன்றுவதற்கும் பல்வேறு காரணங்கள் இருந்தன.

ஒவ்வொரு கூறுகளிலுமுள்ள இக்குறிப்பிட்ட தனி இயல்புகளை ஆராயாவிட்டால், இரு கட்சிகளுடைய வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களிலும் இவற்றுக்கிடையே இருந்த உறவுகளை — அதாவது ஐக்கிய முன்னணியின் தோற்றம் என்ற உறவு, அது சீர்குலைந்த போது இருந்த உறவு, மற்றோர் ஐக்கிய முன்னணியின் உருவாக்கம் என்ற உறவு — ஆகியவற்றை நம்



மால் புரிந்துகொள்ள முடியாது. ஒவ்வொரு கட்சிக்குமுள்ள சிறப்புக் கூறுகள் பற்றிய ஆய்வுக்கு மிகவும் அடிப்படையாக இருப்பது எது? இரண்டு கட்சிகளுடைய வர்க்க அடிப்படை பற்றிய ஆய்வும், ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொரு கட்சிக்கும் மற்றும் பிற சக்திகளுக்குமிடையே இந்த வர்க்க அடிப்படையின் காரணமாகத் தோன்றிய முரண்பாடு பற்றிய ஆராய்வுமேயாகும்.

எடுத்துக்காட்டாக, பொதுவுடைமைக் கட்சியுடன் முதன் முறையாக இணக்கமான கூட்டுறவு கொண்டிருந்த காலத்தில் கோமிங்டாங் கட்சியானது வெளிநாட்டு ஏகாதிபத்தியங்களுடன் முரண்பட்டு இருந்தது. எனவே அது ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை வாய்ந்ததாக இருந்தது. மற்றோர் புறமோ, அது நாட்டிலுள்ள பெருந்திரளான மக்களுடன் முரண்பட்டிருந்தது — சொல்லளவில் உழைக்கும் மக்களுக்குப் பல நன்மைகள் செய்வதாக வாக்குறுதி தந்தது. இருப்பினும் அது செய்தது மிகவும் அற்பமானது; அல்லது ஒன்றும் செய்யவில்லை என்றே கூறலாம்.

பொதுவுடைமை எதிர்ப்பு போராட்டத்தைக் கோமிங்டாங் நடத்திய காலத்தில், அது பரந்துபட்ட மக்களுக்கு எதிராக ஏகாதிபத்தியம் மற்றும் நிலவுடைமை சக்திகளுடன் ஒத்துழைத்தது; புரட்சியில் மக்கள் வென்றெடுத்த பலன்கள் அனைத்தையும் துடைத்தெறிந்து மக்களுக்கும் தனக்குமிடையிலிருந்த முரண்பாட்டை மேலும் கடுமையாக்கியது. ஜப்பானிய எதிர்ப்புப் போர் நடைபெறும் இக்காலக்கட்டத்தில் அது ஜப்பானிய ஏகாதிபத்தியத்துடன் முரண்பட்டு நிற்கிறது. எனினும் பொதுவுடைமைக் கட்சியுடன் கூட்டுறவை விரும்புகிறது.

அதே சமயத்தில் பொதுவுடைமைக் கட்சியினர் மற்றும் மக்கள் மீதான தனது போராட்டத்தை கோமிங்டாங் தளர்த்தவில்லை. அவர்கள் மீதான ஒடுக்குமுறையையும் அது தளர்த்தவில்லை. ஆனால் பொதுவுடைமைக் கட்சியைப் பொறுத்தவரையில் அது எப்போதுமே ஒவ்வொரு காலப் பகுதியிலும் ஏகாதிபத்தியத்துக்கும் நிலவுடைமைக்கும் எதிராக மாபெரும் மக்கள் திரளுடனேயே சேர்ந்து நின்றது.

ஜப்பானிய எதிர்ப்புப் போர் நடைபெறும் இக்காலக் கட்டத்தில் கோமிங்டாங் கட்சியானது ஜப்பானை எதிர்ப்பதற்கு தனது விருப்பத்தை தெரிவித்துள்ளது. எனவே கோமிங்டாங் மற்றும் உள்நாட்டு நிலவுடைமைச் சக்திகளைப் பொறுத்து, பொதுவுடைமைக் கட்சியானது இறுக்கமற்ற, மிதமான நிலைபாட்டையே மேற்கொண்டுள்ளது. மேற்கூறிய சூழ்நிலைமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் ஒரு சமயத்தில் இந்த இரண்டு கட்சிகளுக்கிடையே நட்பு அணியையும் மற்றொரு நேரத்தில் இவற்றுக்கிடையே போராட்டத்தையும் உருவாக்கியுள்ளன. நட்பு அணிக் காலத்திலும் கூட நட்பு இருக்கும் அதே வேளையில் போராட்டமும் இருக்கும் ஒரு சிக்கலான நிலைமை நிலவி வருகிறது.

முரண்பாட்டின் உள்ள இரண்டு கூறுகளின் குறிப்பிட்ட சிறப்பு இயல்புகளை நாம் ஆராயவிட்டால் ஒவ்வொரு கட்சியும் இதர சக்திகளுடன் கொண்டுள்ள உறவுகளைப் புரிந்து கொள்ளத் தவறுவோம். மேலும் கோமிங்டாங் மற்றும் பொதுவுடைமைக் கட்சிகளுக்குமிடையேயுள்ள உறவுகளையும் புரிந்து கொள்ளத் தவறுவோம்.

எந்த வகையான முரண்பாடானாலும் அதன் குறித்த தன்மையைப் (தனி இயல்பு —Particularity) பற்றி ஆராயும் பொழுது அது பருப்பொருளின் இயக்க வடிவம் ஒவ்வொன்றிலுமுள்ள முரண்பாடு, அதன் வளர்ச்சிப் போக்குகள் ஒவ்வொன்றிலுமுள்ள முரண்பாடு, ஒவ்வொரு வளர்ச்சிப் போக்கிலு முள்ள முரண்பாட்டின் இரு கூறுகள், வளர்ச்சிப் போக்கின் ஒவ்வொரு கட்டத்திலுள்ள முரண்பாடு, ஒவ்வொரு கட்டத்திலும் உள்ள முரண்பாட்டின் இரு கூறுகள் — எனப் பல்வேறு வகையானதாக இருக்கலாம். எந்த வகையான முரண்பாட்டினுடைய தனி இயல்பைப் பற்றி ஆராயும்போதும் இம்முரண்பாடுகள் அனைத்தின் சிறப்பு இயல்புகளைப் பற்றி ஆராயும்போதும், நாம் மனதிற் தோன்றுகிறபடி நடக்கும் அகநிலைப் போக்குடையவர்களாகவும் தன்னிச்சைப் போக்குடையவர்களாகவும் இருக்கக் கூடாது. அவற்றை நாம் பருண்மையாக ஆராய்ந்தறிய வேண்டும். பருண்மையான பகுப்பாய்வு இன்றி, எந்தவொரு முரண்பாட்டின் குறிப்பிட்ட தனி இயல்பு பற்றியும் நாம் அறிந்து கொள்ள முடியாது. லெனினின் சொற்களை எப்போதும் நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும். அவை **பருண்மையான நிலைமைகளைப் பருண்மையான முறையில் பகுத்தாய்வு செய்ய வேண்டும்** என்பனவாகும்.

இத்தகைய திட்டவட்டமான பகுத்தாய்வுக்கு மிகச் சிறந்த முன்னெடுத்துக் காட்டுகளை முதன் முதலாக நமக்கு வழங்கியவர்கள் மார்க்சும் எங்கல்சும்தான்.

சமூக - வரலாற்று இயக்கத்தை ஆராய்ந்தறிவதற்காக, பொருட்களில் உள்ள இந்த முரண்பாடு பற்றிய விதியை மார்க்சும் எங்கல்சும் கையாண்ட போது, உற்பத்தி சக்திகளுக்கும் — உற்பத்தி உறவுகளுக்குமிடையே உள்ள முரண்பாட்டை; சுரண்டும் வர்க்கங்களுக்கும் - சுரண்டப்படும் வர்க்கங்களுக்குமிடையே உள்ள முரண்பாட்டை; இதனைத் தொடர்ந்து, இவற்றின் விளைவான பொருளாதார அடித்தளத்திற்கும் மேலடுக்குக்கும் (அரசியல், சித்தாந்தம் முதலானவை) இடையே ஏற்படும் முரண்பாட்டைக் கண்டறிந்தனர். அத்துடன் இம் முரண்பாடுகள் பல்வேறு வர்க்க சமுதாயங்களில் பல்வேறு வகையான சமூகப் புரட்சிக்குத் தவிர்க்கவியலாதபடி எவ்வாறு இட்டுச் செல்கின்றன என்பதையும் கண்டுபிடித்தனர்.



முதலாளிய சமுதாயத்தின் பொருளாதார அமைப்பை ஆய்ந்தறிய, இவ்விதியை மார்க்சு கையாண்டபோது, உற்பத்தியின் சமுதாயத் தன்மைக்கும் உடைமை முறையின் தனியுடைமைத் தன்மைக்கும் உள்ள முரண்பாடுதான் இந்த சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடு என்பதைக் கண்டறிந்தார். இம்முரண்பாடு எங்கு புலப்படுகிறது? (தனியார் தொழில் அமைப்புகளில், உற்பத்தியானது ஒழுங்கமைப்புக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் சமுதாயம் முழுவதிலுமுள்ள உற்பத்தியை எடுத்துக் கொண்டாலோ அது எவ்விதக் கட்டுப்பாட்டிற்கும், ஒழுங்குமுறைக்கும், திட்டமிட்ட நோக்குக்கும் உட்படாத தறுதலைப் போக்கு கொண்டிருப்பதைக் காணலாம்*) தனியார் முயற்சிகளிலுள்ள முறைப்படுத்தப்பட்ட அமைப்புக்கு உட்பட்ட உற்பத்தியின் இயல்புக்கும் - சமுதாயத்தின் முழுமையிலுள்ள உற்பத்தியின் தறுதலைப் போக்குக்கும் (அராஜகப் போக்கு) இடையேயுள்ள முரண்பாடே, மேற்கூறிய அடிப்படை முரண்பாட்டின் வெளிப்பாடு எனலாம். இந்த அடிப்படை முரண்பாடு வர்க்க உறவுகளில், முதலாளிய வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்குமிடையேயுள்ள முரண்பாடு என்ற வடிவத்தில் வெளிப்படுகிறது.

உலகில் உள்ள பொருட்கள் அளவற்றவை. அவற்றின் வளர்ச்சியோ எல்லையற்றவை. எனவே ஒரு நேரத்தில் எங்கும் நிறைந்த முரண்பாடாக காணப்படுவது மற்றொரு நேரத்தில் குறிப்பிட்ட தனி (குறித்த) முரண்பாடாக அமைகிறது. இதற்கு மாறாக, ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பான முரண்பாடாக இருப்பது மற்றொரு சூழலில் எங்கும் நிறைந்த (அனைத்தும் தழுவிய) முரண்பாடாகிறது. முதலாளிய அமைப்பில் உற்பத்தியின் சமுதாய இயல்புக்கும், உற்பத்தி சாதனங்களின் தனி உடைமை

* *மேற்கண்ட விளக்கம் புரிதலுக்காக அளிக்கப்பட்டுள்ளது. மூலத்தில் இல்லை. - மொழிப் பெயர்ப்பாளர்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முறைக்கும் இடையிலுள்ள முரண்பாடு முதலாளியம் தோன்றி வாழ்ந்து, வளர்கிற எல்லா நாடுகளுக்கும் பொதுவானதாகும். முதலாளியத்தைப் பொறுத்தவரை, இது முரண்பாட்டின் எங்கும் நிறைந்த இயல்பாக அமைகிறது. ஆனால் முதலாளியத்தின் இம் முரண்பாடு, வர்க்க சமுதாயத்தின் பொது வளர்ச்சியில் பார்க்கும் போது, ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்திற்கு மட்டுமே உரியதாகிறது.

வர்க்க சமுதாயத்தில் உற்பத்தி சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் இடையில் உள்ள முரண்பாட்டை முழுமையாக எடுத்துக் கொண்டால், அது முரண்பாட்டின் குறித்த தன்மையாய் அமைகிறது. இருப்பினும் முதலாளிய சமுதாயத்தில் உள்ள இம்முரண்பாடுகள் அனைத்தின் குறித்த தன்மையைப் பகுத்தாராய்ந்த மார்க்சு, எங்கும் நிறைந்த முரண்பாடு பற்றிய மேலும் ஆழமான, மேலும் நிறைவான, மேலும் முழுமையானதொரு விளக்கமும் வழங்கினார். இது வர்க்க சமுதாயம் அனைத்துக்கும் பொதுவாகவுள்ள முரண்பாட்டின் எங்கும் நிறைந்த தன்மைதான். இது உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கு மிடையேயுள்ள முரண்பாடுதான்.

முரண்பாட்டின் குறித்த தன்மை எங்கும் நிறைந்த முரண்பாட்டுடன் ஒன்று சேர்ந்துள்ளது. ஒவ்வொரு பொருளிலும் முரண்பாட்டின் குறித்த தன்மையுடன் எங்கும் நிறைந்த முரண்பாடு இயற்கையாய் அமைந்துள்ளது. எங்கும் நிறைந்த முரண்பாடு, முரண்பாட்டின் குறித்த தன்மையில் உறைகிறது. எனவே நாம் ஒரு பொருளைப் பற்றி ஆராயும் போது குறிப்பிட்ட முரண்பாடு, எங்கும் நிறைந்த முரண்பாடு ஆகிய இரண்டைப் பற்றியும் அவை ஒன்றோடொன்று கொண்டுள்ள உறவையும் கண்டறிய முனைய வேண்டும். ஆராயப்படும் பொருளுக்குள்ளேயே இருக்கும் குறித்த தனி இயல்பு, அதன் எங்கும் நிறைந்த இயல்பு ஆகிய இவை இரண்டையும்; இவை ஒன்றுக்கொன்று கொண்டுள்ள தொடர்பையும்; இப்பொருள் தனக்கு வெளியேயுள்ள பல்வேறு பொருட்களுடனும் நிகழ்ச்சிப் போக்குகளுடனும் கொண்டுள்ள தொடர்பையும் கண்டறிய முனைய வேண்டும்.

''**லெனினியத்தின் அடிப்படைகள்**'' என்ற புகழ் பெற்ற தனது நூலில் லெனினியத்தின் வரலாற்று அடிப்படைகளை **ஸ்டாலின்** விளக்கியுள்ளார். இவ்விளக்கத்தின் போது, லெனினியம் தோன்றியதற்குரிய அனைத்துலக நிலைமைகளை அவர் ஆராய்ந்துள்ளார். ஏகாதிபத்தியத்தின் கீழ் உச்சகட்டத்தை அடைந்த முதலாளிய முரண்பாடுகளை ஆராய்ந்துள்ளார்.



மேலும் இம்முரண்பாடுகள், பாட்டாளிவர்க்கப் புரட்சியை உடனடிச் செயலுக்குரிய ஒன்றாக மாற்றியதைப் பற்றியும், முதலாளியத்தின் மீது நேரடித் தாக்குதல் ஒன்றைத் தொடுப்பதற்கான சாதகமான நிலைமைகளை எவ்வாறு உருவாக்கின என்பது பற்றியும் எடுத்துக் காட்டியுள்ளார். மேலும் ரஷ்யாவானது, லெனினியத்தைப் பேணி வளர்த்த தொட்டிலாக உருவானதற்கான காரணங்களையும் ஜாரிச ரஷ்யாவானது, அப்போது ஏகாதிபத்திய முரண்பாடுகள் அனைத்தினதும் குவிமையமாக ஆகியதற்கான காரணங்களையும் ரஷ்யப் பாட்டாளி வர்க்கமானது அனைத்துலகப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாகியதற்கான காரணங்களையும் ஆராய்ந்துள்ளார்.

இவ்வகையில் ஏகாதிபத்தியத்தில் உள்ள எங்கும் நிறைந்த முரண்பாட்டின் இயல்பை ஆராய்ந்த ஸ்டாலின், ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக் காலகட்டத்தில் லெனினிசம் ஏன் மார்க்சியமானது என்பதையும் விளக்கியுள்ளார். அதே வேளையில் இந்த சாதாரண முரண்பாட்டிற்குள் ஜாரிச ரஷ்ய ஏகாதிபத்தியத்தின் குறித்தத் தன்மை இருப்பதை ஆராய்ந்து, பாட்டாளி வர்க்கப் புரட்சிக் கோட்பாடு, நடைமுறைத் தந்திரோபாயங்கள் ஆகியவற்றின் பிறப்பிடமாக ரஷ்யா உருவாவதற்குரியக் காரணம் என்ன என்பதையும், இந்த முரண்பாட்டின் குறித்த தன்மையில் எங்கும் நிறைந்த முரண்பாடு எவ்வாறு அமைந்துள்ளது என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளார். ஸ்டாலின் மேற்கொண்ட ஆய்வானது, முரண்பாட்டின் குறித்த தன்மையையும், எங்கும் நிறைந்த முரண்பாட்டையும் புரிந்து கொள்வதற்கு நமக்கு ஒரு முன் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

புற நிலையில் உள்ள நிகழ்ச்சிப் போக்குகளை ஆய்ந்தறிவதில் இயங்கியலைப் பயன்படுத்துதல் பற்றி மார்க்சும் எங்கல்சும் சரி, அதேபோல லெனினும் ஸ்டாலினும் சரி மக்களுக்கு பின்வருமாறு அறிவுறுத்தினார்கள்.

> *மக்கள் எவ்வகையிலும் அகநிலைப் போக்குடையவர்களாக இருக்கக் கூடாது. தன்னிச்சைப் போக்குடையவர்களாக இருக்கக் கூடாது. இந்த நிகழ்ச்சிப் போக்குகளின் மெய்யான புறநிலை இயக்கத்தில் உள்ள பருண்மையான நிலைமைகளிலிருந்து அவற்றின் பருண்மையான முரண்பாடுகளைக் கண்டறிய வேண்டும்; ஒவ்வொரு முரண்பாட்டிலுமுள்ள ஒவ்வொரு கூறின் பருண்மையான நிலைமைகளையும், முரண்பாடுகள் ஒன்றுக்கொன்று கொண்டுள்ள பருண்மையான உறவுகளையும் காண வேண்டும்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நமது வறட்டுக் கோட்பாட்டாளர்களின் ஆய்விலோ இத்தகைய கண்ணோட்டம் இடம்பெறவில்லை. எனவே சரியானது எதனையும் அவர்களால் ஒருபோதும் பெற முடியாது. நாம் அவர்களடைந்த தோல்விகளிலிருந்து எச்சரிக்கைப் பெறுவதோடு இந்தக் கண்ணோட்டத்தைப் பெறவும் கற்றுக்கொள்ள வேண்டும். ஆராய்வில் கொள்ளப்பட வேண்டிய சரியான நோக்கு நிலை இதுவொன்றே.

முரண்பாட்டின் எங்கும் நிறைந்த தன்மைக்கும், முரண்பாட்டின் குறித்த தன்மைக்கும் இடையில் உள்ள உறவுமுறை, முரண்பாட்டின் பொதுப் பண்புக்கும் தனிப்பண்புக்கும் இடையில் உள்ள உறவு முறையாகும். முரண்பாடு எல்லாவற்றிலும் நிலவுகிறது; தொடக்கம் முதல் இறுதிவரை அது ஊடுருவிப் பரவி நிற்கிறது என்பதைத்தான் பொதுப் பண்பு என்று நாம் கருதுகிறோம். அதாவது இயக்கம், பொருட்கள், நிகழ்ச்சிப் போக்குகள், சிந்தனை - இவை எல்லாமே முரண்பாடுகள்தான். முரண்பாட்டை மறுப்பது என்பது அனைத்தையும் மறுப்பது ஆகும். இது எல்லாக் காலத்துக்கும், எல்லா நாட்டுக்குமுரிய, விதிவிலக்கற்ற, பொதுமை தழுவிய உண்மையாகும். எனவே தான் முரண்பாடு எல்லாவற்றிற்கும் பொதுவானது, முழு முற்றானது என்று நாம் கொள்கிறோம். பொதுப் பண்பு, முரண்பாட்டில் சார்பற்ற நிலையை (absoluteness) ஏற்படுத்துகிறது.

ஆனால் இந்த பொதுப்பண்பு ஒவ்வொரு தனிப் பண்பிலும் இருக்கின்றது. தனிப்பண்பு இன்றி பொதுப் பண்பு இருக்க முடியாது. அனைத்துத் தனிப் பண்புகளையும் அகற்றினால் என்ன பொதுப் பண்பு எஞ்சும்? ஒவ்வொரு முரண்பாடும் குறித்த தன்மை கொண்டிருப்பதாலேயே தனிப்பண்பு தோன்றுகிறது. தனிப்பண்புகள் யாவும் நிலைமைக்குட்பட்டவையாகவும், தற்காலிகமானவையாகவும் இருக்கின்றன. ஆகவே அவை சார்புடையனவாயிருக்கின்றன.

பொதுப் பண்பு, தனிப் பண்பு, முழு முற்றான தன்மை, சார்பு நிலைத்தன்மை, சார்பற்றத் தன்மை என்ற உண்மைகள் பொருட்களில் உள்ள முரண்பாடு பற்றிய பிரச்சனையின் செறிவான சாரமாகும். இவற்றைப் புரிந்து கொள்ளத் தவறுவது இயங்கியலைக் கைவிடுவதற்குச் சமமாகும்.



## 4. முதன்மை முரண்பாடும் ஒரு முரண்பாட்டின் முதன்மைக் கூறும்

முரண்பாட்டின் குறித்த தன்மை பற்றிய பிரச்சனையில் சிறப்பு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய நோக்கு நிலைகள் இரண்டு உள்ளன. அவை:

(1) முதன்மை முரண்பாடு;

(2) ஒரு முரண்பாட்டின் முதன்மைக் கூறு.

இவற்றை ஆய்வுக்காக தனித்தனியாக காண்போம்.

சிக்கலான ஒன்றின் வளர்ச்சிப் போக்கில் பல முரண்பாடுகளைக் காணலாம். இவற்றில் ஒன்று கட்டாயம் முதன்மை முரண்பாடாகவே உள்ளது. இதன் வாழ்வும் வளர்ச்சியும் இதர முரண்பாடுகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் நிர்ணயிக்கிறது அல்லது அவைகளின் மீது செல்வாக்குச் செலுத்துகிற முதன்மை முரண்பாடாகவே உள்ளது.

எடுத்துக்காட்டாக, முதலாளிய சமுதாயத்தில் முரண்பாட்டில் உள்ள இரு சக்திகள் பாட்டாளி வர்க்கமும், முதலாளிய வர்க்கமும் ஆகும். இவை இங்கு முதன்மை முரண்பாட்டை உருவாக்குகின்றன. இந்த முதன்மை முரண்பாட்டால் நிர்ணயிக்கப்படுகிற அல்லது இதன் செல்வாக்குக்கு உட்படுகிற இதர முரண்பாடுகள் கீழ் வருமாறு:

1. எஞ்சியுள்ள நிலவுடைமை வர்க்கத்திற்கும் - முதலாளிய வர்க்கத்துக்குமிடையேயுள்ள முரண்பாடு;
2. விவசாய சிறு முதலாளித்துவ வர்க்கத்திற்கும் - முதலாளித்துவ வர்க்கத்திற்கும் இடையில் உள்ள முரண்பாடு;



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3. பாட்டாளி வர்க்கத்திற்கும் - விவசாய சிறு முதலாளிய வர்க்கத்திற்கும் இடையில் உள்ள முரண்பாடு;

4. ஏகபோக முதலாளிகளுக்கும் - ஏகபோகமற்ற முதலாளிகளுக்கும் இடையில் உள்ள முரண்பாடு;

5. முதலாளிய ஜனநாயகத்திற்கும் - முதலாளிய பாசிசத்திற்கும் இடையில் உள்ள முரண்பாடு;

6. முதலாளிய நாடுகளுக்கிடையே உள்ள முரண்பாடு;

7. ஏகாதிபத்தியத்திற்கும் - குடியேற்ற நாடுகளுக்குமிடையே உள்ள முரண்பாடு.

இவை போன்ற இன்னபிற முரண்பாடுகள்.

சீனம் போன்ற அரைக் குடியேற்ற நாட்டில் முதன்மை முரண்பாட்டுக்கும் முதன்மையில்லாத முரண்பாடுகளுக்கும் இடையே உள்ள உறவு ஓர் சிக்கலான காட்சியை நமக்கு வழங்குகிறது.

இத்தகையதொரு நாட்டின் மீது ஏகாதிபத்தியம் ஆக்கிரமிப்புப் போர் தொடுக்கும் போது, ஒரு சில தேசத் துரோகிகளைத் தவிர, நாட்டின் பல்வேறு வர்க்கங்கள் அனைத்தும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஒரு தேசியப் போரில் தற்காலிகமாக ஐக்கியப்பட முடியும். அத்தகைய வேளையில் ஏகாதிபத்தியத்திற்கும் - குறிப்பிட்ட நாட்டுக்குமிடையேயுள்ள முரண்பாடு முதன்மை முரண்பாடாகிறது. நாட்டின் பல்வேறு வர்க்கங்களுக்கிடையே உள்ள முரண்பாடுகள் (இவற்றில் முன்பு முதன்மை முரண்பாடாக இருந்ததே அதுவும் அடங்கும். அதாவது நிலவுடைமை அமைப்பு முறைக்கும் பரந்துபட்ட மக்கள் திரளினருக்குமிடையே உள்ள முரண்பாடும் இவற்றில் அடங்கும்). அனைத்தும் தற்காலிகமாக ஓர் இரண்டாம் தர, கீழ்ப்பட்ட நிலைக்குத் தாழ்த்தப்படுகின்றன. இந்த நிலைமை, சீனத்தில் 1840-ஆம் ஆண்டு **அபினிப் போரிலும்**[20] 1891-ஆம் ஆண்டு **சீன-ஜப்பானிய போரிலும்**;[21] 1900-ஆம் ஆண்டு **யி-ஹோ-துவான் போரிலும்** நிலவியது. மேலும் தற்போதைய சீன - ஜப்பானியப் போரில் நிலவும் நிலைமையும் இதுதான்.

ஆனால் வேறொரு சூழலில் முரண்பாடுகள் இடம் மாறுகின்றன. ஏகாதிபத்தியம் போரைக் கையாளாமல், - அரசியல், பொருளாதாரம், பண்பாட்டு வழிமுறைகள் போன்ற கடுமை குறைந்த வழி முறைகளால் தன் அடக்குமுறையை நடத்தும்போது, அரைக் குடியேற்ற நாடுகளில் உள்ள ஆளும் வர்க்கங்கள் ஏகாதிபத்தியத்திடம் சரணடைகின்றன. ஏகாதிபத்தியமும் அத்தகைய



ஆளும் வர்க்கங்களும் மக்கள் திரளின் மீது கூட்டு ஒடுக்குமுறையைச் செயல்படுத்தும் பொருட்டு, தமக்குள் ஓர் நட்பு அணியை உருவாக்கிக் கொள்கின்றன. இவ்வேளையில் ஏகாதிபத்தியமும் நிலவுடைமை வர்க்கமும் கொண்டுள்ள நட்பு அணிக்கு எதிராக மக்கள் உள்நாட்டுப் போரை மேற்கொள்வது அடிக்கடி நடக்கும் நிகழ்ச்சியாகும். அதேவேளையில் ஏகாதிபத்தியம் மக்களை அடக்குவதற்கு அரைக் குடியேற்ற நாடுகளிலுள்ள பிற்போக்காளர்களுக்கு உதவுவதில் வழக்கமான நேரடி நடவடிக்கைகளைக் காட்டிலும், மறைமுக வழிமுறைகளையே பெரிதும் பயன்படுத்துகிறது. இவ்வாறு அக முரண்பாடுகள் சிறப்புக்குரிய வகையில் கூர்மையடைகின்றன.

சீனத்தில் 1911-ஆம் ஆண்டுப் புரட்சியிலும், 1924-27-ஆம் ஆண்டுப் புரட்சிப் போரிலும், 1927-ஆம் ஆண்டுக்குப் பிந்திய பத்தாண்டு கால நிலப் புரட்சிப் போரிலும் இதுதான் நிகழ்ந்தது. மேலும் அரைக்குடியேற்ற நாடுகளிலுள்ள பல்வேறு பிற்போக்கு ஆளும் வர்க்கங்களுக்கிடையிலான போர்கள், எடுத்துக் காட்டாக சீனத்தில் யுத்தப் பிரபுக்களிடையே நடந்த போர்கள் இத்தகையதுதான்.

ஒரு புரட்சிகர உள்நாட்டுப் போரானது. ஏகாதிபத்தியத்தின் வாழ்வையும் அதன் அடிவருடிகளான உள்நாட்டுப் பிற்போக்காளர்களின் வாழ்வையும் அச்சுறுத்தும் அளவிற்கு வளர்கையில், ஏகாதிபத்தியம் தனது ஆட்சியைப் பேணிக் காக்க இதர வழிமுறைகளையே பெரிதும் பின்பற்றுகிறது. ஒன்று, அது புரட்சிகர முன்னணியைப் பிளவுபடுத்த முயல்கிறது. அல்லது உள்நாட்டுப் பிற்போக்காளர்களுக்கு நேரடியாக உதவும் பொருட்டு படைகளை அனுப்பி வைக்கிறது.

இத்தகைய நேரத்தில், வெளிநாட்டு ஏகாதிபத்தியமும் உள்நாட்டுப் பிற்போக்குச் சக்திகளும் மிக வெளிப்படையாக தங்களை ஒருபுறம் நிறுத்திக் கொள்கின்றன; மக்கள் மறுகோடியில் அணி சேர்ந்து நிற்கின்றனர்; இதர முரண்பாடுகளை நிர்ணயிக்கும் அல்லது அவற்றின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் முதன்மை முரண்பாட்டை இவ்வாறுதான் அவைகள் உருவாக்குகின்றன. அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் ரஷ்ய பிற்போக்காளர்களுக்கு பல்வேறு முதலாளிய நாடுகளால் வழங்கப்பட்ட உதவி, ஆயுதத் தலையீட்டுக்கான ஓர் எடுத்துக்காட்டாகும். 'சியாங்கே ஷேக்', 1927-ஆம் ஆண்டில் இழைத்த வஞ்சகம் (betrayal), புரட்சிகர முன்னணியை பிளவுபடுத்தியதற்கான ஓர் எடுத்துக்காட்டாகும்.

ஆனால் எது நிகழ்ந்த போதிலும், வளர்ச்சிப் போக்கின் ஒவ்வொரு கட்டத்திலும் தலைமைப் பாத்திரம் வகிக்கும் முதன்மை முரண்பாடு ஒன்றே ஒன்றுதான் இருக்கும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகவே எந்த ஒரு வளர்ச்சிப் போக்கிலும், ஒன்றுக்கு மேற்பட்ட முரண்பாடுகள் இருக்குமேயானால், அவற்றில் ஒன்று முதன்மை முரண்பாடாக இருக்கும். அது தலைமை பங்கை வகிப்பதோடு நிர்ணயம் செய்யும் பங்கையும் வகிக்கும். மற்றவை, இரண்டாம் நிலையில், கீழ்ப்பட்ட நிலையில் இருக்கும். எனவே, இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட முரண்பாடுகள் உடைய எந்த ஒரு சிக்கலான வளர்ச்சிப் போக்கையும் நாம் ஆராயும் பொழுது, அதன் முதன்மை முரண்பாட்டைக் காண நாம் அனைத்து வழிகளிலும் முயல வேண்டும். ஒருமுறை இம்முதன்மை முரண்பாட்டை இறுகப் பற்றியதும் எல்லாப் பிரச்சனைகளுக்கும் எளிதில் தீர்வு காணலாம். இந்த முறைதான் முதலாளிய சமுதாயம் பற்றிய தமது ஆய்வில் மார்க்சு நமக்குக் கற்றுத் தந்துள்ள முறையாகும். ஏகாதிபத்தியத்தையும், முதலாளியத்தின் பொது நெருக்கடியையும் பற்றி ஆராய்ந்த போதும் சோவியத் பொருளாதாரம் பற்றிய ஆய்வை மேற்கொண்ட போதும் லெனினும் ஸ்டாலினும் நமக்குக் கற்றுத் தந்துள்ள முறையும் இதுதான். இதைப் புரிந்து கொள்ளாத அறிவாளிகளும் செயல் வீரர்களும் ஆயிரக்கணக்கில் உள்ளனர். இதன் விளைவாக அவர்கள் குழப்பத்திற்குள்ளாகின்றனர்; பிரச்சனையின் உயிர் நாடியை அறிந்து கொள்ள முடியாதவராயிருக்கின்றனர். எனவே அவர்களால் அப்பிரச்சனையின் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான வழியைக் காண முடியாமல் போவது இயல்பே.

நாம் ஏற்கனவே கூறியுள்ளதைப் போல ஒரு வளர்ச்சிப் போக்கில் உள்ள அனைத்து முரண்பாடுகளையும் ஒன்றுக்கொன்று சமமானவையாகக் கருதக் கூடாது. முதன்மை முரண்பாட்டிற்கும் இரண்டாம் நிலை முரண்பாட்டிற்கும் இடையில் உள்ள வேறுபாட்டைக் காண வேண்டும். முதன்மை முரண்பாட்டை இறுகப் பற்றுவதில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். அப்படியானால் முதன்மை முரண்பாடு, இரண்டாம் நிலை முரண்பாடு ஆகியவற்றில் எதை எடுத்துக் கொண்டாலும், எந்த ஒரு குறிப்பிட்ட தனி முரண்பாட்டிலும் உள்ள இரு முரண்பாட்டுக் கூறுகளையும் ஒன்றுக்கொன்று நிகரானவையாகவே கருத வேண்டுமா? இல்லை என்பதுதான் இதற்குரிய விடை.

எந்த முரண்பாட்டை எடுத்துக் கொண்டாலும், அதன் கூறுகளின் வளர்ச்சி ஏற்றத் தாழ்வாகவே உள்ளது. ஏற்றத் தாழ்வான தன்மையே அடிப்படையானதாக இருக்க, சில வேளைகளில் அவை சமநிலையில் இருப்பனவாகவும் காணப்படலாம். ஆயினும் இச்சமநிலை தற்காலிகமாகவும், சார்படையதாகவும் இருக்கிறது. முரண்பாட்டுக் கூறுகளின் இரண்டில் ஒன்று முதன்மையானது; மற்றொன்று, இரண்டாம் நிலையானது. முதன்மைக் கூறே முரண்பாட்டில் தலைமைப் பாத்திரம் வகிக்கிறது. ஒரு பொருளின் இயல்பை நிர்ணயிப்பதில் முதன்மைப் பங்கு



வகிப்பது ஒரு முரண்பாட்டில் உள்ள முதன்மைக் கூறாகும். இது ஆதிக்க நிலையைப் பெற்றுள்ள கூறாகும்.

ஆனால் இந்நிலைமை நிலையானது அல்ல. முரண்பாட்டின் முதன்மைக் கூறும் முரண்பாட்டின் முதன்மையல்லாதக் கூறும் தங்களின் எதிர்மறைகளாகத் தாமே மாறிவிடுகின்றன. இதற்கேற்ப ஒரு பொருளின் இயல்பும் மாறுகிறது. ஒரு முரண்பாட்டின் வளர்ச்சியிலுள்ள ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிப் போக்கில், அல்லது ஒரு குறிப்பிட்டக் கட்டத்தில் 'அ' என்பது முதன்மைக் கூறாகவும், 'ஆ' என்பது முதன்மை அல்லாதக் கூறாகவும் இருக்கின்றன. மற்றொரு கட்டத்தில் அல்லது மற்றொரு வளர்ச்சிப் போக்கில் பாத்திரங்கள் இடம் மாறுகின்றன. ஒரு பொருளின் வளர்ச்சிப் போக்கிலுள்ள இரண்டு கூறுகளுக்கு இடையேயுள்ள போராட்டத்தில் ஒவ்வொரு கூறுக்கும் உள்ள சக்தி எந்த அளவுக்குக் கூடுகிறதோ அல்லது குறைகிறதோ அந்த அளவுக்கு இம்மாற்றம் நிர்ணயிக்கப்படுகிறது.

''பழையன கழிதலும் புதியன புகுதலும்'' என்று நாம் அடிக்கடி சொல்கிறோம். பழையன கழிதலும், புதியன புகுதலும், பேரண்டத்தின் புது விதி; அது நிலையான, மீற முடியாத நியதியாகும். ஒரு பொருள் தனது உட்சாரத்துக்கும் - இயல்புக்கும் - புற நிலைமைகளுக்கும் ஏற்ப பாய்ச்சல் வடிவங்களினூடே ஒன்று மற்றொன்றாக மாறுகிறது. இதுவே பழையன கழிந்து புதியன தோன்றும் போக்காகும். எப்பொருளிலும் அதன் புதிய கூறுக்கும், பழைய கூறுக்கும் இடையே முரண்பாடு இருக்கின்றது. இது வளைவு, சுளிவுகள் நிறைந்த தொடர்ச்சியான போராட்டங்களைத் தோற்றுவிக்கிறது. இப்போராட்டங்களின் காரணமாக, புதிய கூறானது முதன்மையற்ற நிலையிலிருந்து முதன்மை நிலைக்கு மாறி ஆதிக்கம் பெறுகிறது. அதே நேரத்தில் பழைய கூறானது முதன்மை நிலையிலிருந்து முதன்மையல்லாத நிலைக்கு மாறி சிறிது சிறிதாக மாய்ந்தொழிகிறது.

புதிய கூறு, பழைய கூறின் மீது ஆதிக்கம் பெற்ற அக்கணமே பழைய பொருளானது பண்பு வகையில் புதிய பொருளாக மாற்றம் பெறுகிறது. இவ்வாறு ஒரு பொருளின் இயல்பை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிப்பது ஆதிக்கம் பெற்ற கூறுதான், முரண்பாட்டின் முதன்மைக் கூறுதான் என்பதைக் காணலாம். ஆதிக்கம் பெற்றுள்ள முதன்மைக் கூறு மாறும் போது அதற்கேற்ப ஒரு பொருளின் தன்மையும் இயல்பும் மாறுகிறது. பழைய நிலவுடைமைக் காலத்தில் முதலாளியம் இரண்டாம் நிலைச் சக்தியாக இருந்தது. முதலாளிய சமூகத்தில் இந்நிலையிலிருந்து, மேல் நிலைச் சக்தியாகும் நிலைக்கு அது மாறியுள்ளது. அதற்கேற்ப சமுதாயமானது நிலவுடைமைத் தன்மையிலிருந்து மாறி, முதலாளியத் தன்மையுடையதாகியுள்ளது. புதிய முதலாளிய சமுதாயத்தில் நிலவுடைமைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சக்திகள் தமது முந்திய ஆதிக்க நிலையிலிருந்து தாழ் நிலைக்கு மாறி, படிப்படியாக மாய்ந்தொழிகின்றன. இங்கிலாந்திலும் பிரான்சிலும் இதுவே நிகழ்ந்தது. உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியடைய, அடைய, முற்போக்கான பங்கை வகிக்கும் புதிய வர்க்கம் என்ற நிலையிலிருந்து, ஒரு பிற்போக்குப் பங்கை வகிக்கும் பழைய வர்க்கம் என்ற நிலைக்கு முதலாளிய வர்க்கம் மாறுகிறது. இறுதியில் பாட்டாளி வர்க்கத்தால் தூக்கியெறியப்பட்டு, தனியார் உடைமையில் உள்ள உற்பத்திச் சாதனங்களும், அதிகாரமும் பறித்தெடுக்கப்பட்ட ஒரு வர்க்கமாக மாறும். அதுவும் படிப்படியாக மாய்ந்தொழியும்.

முதலாளிய வர்க்கத்தைவிட எண்ணிக்கையில் பெரியதான பாட்டாளி வர்க்கம், முதலாளிய வர்க்கத்தோடு சேர்ந்தே வளர்கிறது. ஆனால் அது முதலாளிய வர்க்கத்தின் ஆட்சியின் கீழ் வளர்கிற புதிய சக்தியாகும். துவக்கத்தில் முதலாளிய வர்க்கத்திற்குக் கீழ்ப்பட்டதாக இருக்கும் இப்பாட்டாளி வர்க்கம் படிப்படியாக வலிமை பெற்று, வரலாற்றில் தலைமைப் பங்கு வகிக்கும் ஒரு சுதந்திர வர்க்கமாகிறது. இறுதியில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி ஆளும் வர்க்கமாக மாறுகிறது. இதன்பின் சமுதாயத்தின் தன்மை மாறுகிறது. பழைய முதலாளிய சமூகம் மாறி புதிய சோசலிச சமுதாயம் உருவாகிறது. இது சோவியத் ஒன்றியத்தில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பாதை யாகும். இதர நாடுகள் அனைத்தும் கட்டாயம் மேற்கொள்ளப் போகிற பாதையுமாகும்.

எடுத்துக்காட்டாக சீனத்தைப் பாருங்கள்! அரைக் குடியேற்ற நாடாக உள்ள சீனத்துக்கும் - ஏகாதிபத்தியத்திற்கும் இடையில் உள்ள முரண்பாட்டில், ஏகாதிபத்தியம் முதன்மை இடம் பெற்று உள்ளது; அது சீன மக்களை அடக்கியொடுக்குகிறது; ஒரு சுதந்திர நாடாக இருந்த சீனம், அரைக் குடியேற்ற நாடாக மாற்றப்பட்டுள்ளது; ஆனால் இந் நிலை கட்டாயம் மாறும்; இரு தரப்புகளுக்கும் இடையே உள்ள போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத் தலைமையின் கீழ் பெருகி வரும் சீன மக்களின் ஆற்றல், தவிர்க்கவியலாதபடி சீனத்தை ஓர் அரைக் குடியேற்ற நாடு என்ற நிலையிலிருந்து, ஓர் விடுதலை பெற்ற நாடாக மாற்றும்; ஏகாதிபத்தியமோ தூக்கியெறியப்படும்; பழைய சீனம் தவிர்க்கவியலாதபடி புதிய சீனமாக மாறும்.

பழைய சீனம் புதிய சீனமாக மாற்றமடைவதானது, இந்நாட்டுக் குள்ளேயே இருக்கிற பழைய நிலவுடைமைச் சக்திகளுக்கும் புதிய மக்கள் சக்திகளுக்குமிடையே உள்ள உறவில் ஏற்படும் மாறுதலை உள்ளடக்குகிறது. பழைய நிலவுடைமை அமைப்பின் நிலப்பிரபு வர்க்கம் தூக்கியெறியப்பட்டு, அது ஆளும் நிலையிலிருந்து, ஆளப்படும் நிலைக்கு மாறும்; இந்த வர்க்கமும் படிப்படியாக மாய்ந்தொழியும். பாட்டாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்பட்டு, வழி நடத்தப்பட்ட



மக்கள், ஆளப்பட்டு வந்த தன்மையிலிருந்து மாறி ஆட்சியாளராக மாறுவர். அதன்பிறகு சீனச் சமுதாயத்தின் தன்மையும் மாறும்; பழைய அரைக் குடியேற்ற - அரை நிலவுடைமைச் சமுதாயம் ஓர் புதிய ஜனநாயக சமுதாயமாக மாறும்.

ஒன்று மற்றொன்றாக மாறுகிற இத்தகைய எடுத்துக்காட்டுகள் நமது பழம் சீன வரலாற்றிலும் காணப்படுகின்றன. ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகள் சீனத்தை ஆண்ட 'சிங்' வம்சம், (Ching Dynasty) *1911*-ஆம் ஆண்டுப் புரட்சியால் தூக்கியெறியப்பட்டது. 'சன்-யாட்-சென்'னின் தலைமையிலிருந்த புரட்சிகர 'துங் மெங் ஹுய்' (Tung Meng Hui) சிறிது காலம் வெற்றியுடன் திகழ்ந்தது. *1924-27*-ஆம் ஆண்டு புரட்சிப் பேரிலே தென் பகுதியிலிருந்த பொதுவுடைமைக் கட்சி, கோமிங்டாங் கூட்டு அணியின் புரட்சிகரச் சக்திகள் வலுக்குன்றிய நிலையிலிருந்து வலுவானதாக மாறி, வட பகுதிப் படையெடுப்பில் வெற்றியடைந்தது. அப்போது அங்கு வல்லமையுடன் ஆட்சி செய்த வட யுத்தப் பிரபுக்கள் தூக்கியெறியப் பட்டனர். *1927*-ஆம் ஆண்டு கோமிங்டாங் பிற்போக்குக் கும்பல் களின் தாக்குதல்களின் காரணமாக, பொதுவுடைமைக் கட்சியால் தலைமை தாங்கப்பட்ட மக்கள் சக்திகள் மிகப் பெரும் அளவிற்கு எண்ணிக்கையில் குறைக்கப்பட்டனர். ஆனால் பொதுவுடைமைக் கட்சி தன்னுடைய அணிகளுக்குள்ளேயே இருந்த சந்தர்ப்பவாதத்தை அழித்து ஒழித்தபோது மீண்டும் மக்கள் சக்தியின் எண்ணிக்கை படிப் படியாக வளர்ந்தது.

பொதுவுடைமைக் கட்சியின் தலைமையிலிருந்த புரட்சிகரத் தளப் பிரதேசங்களில், விவசாயிகள் ஆளப்பட்ட நிலையிலிருந்து ஆட்சியா ளராக மாறினர். இதற்கு மாறாக நிலபிரபுக்கள் எதிர் மாறான மாற்ற மொன்றிற்கு உள்ளாயினர். இதுபோன்றே என்றும் உலகில் தொடர்ந்து மாறி வருகிறது. புதியவை பழையதின் இடத்தை நிரப்பு கிறது; பழையதை மீறி புதியது முன் செல்கிறது; புதியதிற்கு இட மளிக்கும் பொருட்டு பழையது விலக்கப்படுகின்றது. பழையதி லிருந்தே புதியது தோன்றுகிறது.

புரட்சிகரப் போராட்டத்தில் சில நேரங்களில் சாதகமான நிலைமை களைவிட துன்பங்களே மேலோங்கியிருக்கும். இங்கு துன்பங்கள் முரண்பாட்டின் பிரதான கூறாகவும், சாதகமான நிலைமைகள் இரண் டாம் நிலைக் கூறாகவும் அமைகின்றன. ஆனால் புரட்சியாளர்கள் தமது விடாமுயற்சிகள் மூலம் துன்பங்களைப் படிப்படியாக வென்று, பலனுள்ள புதியதொரு சூழ்நிலையை உருவாக்க முடியும். இவ்வாறு துன்ப நிலைமை சாதகமான சூழலுக்கு இடம் விட்டுக் கொடுக்கிறது. *1927*-ஆம் ஆண்டு சீனாவில் புரட்சி தோல்வியடைந்த பின்னரும்; சீனச் செம்படை நடத்திய 'நீண்ட படையெடுப்பின் போதும்'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடந்தது இதுவே. தற்போதைய சீன - ஜப்பானிய போரில், சீனம் மீண்டும் நெருக்கடியானதொரு நிலையில் உள்ளது. ஆனால் தற்போது சீனத்திற்கும் ஜப்பானுக்குமிடையிலுள்ள நிலைமையை நாம் அடிப்படையில் மாற்ற முடியும். இதற்கு மாறாக, புரட்சியாளர்கள் தவறுகளிழைத்தால் சாதகமான நிலைமைகள் துன்பமானவையாகவே மாறும். இதுபோன்றே 1924-27-ஆம் ஆண்டின் புரட்சியின் வெற்றி, தோல்வியாக மாறியது. 1927-ஆம் ஆண்டுக்குப் பின்னர் தென் மாநிலங்களில் வளர்ச்சியடைந்த புரட்சிகரத் தளப்பிரதேசங்கள், 1934-ஆம் ஆண்டுகளில் தோல்வியைக் கண்டன.

ஆராய்ச்சிகளில் நாம் ஈடுபடும்போது, அறியாமையிலிருந்து அறிதலுக்குப் போகும் வளர்ச்சிப் போக்கிலுள்ள முரண்பாட்டிற்கும் இது பொருந்தக் கூடியதுதான். மார்க்சியம் பற்றிய நமது படிப்பின் தொடக்கத்தில், மார்க்சியத்தைப் பற்றிய நமது அறியாமை அல்லது போதிய அறிவின்மை மார்க்சிய அறிவுடன் முரண்பட்டே நிற்கிறது. ஆனால் விடாமுயற்சியுடன் கூடிய படிப்பின் மூலம் அறியாமை அறிவாக மாறுகிறது; குறைவான அறிவு ஆழ்ந்த அறிவாகிறது; மார்க்சிய நடைமுறையில் உள்ள கண்மூடித்தனமான போக்கு, சரியான நடைமுறையின் மூலம் தேர்ச்சியானவையாக தன் வடிவத்தில் மாறுகிறது.

குறிப்பிட்ட சில முரண்பாடுகளைப் பொறுத்த வரையில் இது உண்மையல்ல என்று சிலர் நினைக்கின்றனர். எடுத்துக்காட்டாக 'உற்பத்திச் சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் இடையே உள்ள முரண்பாட்டில் உற்பத்தி சக்திகளே முதன்மைக் கூறுகளாக உள்ளன. தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் இடையே உள்ள முரண்பாட்டில் நடைமுறையே முதன்மைக் கூறாகவுள்ளது. பொருளாதார அடித்தளத்திற்கும் மேலமைப்புக்கும் இடையே உள்ள முரண்பாட்டில் பொருளாதார அடித்தளமே முதன்மைக் கூறாக உள்ளது. அவற்றிற்குரிய தனித்தனியான நிலைகளில் எவ்வித மாற்றமுமில்லை', என அவர்கள் கருதுகின்றனர்.

மேற்கண்ட கருத்து எந்திரவியல் பொருள் முதல்வாதக் கருத்துதானே தவிர, இயங்கியல் பொருள் முதல்வாதக் கருத்தல்ல. உற்பத்திச் சக்திகளும், நடைமுறையும், பொருளாதார அடித்தளமும், உண்மையில் முதன்மையான நிச்சயமான பங்கையே வகிக்கிறது. இதை மறுக்கக் கூடியவர்கள் பொருள் முதல்வாதிகளாக இருக்க முடியாது. ஆனால், குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில், உற்பத்தி உறவுகள், தத்துவம் மற்றும் மேலமைப்பு போன்ற கூறுகள் முதன்மையான, ஆழமான வகையில் தங்களை வெளிப்படுத்திக் கொள்கின்றன. இதையும் நாம் ஏற்றுக் கொண்டுதான் தீர வேண்டும். உற்பத்தி உறவுகளில் மாற்றம் எதுவும் இல்லாமல், உற்பத்திச் சக்திகள் மேலும் வளர்ச்சியுற



முடியாமல் இருக்கும்போது, உற்பத்தி உறவுகளில் ஏற்படும் மாற்றம் முதன்மையான, தீர்மானகரமான பாத்திரத்தை வகிக்கிறது. **''புரட்சிகர தத்துவமில்லாமல், புரட்சிகரமான இயக்கம் இருக்க முடியாது''**** என லெனின் கூறிய காலத்தில், புரட்சிகர தத்துவ உருவாக்கமும், அதற்காக வாதாடுவதுமே முதன்மையான தீர்மானகரமான பங்கை வகித்தன. ஒரு கடமை (எத்தகைய ஒன்றானாலும் கூட) நிறைவேற்றப்பட வேண்டிய நேரத்தில், வழிகாட்டும் பாதையோ, வழிமுறையோ, திட்டமோ, கொள்கையோ இல்லாதிருக்கும்போது வழிகாட்டும் பாதையோ, வழிமுறையோ, திட்டமோ, கொள்கைகளோ உருவாக்கப்படுவதுதான் முதன்மையான தீர்மானகரமான கூறாகும்.

அதேபோன்று, பொருளாதார அடித்தளத்தின் வளர்ச்சியை அரசியல் - பண்பாடு முதலிய மேலமைப்பு தடுக்கும்போது, அரசியல் மற்றும் பண்பாட்டு மாற்றங்கள் முதன்மையானவையாகவும், தீர்மானகரமானவைய்யாகவும் விளங்குகின்றன. இப்படிச் சொல்லும் போது நாம் பொருள் முதல்வாதத்திற்கு முரணாகச் சொல்கிறோமா? இல்லை. ஏனெனில் வரலாற்றின் பொது வளர்ச்சியில் பருப்பொருட்களே சிந்தனையைத் தீர்மானிக்கின்றன. சமூக வாழ்வே - சமூக உணர்வை நிர்ணயிக்கிறது. இதை நாம் ஏற்றுக் கொள்ளும் அதே நேரத்தில் சிந்தனை என்பது பருப்பொருளின் மீதும்; சமுதாய உணர்வு என்பது சமுதாய வாழ்வின் மீதும்; மேலமைப்புகளானவை பொருளாதார அடித்தளத்தின் மீதும் பிரதிபலிப்பதை நாம் ஏற்று கொள்கிறோம். உண்மையில் அதை நாம் அங்கீகரிக்கவும் வேண்டும். இது, பொருள் முதல் வாதத்திற்கு எதிரானது அல்ல. மாறாக எந்திரவியல் பொருள் முதல்வாதத்தைத் தவிர்த்து, இயங்கியல் பொருள் முதல் வாதத்தை உயர்த்திப் பிடிக்கிறது.

முரண்பாட்டின் குறித்த தன்மையைப் பற்றி ஆராயும் போது நாம் இந்த இரு பக்கங்களையும் ஆராய வேண்டும்.அதாவது ஒரு வளர்ச்சிப் போக்கில் உள்ள முதன்மை முரண்பாட்டையும், முதன்மையற்ற முரண்பாடுகளையும் மற்றும் ஒரு முரண்பாட்டின் முதன்மைக் கூறையும், முதன்மையற்ற கூறையும் ஆராய வேண்டும். இது போன்று, முரண்பாட்டின் இவ்விரு பக்கங்களுடைய வேறுபட்ட இயல்புகளையும் ஆராயாவிட்டால் நாம் சாரமற்ற ஆய்வில் மூழ்கி, முரண்பாட்டைத் திட்டவட்டமாக புரிந்து கொள்ள இயலாதவர்களாவோம். இதனால் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான சரியான வழிமுறைகளைக் கண்டுபிடிக்க முடியாதவர்களாகவும் இருப்போம்.

முரண்பாட்டில் உள்ள இருபக்கங்களுடைய இந்த வேறுபட்ட இயல்பானது அல்லது குறித்த பண்பானது சக்திகளின் சமமற்ற தன்மையை புலப்படுத்துகின்றது. இந்த உலகில் உள்ள எப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருளும் முற்றானதாகவும், சீராகவும் வளர்வதில்லை. 'சமமான வளர்ச்சிக் கோட்பாட்டை' அல்லது 'சமநிலைக் கோட்பாட்டை' நாம் எதிர்க்க வேண்டும்.

மேலும், ஒரு முரண்பாட்டின் இந்தப் பருண்மையான கூறுகளின், ஒரு முரண்பாட்டின் வளர்ச்சிப் போக்கில் உள்ள அதன் முதன்மைக் கூறு, மற்றும் முதன்மையற்ற கூறின் மாற்றங்கள்தான், பழைய பண்பு களை விலக்குவதில், புதிய பண்புகளுக்கான சக்தியை உருவாக்கு கின்றன. ஒரு புரட்சிகர அரசியல் கட்சியானது அரசியல் விவகாரம், இராணுவ விவகாரம் இரண்டிலும், தன்னுடைய போர்த்தந்திரம் மற்றும் செயல் தந்திரக் கொள்கைகளைச் சரியாகத் தீர்மானிப்பதற்குப் பயன்படக் கூடிய ஒரு முக்கிய வழிமுறையாக அமைவது எது? முரண் பாடுகளில் உள்ள சமமற்ற, ஏற்றத் தாழ்வான நிலைகளைப் பற்றியும்; முதன்மை முரண்பாடு மற்றும் முதன்மையற்ற முரண்பாட்டைப் பற்றி யும்; ஒரு முரண்பாட்டின் முதன்மைக் கூறையும் முதன்மையற்றக் கூறையும் பற்றியும் செய்கிற ஆய்வே அவைகளைத் தீர்மானிப்பதற் குரிய வழிமுறையாக அமையும்.

பொதுவுடைமையாளர்கள் அனைவரும் இதில் சிறப்பாகக் கவ னம் செலுத்த வேண்டும்.



## 5. ஒரு முரண்பாட்டின் கூறுகளின் ஒத்த இயல்பும் போராட்டமும்

முரண்பாட்டின் எங்கும் நிறைந்த தன்மையையும், குறிப்பான தன்மையையும் பற்றி நாம் புரிந்து கொள்ள வேண்டுமெனில் ஒரு முரண்பாட்டின் கூறுகளிடையே உள்ள ஒத்த இயல்பும் போராட் டமும் என்ற பிரச்சனை பற்றிய ஆய்வுக்கு நாம் செல்ல வேண்டும்.

ஒத்த இயல்பு, ஒற்றுமை, ஒன்றிப்பு, ஒன்றிற்குள் ஒன்று ஊடுருவுதல், ஒன்றில் ஒன்று ஊடுருவிப் பரவியிருத்தல், ஒன்றை ஒன்று சார்ந்திருத்தல் (அல்லது தன் வாழ்விற்காக ஒன்றோடொன்று சார்தல்) ஒன்றோடொன்றான உறவு, அல்லது அவை ஒன்றுக் கொன்று ஒத்துழைத்தல் ஆகிய இத்தகைய சொற்கள் எல்லாம் ஒரே பொருளைக் குறிக்கும் வெவ்வேறான சொற்றொடர்கள் ஆகும்.

கீழ்க்காணும் இரு அம்சங்களையும் அவை குறிக்கும்.

**முதலாவதாக,** ஒரு பொருளின் வளர்ச்சிப் போக்கில் உள்ள ஒவ்வொரு முரண்பாட்டிலும் இரண்டு கூறுகள் இருக்கும். அந்தக் கூறுகளில் ஒவ்வொன்றும் மற்றொன்றின் வாழ்வை முன்கூட்டியே தீர்மானித்துக் கொள்கின்றன. அதோடு இவ்விரண்டு கூறுகளும் ஒரே பொருளுக்குள்ளேயே உடனுறைகின்றன.

**இரண்டாவதாக,** குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில், முரண்பட்ட இரு கூறுகளில் ஒவ்வொன்றும் தனக்கு எதிரானவைகளுடைய வடிவத்தை எடுக்கிறது. இதுதான் ஒத்த இயல்பு (Identity) என்பதற்கான பொருளா கும். இதைப் பற்றி லெனின் கூறியதாவது:

*எதிர்மறைகள் எப்படி ஒத்தவையாக இருக்க முடியும்? அவை எப் படி ஒத்தவையாக இருக்க முடிகிறது? (அவை எப்படி ஆகின்றன) -*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*எத்தகைய நிலைமைகளில் அவை ஒத்த இயல்புடையதாயிருக்கின் றன, ஒன்று மற்றதாகத் தாமாகவே உருமாறுகின்றன? - ஏன் மனித னின் உள்ளம் இவ்வெதிரானவைகளை, இறந்தவையாகவும் விறைத்துப் போனவையாகவும் கொள்ளவில்லை; உயிருள்ளதாக வும், நிபந்தனைக்குட்பட்டதாகவும் மாறக் கூடியதாகவும், தாமாகவே ஒன்று மற்றொன்றாக மாறக்கூடியதாகவும் பார்க்க வேண்டும் என் பதையே இயங்கியல் சுட்டிக் காட்டுகிறது.* [22]

அதற்கு என்னப் பொருள்?

ஒவ்வொரு வளர்ச்சிப் போக்கிலுமுள்ள முரண்பட்டக் கூறுகள் ஒன்றையொன்று விலக்குகின்றன; ஒன்றோடொன்று போராடுகின் றன; ஒன்றுக்கொன்று எதிரானவைகளாக இருக்கின்றன. உலகில் உள்ள அனைத்துப் பொருட்களின் வளர்ச்சிப் போக்கிலும் மனித சிந் தனை அனைத்திலும் இத்தகைய முரண்பட்ட தன்மையுள்ள கூறுகள் விதிவிலக்கின்றி அமைந்துள்ளன. ஒரு பொருளின் எளிமையான தொரு வளர்ச்சிப் போக்கானது ஓர் இணை (ஒரு சோடி) எதிரான வைகளை மட்டுமே கொண்டிருக்கின்றன. இதற்கு மாறாக, ஒரு சிக் கலான வளர்ச்சிப் போக்கு என்பது பலவற்றைக் கொண்டிருக்கிறது. இணை, இணையாக இருக்கும் இந்த எதிரானவைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு எதிரும் புதிருமாக உள்ளன. இவ்வாறுதான் புற உலகில் உள்ள எல்லாப் பொருட்களிலும் மனித சிந்தனைகள் அனைத்திலும் இவை இருக்கின்றன; இயக்கப்படுகின்றன.

இந்த எதிரானவைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு எதிரும் புதிரு மாக இயங்கிக் கொண்டிருக்கையில், ஒத்த இயல்போ, ஐக்கியமோ முற்றாக இல்லாமலிருக்கிறது; அப்படி இருக்கையில் ஒத்த இயல் பையோ, ஐக்கியத்தைப் பற்றியோ நாம் எப்படிப் பேச முடியும்?

உண்மையிலேயே, எந்த ஒரு முரண்பட்டக் கூறும் தனித்து நிற்க முடியாது; அதன் எதிரானக் கூறு என்ற ஒன்று இல்லாவிட்டால், ஒவ் வொன்றும் தன்வாழ்வுக்கான நிலைமையையே இழந்துவிடும்.

சற்றே சிந்தித்துப் பாருங்கள்! ஒரு பொருளின் அல்லது மனித னுடைய சிந்தனையில் உள்ள ஒரு கருத்தின் எந்த ஒரு முரண்பட்ட கூறும் சுயேச்சையாக நிற்க முடியுமா? முடியாது.

வாழ்வு இன்றேல் - சாவு இல்லை; சாவு இன்றேல் - வாழ்வு இல்லை. ''மேல்'' இன்றேல் ''கீழ்'' இல்லை; ''கீழ்'' இன்றேல் ''மேல்'' இல்லை. நன்மை இன்றேல் தீமை இல்லை; தீமை இன்றேல், நன்மை இல்லை. வசதி இன்றேல், கஷ்டமில்லை; கஷ்டமின்றேல், வசதியில்லை. பெரு நிலை உடைமையாளர்கள் இன்றேல், குத்தகை



விவசாயிகள் இல்லை; குத்தகை விவசாயிகள் இன்றேல், பெரு நில உடைமையாளர்கள் இல்லை.

அதேபோன்று முதலாளிய வர்க்கம் இல்லையேல் பாட்டாளி வர்க்கம் இல்லை; பாட்டாளி வர்க்கம் இல்லையேல் முதலாளிய வர்க்க மில்லை. நாடுகள் மீது ஏகாதிபத்திய அடக்குமுறை இல்லையெனில் குடியேற்ற நாடுகளோ, அரைக் குடியேற்ற நாடுகளோ இல்லை; குடியேற்ற நாடுகளோ, அரைக் குடியேற்ற நாடுகளோ இல்லை என்றால் நாடுகள் மீதான ஏகாதிபத்திய ஒடுக்குமுறை இல்லை.

அனைத்து எதிரானவைகளின் நிலைமைகளும் இத்தகையது தான். குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில் ஒருபுறம், அவை ஒன்றை ஒன்று எதிர்க்கின்றன; மறுபுறம், அவை ஒன்றுக்கொன்று உறவோ டும், ஒன்றில் ஒன்று ஊடுருவியும், ஒன்றில் மற்றது பரவியும், ஒன்றையொன்று சார்ந்தும் இருக்கின்றன. இத்தகையதொரு பண்பு நிலையைத்தான் ஒத்த இயல்பு எனக் கூறலாம்.

குறிப்பிட்ட நிலைமைகளில் முரண்பட்ட கூறுகள் அனைத்தும் ஒத்த இயல்பற்ற (Non-Identity) பண்பு நிலையைக் கொண்டிருக் கின்றன. அந்நேரத்தில், அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை யாகவும் இருக்கின்றன. ''எதிரானவை எப்படி ஒத்த இயல்புடை யவையாக இருக்க முடியும்? என இயங்கியல் ஆராய்கிறது'' என்று கூறும்போது லெனின் இதையே கருதினார். அவை எப்படி ஒத்த இயல்புடையவையாய் இருக்க முடியும்? அதற்கான காரணம், ஒன்று மற்றொன்றின் வாழ்வுக்கான நிபந்தனையாக ஆகிறது. இதுதான் ஒத்த இயல்பு என்று கூறுவதின் முதல் கருத்தாகும்.

ஆனால் முரண்பட்டக் கூறுகளில் ஒன்று மற்றொன்றின் வாழ்விற்கான முன்நிபந்தனையாகிறது. அவற்றிற்கிடையே ஒத்த இயல்புண்டு; அதனால் அவை ஒரே பொருளுக்குள்ளேயே சக வாழ்வு நடத்த முடியும்; ஆக இவைகளை மட்டும் நாம் கூறினால் போதுமா? இல்லை. இவைகளை மட்டும் நாம் கூறினால் போதாது. ஒவ்வொன்றும் தன் வாழ்விற்காக மற்றொன்றுடன் சார்ந்திருப்பதாக மட்டும் கூறினால் இவ்விஷயம் முடிந்து விடுகிறதா? இல்லை. இதை விட முக்கியமானதொரு கருத்துண்டு. அது என்னவெனில், அவை ஒன்று மற்றொன்றாக மாறுவது என்பதாகும். அதாவது, குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில், ஒரு பொருளில் உள்ள முரண்பட்ட கூறுகளில் ஒவ்வொன்றும் தன்னை, தன்னுடைய எதிரானதாக மாற்றிக் கொள்கிறது. தனது நிலையைத் தன்னுடைய எதிரானதின் நிலைக்கு மாற்றுகின்றது. தனது பண்பை தன் எதிரானதின் பண்பாக மாற்றிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்கிறது. இது முரண்பாட்டின் ஒத்த இயல்பின் இரண்டாவது கருத்தாகும்.

இவ்விடத்திலும் ஒத்த இயல்பு ஏன் இருக்கின்றது? நீங்களே சற்றுப் பாருங்கள்! ஒரு காலத்தில் ஆளப்பட்ட பாட்டாளி வர்க்கம், புரட்சியினால் ஆட்சியாளனாக தன்னை மாற்றிக் கொண்டது; முன்னால் ஆட்சியாளனான முதலாளிய வர்க்கம் ஆளப்படுவோனாக மாற்றப்பட்டு விட்டது; அதாவது தொடக்கக் காலத்தில் தனக்கு எதிரானதான பாட்டாளி வர்க்கம் வகித்த நிலைக்கு தன்னை மாற்றிக் கொண்டது. இது ஏற்கனவே சோவியத் ஒன்றியத்தில் ஏற்பட்டு விட்டது. இந்நிகழ்ச்சி போலவே, இது இனி உலகெங்கும் நடைபெறும். குறிப்பிட்ட நிலைமைகளில் ஒன்றுக்கொன்றான உறவும், எதிரானவைகளின் ஒத்த இயல்பும் இல்லை என்றால் இத்தகையதொரு மாற்றம் எப்படி ஏற்பட்டு இருக்க முடியும்?

இப்போதைய நவ சீன வரலாற்றில், ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில் ஒரு குறிப்பிட்ட ஆக்கப்பூர்வமான பங்கை வகித்த கோமிங்டாங் கட்சியானது, 1927-ஆம் ஆண்டுக்குப் பின்னர், எதிர்ப் புரட்சிக்கானதோர் கட்சியாக மாறியது. தனக்கே உரிய இயல்பான வர்க்கப் பண்பையும், ஏகாதிபத்தியத்திற்கு அடிவருடும் தன்மையையும் (இவை அதற்குரிய சூழ்நிலைமைகள்) அது பெற்று இருந்ததுமே அதற்கான அடிப்படைக் காரணம். ஆனால் சீனாவிற்கும் ஜப்பானுக்கும் இடையே இருந்த முரண்பாடுகள் கூர்மையடைந்தாலும், பொதுவுடைமைக் கட்சியின் ஐக்கிய முன்னணிக் கொள்கையாலும் (இத்தகையதொரு சூழ்நிலைமைகளினால்) புதியதொரு மாற்றத்தை அது மேற்கொள்ள நேர்ந்தது. அதாவது கோமிங்டாங் கட்சியானது, ஜப்பானை எதிர்ப்பதற்கு உடன்பட கட்டாயப்படுத்தப்பட்டது. முரண்பாட்டில் உள்ள பொருட்கள் ஒன்று மற்றொன்றாக மாறுகின்றன. அதனால் இங்கே முரண்பாட்டின் திட்டவட்டமான ஒத்த இயல்பு ஒன்று இருக்கிறது.

ஒரு காலத்தில் நிலங்கள் நிலப்பிரபு வர்க்கத்தின் உடைமையாக இருந்தன. நமது நிலப்புரட்சியின் நேரத்தில், (Agrarian revolution) அந்த வர்க்கம், நிலங்களை இழந்த ஒரு வர்க்கமாக மாற்றப்பட்டது. அதேபோன்று ஒரு காலத்தில் நிலமற்றவர்களாய் இருந்த விவசாயிகள், நிலம் பெற்ற சிறிய தனியார் உடைமை முறை கொண்டவர்களாக மாற்றப்பட்டனர். நிலப்புரட்சியானது இத்தகையதொரு போக்கைக் கொண்டுள்ளது. இதுபோன்றதொரு நிகழ்முறை மற்றொரு தடவையும் கூட ஏற்படும்.



குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில், கொண்டிருத்தல் - கொண்டிருக்காமை; பெறுதல் - இழத்தல் ஆகியவை ஒன்றுக்கொன்று உறவு கொண்டு, தொடர்புடையனவாயிருக்கின்றன. ஒரு விஷயத்தின் இந்த இரண்டு பக்கங்களுக்கிடையிலும் ஒத்த இயல்பு உண்டு.

சோசலிச சமூக அமைப்பில், தனியார் விவசாய உடைமைமுறை, சோசலிச விவசாய பொதுவுடைமை முறையாக மாறுதல் அடைகின்றது - மாற்றப்படுகின்றது. இது சோவியத் ஒன்றியத்தில் ஏற்கனவே ஏற்பட்டுவிட்டது. அது போலவே உலகெங்கும் இது ஏற்படும். தனியார் சொத்துரிமையிலிருந்து, பொதுச் சொத்துரிமைக்குச் செல்லும் பாலமொன்றுண்டு. அது தத்தவத்தில் ஒத்த இயல்பு, ஒன்றுக்கொன்று பண்பு நிலை மாற்றம் அடைதல், அல்லது ஒன்றில் ஒன்று ஊடுருவுதல் எனப்படுகிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையோ, மக்களின் சர்வாதிகாரத்தையோ உறுதிப்படுத்துவது என்றால் என்ன? உண்மையில், இந்த பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஒழித்து, அனைத்து அரசு அமைப்பு முறைகளும் அழித்தொழிக்கப்படுகின்ற, இதைவிட மேலான நிலைக்கு முன்னேறுவதற்கான சூழ்நிலைமைகளைத் தயாரிப்பது என்பதே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உறுதிப்படுத்துவது என்பதன் பொருளாகும்.

பொதுவுடைமைக் கட்சியை உருவாக்கி, வளர்ப்பதென்பது, உண்மையில் பொதுவுடைமைக் கட்சியையும் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளையும் இல்லாது ஒழிப்பதற்கான சூழ்நிலைமைகளைத் தயாரிப்பதாகும். அதேபோன்று, பொதுவுடைமைக் கட்சியின் தலைமையில் ஒரு புரட்சிகர இராணுவத்தைக் கட்டி அமைப்பது, மற்றும் புரட்சிகரப் போரினை நடத்துவது என்பதானது - உண்மையில் போர்களை நிரந்தரமாக இல்லாது அழித்தொழிக்கும் நிலைமைகளை உருவாக்குவது என்பதாகும். அதே சமயத்தில் இவ்வெதிரானவைகள் (எதிர்மறைகள்) அனைத்தும் ஒன்றை ஒன்று நிறைவு செய்யக் கூடியதாகவும் உள்ளன.

போரும், (அமைதியும்) சமாதானமும் தாமாகவே ஒன்று மற்றொன்றாக மாறிக் கொள்கின்றன. எடுத்துக் காட்டாக முதல் உலக யுத்தத்திற்குப் பின்னர் சமாதானம் (அமைதி) உருவாக்கப்பட்டது. சீனத்தின் உள்நாட்டுப் போரானது, உள்நாட்டுச் சமாதானத்திற்கு இடமளித்து, இப்போது நிறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே சமாதானம் யுத்தமாக ஆக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக கோமிங்டாங் - பொதுவுடைமைக் கட்சியின் ஒத்துழைப்பு 1927-ல் யுத்தமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆக்கப்பட்டது. இன்றைய உலக அமைதி நிலைமையானது மற்றொரு போராக (இரண்டாம் உலகப் போராக) மாற்றப்படலாம். ஏன் இப்படி? ஏனெனில், வர்க்க சமுதாயத்தில் யுத்தம், சமாதானம் போன்ற முரண்பட்ட விஷயங்கள் குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில் ஒத்த இயல்பை பெற்றுள்ளதே ஆகும்.

முரண்பட்டவை அனைத்தும் ஒன்றுக்கொன்று உறவு கொண்டவையாக இருக்கின்றன. குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில் அவை ஒரே பொருளுக்குள்ளேயே உடனுறைகின்றன. அது மட்டுமல்லாமல், வேறு ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில் தாமாகவே ஒன்று மற்றொன்றாக மாறவும் செய்கின்றன. இதுதான் எதிரானவைகளின் ஒத்த இயல்பு என்பதன் முழு கருத்தாகும். **''அவை எப்படி ஒத்தவையாக முடிகின்றது.** (அவை எப்படி ஆகின்றன) - **என்ன நிலைமைகளில் அவை ஒத்தவையாயிருக்கின்றன - ஒன்று மற்றொன்றாக தாமாகவே மாறுகின்றன''** என்பதைப் பற்றி ஆராயும்போது **லெனின்** இதையேக் கருதினார்.

**''ஏன் மனித மனம் இவ்வெதிரானவைகளை இறந்தவையாகவும், விறைத்துப் போனவையாகவும் கொள்ளவில்லை? உயிருள்ளவையாகவும், நிபந்தனைக்குட்பட்டவையாகவும் மாறக் கூடியனவாகவும், தாமாகவே ஒன்று மற்றதாக மாறக் கூடியனவாகவும் ஏன் கொள்ள வேண்டும்?''**

காரணம் என்னவெனில், புறப் பொருட்கள் உண்மையில் இவ்வாறுதான் இருக்கின்றன. புறப் பொருட்களில் இருக்கும் எதிரானவைகளின் ஒற்றுமை அல்லது ஒத்த இயல்பு, இறந்ததாகவோ விறைத்துப் போனதரகவோ இராது; உயிருள்ளவையாகவும், நிபந்தனைக்குட்பட்டவையாகவும், மாறக் கூடியவையாகவும், தற்காலிகமானவையாகவும், சார்புடையவையாகவும் உள்ளதென்பதே உண்மை.

குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில் ஒவ்வொரு முரண்பட்ட கூறும் தானாகவே தன்னுடைய எதிரானவையாக மாறிக் கொள்கிறது. இத்தகைய கருத்தே, மனித சிந்தனையில் பிரதிபலிக்கப்பட்டு, மார்க்சியத்தின் உலகக் கண்ணோட்டமான பொருள் முதல்வாத இயங்கியலாக ஆகியது.

எதிரானவைகளை உயிருள்ளனவாகவும், நிபந்தனைக்குட்பட்டனவாகவும், மாறக்கூடியனவாகவும், தானாகவே ஒன்று மற்றொன்றாக மாறுவனவாகவும் பார்க்காமல்; அவற்றை இறந்தனவாகவும், விறைத்துப் போனவையாகவும், கருதுபவர்கள் நிலையியலாளர்கள்



ஆவர். கடந்த கால, மற்றும் தற்போதைய பிற்போக்கு ஆளும் வர்க்கங்களும், அவற்றுக்குத் தொண்டூழியம் செய்பவர்களும் கூட இத்தகைய நிலையியலாளர்களாக உள்ளனர். மேலும் இத்தகையவர்கள், இந்த தவறான கருத்தை எங்கும் பரப்பி, மக்களை ஏமாற்றி, அதன்மூலம் தங்களின் ஆட்சியை நீடித்திருக்கச் செய்கின்றனர். இத்தகைய பிற்போக்காளர்கள், நிலையியலாளர்கள் ஆகியோரின் தவறான கருத்துக்களை அம்பலப்படுத்தி, ஒவ்வொரு பொருட்களிலும் இயல்பாகவே அமைந்துள்ள இயங்கியலைப் பிரச்சாரம் செய்து, அதன் மூலம் - நிகழ்ச்சிகளின் - விஷயங்களின் மாற்றங்களை வேகப்படுத்தி, புரட்சியின் இலக்கை அடைவதே பொதுவுடைமையரின் கடமையாகும்.

குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில் எதிரானவைகளின் ஒத்த இயல்பு என்பதைப் பற்றி பேசும்போது நாம் எதைக் குறிப்பிடுகிறோம்? எதிரானவைகளின் ஒத்த இயல்பு என்று நாம் குறிப்பிடும் போது, உண்மையான, பருண்மையான எதிரானவைகளையும், எதிரானவைகள் (எதிர் மறைகள்) ஒன்று மற்றொன்றாக மாறும் உண்மையான, பருண்மையான மாற்றங்களையுமே குறிப்பிடுகிறோம்.

காவியக் (புராணக்) கதைகளில் கூட எண்ணற்ற மாற்றங்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக, ''ஷான் ஹய் சிங்''கில் சூரியனுடன் 'குவா பு வின்' ஓட்டப் பந்தயம்[23]; ''ஹுவய் நன் சு''-வில் 'யீ' ஒன்பது சூரியன்களை எய்து வீழ்த்தியது[24]; ''ஸி யு சி''-யில் குரங்கரசன் மேற்கொண்ட எழுபத்திரண்டு உருமாற்றங்கள்[25]. ''லியௌ சாய்''யின் விசித்திரக் கதைகளில்[26] பிசாசுகளும், நரிகளும் மனிதப் பிறவிகளாக உருமாற்றப்பட்ட எண்ணற்ற கிளைக் கதைகள் ஆகியவைகளில் இவற்றைக் காணலாம்.

ஆனால் இந்தக் கட்டுக் கதைகளில் உள்ள எதிரானவைகளின் மாற்றங்கள் பருண்மையான முரண்பாடுகளைப் பிரதிபலிக்கும் பருண்மையான மாற்றங்கள் அல்ல. இவைகள் அனைத்தும், எதிரானவைகளின் (எதிர்மறைகளின்) ஒன்று மற்றொன்றாக மாறும் எண்ணிலடங்காத யதார்த்தமான, சிக்கலான முரண்பாடுகளால் மனித மனங்களின் அகக் கண்முன் கொண்டுவரப்பட்ட அப்பாவித்தனமான, கற்பனையான, அகக் கருத்துடைய உருமாற்றங்கள்தான்.

**''எல்லாப் புராணக் கதைகளும் கற்பனையிலும் அதற்கூடாகவும் இயற்கைச் சக்திகளைத் தன்வயப்படுத்தி ஆதிக்கம் செலுத்தி, அவற்றிற்கு உருகொடுக்கின்றன. ஆகவே மனிதன் இயற்கைச் சக்திகளுக்கு மேலாக ஆதிக்கம் பெற்றவுடன் இவை மறைந்து விடுகின்றன''[27]** என **மார்க்சு** இதைப் பற்றிக் கூறினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காவியக் கதைகளில் உள்ள (சிறுவர் கதைகளிலும் கூட இருக்கும்) எண்ணற்ற மாற்றங்கள் அனைத்தும், இயற்கைச் சக்திகளை மனிதன் அடிமைப்படுத்தியதைக் கற்பனை கலந்து வர்ணிப்பதால், மனிதனுக்கு அவை களிப்பூட்டுகின்றன. அத்துடன் மார்க்சு குறிப்பிட்டுக் கூறியது போல, அவை "நிரந்தரக் கவர்ச்சி" உடையனவாய் இருக்கின்றன. ஆனால் காவியக் கதைகள், குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில் உள்ள பருண்மையான முரண்பாடுகளிலிருந்து உருவாக்கப்படாததால், அவை யதார்த்தத்தின் அறிவியல் ரீதியான பிரதிபலிப்பாக இருப்பதில்லை. அதாவது, இதை வேறு வார்த்தைகளில் குறிப்பிட்டுச் சொன்னால், காவியக் கதைகளிலோ சிறுவர் கதைகளிலோ ஒரு முரண்பாட்டை ஏற்படுத்தும் கூறுகள் ஒரு கற்பனையான ஒத்த இயல்பை மாத்திரம் கொண்டுள்ளனவேயொழிய, அவை ஒரு பருண்மையான ஒத்த இயல்பைக் கொண்டு இருக்கவில்லை. யதார்த்தமான மாற்றங்களில் உள்ள ஒத்த இயல்பின் அறிவியல் ரீதியான பிரதிபலிப்பு மார்க்சிய இயங்கியலாகும்.

ஒரு முட்டையைக் குஞ்சாக்க முடிகிறது; ஆனால் ஏன் ஒரு கல்லைக் குஞ்சாக்க முடிவதில்லை? போருக்கும் - அமைதிக்கும் இடையில் ஒத்த இயல்பு இருப்பது ஏன்? போருக்கும் - கல்லுக்கும் இடையில் எதுவுமேயில்லையே? ஏன்? ஒரு மனித உயிர், பிரிதொரு மனித உயிருக்குத் தோற்றங் கொடுக்கிறதேயொழிய வேறொன்றுக்கு ஏன் தோற்றமளிப்பதில்லை? தேவையான குறிப்பிட்டச் சூழ்நிலைமைகளில் மட்டுமே எதிரானவைகளின் ஒத்த இயல்பு இருக்கிறது என்பதே இதற்கான ஒரே காரணம். இத்தேவையான குறிப்பிட்டச் சூழ்நிலைமைகள் இல்லாவிடில் எந்த விதமான ஒத்த இயல்பும் இருக்காது.

1917-ல் ரஷ்யாவில் முதலாளிய - ஜனநாயக பிப்ரவரிப் புரட்சி, பாட்டாளி வர்க்க சோசலிச அக்டோபர் புரட்சியுடன் நேரடியாக இணைக்கப்பட்டிருக்கும் போது, பிரான்ஸ் நாட்டில் முதலாளிய ஜனநாயகப் புரட்சி, ஒரு சோசலிசப் புரட்சியுடன் நேரிடையாக இணைக்கப்பட்டிருக்காமல் இருந்தது. அத்தோடு, 1871-ஆம் ஆண்டின் **பாரீஸ் கம்யூனும்**[28] இறுதியில் ஏன் தோல்வி அடைய நேரிட்டது?

அதேபோல், மங்கோலிய, மத்திய ஆசிய நாடோடி அமைப்பு முறை சோசலிச முறையுடன் ஏன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது? அதேநேரத்தில், மேற்கத்திய நாடுகளில் ஏற்பட்ட பழைய வரலாற்றுப் பாதையை மேற்கொள்ளாமல், முதலாளிய வர்க்கச் சர்வாதிகாரக் கூட்டத்திற்கு ஊடாகச் செல்லாமல், சீன புரட்சியானது ஒரு



முதலாளித்துவ எதிர்காலத்தைத் தவிர்த்து, நேரடியாக சோசலிசத்துடன் இணைக்கப்பட முடிவது ஏன்?

இவைகளுக்கான ஒரே காரணம் அந்த அந்தக் காலத்தின் பருண்மையான நிலைமைகளே ஆகும். குறிப்பிட்ட தேவையான நிலைமைகள் இருக்கும் போது, பொருட்களின் வளர்ச்சிப் போக்கில் குறிப்பிட்ட முரண்பாடுகள் தோற்றம் பெறுகின்றன. மேலும் அவைகளில் உள்ள எதிரானவைகள் ஒன்றை ஒன்று சார்ந்தவையாக இருப்பதோடு, ஒன்று மற்றொன்றாக மாற்றப்பட்டதாகவும் ஆகின்றன. இவை இல்லாவிடில் இதில் எதுவுமே சாத்தியமாகாது.

இதுதான் ஒத்த இயல்பு பற்றிய பிரச்சனையாகும். அப்படியாயின் போராட்டம் என்றால் என்ன? ஒத்த இயல்புக்கும், போராட்டத்திற்கும் இடையில் உள்ள உறவு என்ன? இதைப் பற்றி லெனின் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> **"எதிரானவைகளின் ஐக்கியம் (ஒத்திருத்தல், ஒத்த இயல்பு, ஒத்த செயல்) நிபந்தனைக்குட்பட்டது; தற்காலிகமானது; மாற்றத்துக்குள்ளாவது; சார்புடையது ஆகும். வளர்ச்சியும், இயக்கமும் சார்பற்றவையாயிருப்பது போலவே ஒன்றுக்கொன்று தனிப்பட்ட எதிரானவைகளின் போராட்டமும் சார்பற்றது (முழுமுற்றானது) ஆகும்.**[29]

லெனினுடைய இந்த கூற்றுக்குப் பொருள் என்ன?

எல்லா வளர்ச்சிப் போக்குகளும் ஒரு ஆரம்பத்தையும், ஒரு முடிவையும் கொண்டுள்ளன; அனைத்து வளர்ச்சிப் போக்குகளும் தனக்கு எதிரானவையாகத் தம்மைத் தாமே மாற்றிக் கொள்கின்றன. அனைத்து வளர்ச்சிப் போக்குகளிலும் இடைவிடாமல் தொடர்ந்து நிகழும் இந்தத் தன்மையானது சார்புடையதாகும். ஆனால் ஒரு போக்கானது மற்றொன்றாக மாறும் மாற்றத்தில் வெளிப்படக் கூடிய மாறும் தன்மையானது சார்பற்றதாகும்.

அனைத்துப் பொருட்களிலும் ஒப்பீட்டளவான ஓய்வு, தெட்டத் தெளிவான மாற்றம் என இரண்டு இயக்க நிலைகள் உள்ளன. இவ்விரண்டும், ஒரு பொருளிலுள்ள முரண்பட்ட இரு மூலக் கூறுகளுக்கிடையே நடைபெறும் போராட்டத்தினாலேயே ஏற்படுகின்றன.

ஒரு பொருளானது முதலாவது இயக்க நிலையிலிருக்கும் போது அப்பொருள் பண்பியலான (குணரீதியான) மாற்றத்தை அடைவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தில்லை. அளவு ரீதியான மாற்றத்தை மட்டுமே பெறுகிறது; அத்தோடு வெளித் தோற்றத்தில் ஒய்வு நிலையில் இருப்பது போலவும் அப் பொருள் காணப்படுகிறது.

அப்பொருள் இரண்டாவது இயக்க நிலையில் இருக்கும்போது, முதலாவது நிலையிலிருந்த அளவு ரீதியான மாற்றம் ஏற்கனவே ஒரு உச்சக் கட்டத்தை அடைந்து, ஒற்றுமை நிலையிலுள்ள அப் பொருளைப் பிரிக்கின்றது. அதற்குப் பிறகு ஒரு பண்பு ரீதியான மாற்றம் விளைகிறது. அதனால் தெட்டத் தெளிவானதொரு மாற்றம் தோன்றுகிறது.

நாம் தினசரி நடைமுறை வாழ்க்கையில் காணும் இந்த ஒற்றுமை, ஒருமைப்பாடு, சேர்க்கை, இணக்கம், சமன்பாட்டு நிலை, தேக்க நிலை, இக்கட்டான நிலை, ஓய்வு, இடைவிடா நிகழ்வு, சமநிலை, உறுதிப் பாடு, கவர்ச்சி இன்ன பிற எல்லாம் அளவியல் ரீதியிலான மாற்ற நிலை யிலுள்ள பொருட்களின் தோற்றங்களே.

இதற்கு மாறாக ஒற்றுமை நிலையில் உள்ள பொருட்களின் ஒற்றுமை முறிவு, அதாவது இந்த ஒருமைப்பாடு, சேர்க்கை, இணக் கம், சமன்பாட்டு நிலை, தேக்கநிலை, இக்கட்டான நிலை, ஓய்வு, இடைவிடா நிகழ்வு, சமநிலை, உறுதிப்பாடு, கவர்ச்சி ஆகிய இவை களின் அழிவு, மற்றும் ஒவ்வொன்றும் தன்னுடைய எதிரானதாக மாறு வது ஆகிய அனைத்தும் பண்பு ரீதியான மாற்ற நிலையிலுள்ள பொருட்களின் தோற்றங்களாகும். ஒரு வளர்ச்சிப் போக்கு (process) மற்றொன்றாக மாற்றமடைவதாகும்.

பொருட்கள் முதலாவது இயக்க நிலையிலிருந்து இரண்டாவது நிலைக்குத் தம்மைத் தாமே இடைவிடாது மாற்றிக் கொள்கின்றன. எதிரானவைகளின் போராட்டம் இரண்டு நிலைகளிலும் தொடர்ந்து நடைபெறுகிறது. ஆனால் முரண்பாடு இரண்டாவது நிலையூடாகவே தீர்க்கப்படுகிறது. ஆதனால்தான் நாம், எதிரானவைகளின் ஒற்றுமை நிபந்தனைக்கு உட்பட்டதாகவும், தற்காலிகமானதாகவும், சார்புடை யதாகவும் இருக்க, ஒன்றையொன்று தனிப்பட்ட எதிரானவைகளின் போராட்டம் சார்பற்றதாக இருக்கிறது எனக் கூறுகிறோம்.

இரண்டு எதிரெதிரான மூலக்கூறுகளுக்கிடையே ஒத்த இயல்பு இருப்பதன் காரணமாக அவை ஒரே பொருளிற்குள்ளேயே உடனுறைவதோடு தாமாகவே ஒன்று மற்றொன்றாக மாறிக் கொள் கின்றன என்று நாம் குறிப்பிட்ட போது, நாம் இந்த சார்புத் தன் மையைப் பற்றியே கூறினோம். அதாவது, குறிப்பிட்ட சூழ்நிலைமை



களில் இரண்டு முரண்பட்ட பொருட்கள் ஒற்றுமைபட்டு தாமாகவே ஒன்று மற்றொன்றாக மாற முடியும். ஆனால் இந்த நிலைமை களில்லாதபோது அவற்றால், ஒரு முரண்பாட்டை ஏற்படுத்தவும், ஒரே பொருளிற்குள்ளேயே உடனுறையவும் தாமாகவே ஒன்று மற்றொன்றாக மாறவும் முடியாது. குறிப்பிட்ட நிலைமைகளில் மாத்திரமே எதிரானவைகளின் ஒத்தஇயல்பு காணப்படுவதாலேயே நாம், ஒத்தஇயல்பை நிபந்தனைக்குட்பட்டது என்றும், சார்புடை யது என்றும் கூறியுள்ளோம்.

எதிரானவைகளுக்கு இடையிலானப் போராட்டம் ஒரு போக்கில் தொடக்கம் முதல் இறுதிவரை ஊடுருவிப் பரவியுள்ளதோடு; ஒரு போக்கைத் தானாகவே இன்னொன்றாக மாறச் செய்கிறது. அது எங்கும் பரந்திருக்கிறது என்றும், ஆகையால் போராட்டமானது நிபந்தனையற்றதும் சார்பற்றதும் ஆகும் என்றும் நாம் மேலும் கூறுகிறோம்.

நிபந்தனைக்குட்பட்ட சார்புடைய ஒத்த இயல்பு, நிபந்தனை யற்ற சார்பற்ற போராட்டம் ஆகியவற்றின் சேர்க்கை, அனைத்துப் பொருட்களிலும் எதிரானவைகளின் இயக்கத்தை ஏற்படுத்துகிறது.

**''ஒன்றை ஒன்று எதிர்க்கும் பொருட்கள், ஒன்றையொன்று நிறைவு செய்யக் கூடியனவாகவும் உள்ளன''**[30] என்று சீன மக்களாகிய நாங்கள் அடிக்கடிக் கூறுகிறோம். அதாவது, ஒன்றுக்கொன்று எதிரான பொருட்கள் ஒத்த இயல்புடையனவாயுள்ளன. இந்தக் கூற்று இயங் கியலானது; இது நிலையியலுக்கு மாறானது. 'ஒன்றை ஒன்று எதிர்ப் பது' என்பது இரு முரண்பட்ட கூறுகளின் பரஸ்பரம் தனிப்பட்ட தன்மையை அல்லது போராட்டத்தைக் குறிக்கிறது. குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில் இரண்டு முரண்பட்ட கூறுகள் ஐக்கியப்பட்டு ஒத்த இயல்பைப் பெறுகின்றன என்பதே 'ஒன்றை ஒன்று நிறைவு செய்வது' என்பதன் முழு கருத்தாகும். மேலும் போராட்டமானது ஒத்த இயல்பில் இயல்பாகவே இருக்கிறது. போராட்டமின்றி ஒத்த இயல்பில்லை.

அதேபோல ஒத்த இயல்பில் போராட்டமுண்டு. குறித்த இயல்பில் எங்கும் நிறைந்த இயல்புண்டு. தனிப்பண்பில் பொதுப் பண்புண்டு. லெனினை மேற்கோள் காட்டினால், ...**''சார்பு நிலையில் சார்பற்ற நிலையுண்டு''**[31] என்று கூறலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 6. முரண்பாட்டில் பகைமைத் தன்மையின் இடம்

எதிரானவைகளின் போராட்டம் என்ற கேள்வியானது, பகைமைத் தன்மை என்றால் என்ன? என்ற கேள்வியையும் உள்ளடக்கியதே. 'பகைமைத் தன்மையானது' எதிரானவைகளுடைய போராட்டத்தின் ஒரு வடிவம்தானே தவிர, அது அதன், ஒரே ஒரு வடிவம் மட்டுமே அல்ல என்பதே நமது மறுமொழியாகும்.

எதிரானவைகளின் போராட்டம் என்பதின் குறிப்பிட்ட வெளிப்பாடாகவே, மனித குல வரலாற்றில் வர்க்கங்களுக்கிடையே உள்ள பகைமைத் தன்மை விளங்குகிறது. சுரண்டும் மற்றும் சுரண்டப்படும் வர்க்கங்களுக்கிடையே இருக்கும் முரண்பாட்டைப் பாருங்கள்! இத்தகைய முரண்பட்ட வர்க்கங்கள் ஒரே சமயத்தில், அது அடிமைச் சமுதாயமானாலும் சரி, நிலப்பிரபுத்துவ சமுதாயமானாலும் சரி, அல்லது முதலாளித்துவச் சமுதாயமானாலும் சரி, அது எதுவாக இருந்த போதிலும்; அந்த சமூகத்தில் நீண்ட காலமாக ஒன்றாக வாழ்வதோடு, ஒன்றுடன் ஒன்று போராடவும் செய்கின்றன. ஆனால் அவ்விரு வர்க்கங்களுக்கும் இடையே உள்ள முரண்பாடு ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு வளரும் வரை, வெளிப்படையான பகைமை வடிவத்தைப் பெற்று புரட்சியாக வளர்வதில்லை. வர்க்க சமுதாயத்தில் அமைதியானது - போராக மாறுவதற்கும் இது பொருந்தக் கூடியதே ஆகும்.



ஒரு வெடி குண்டானது, வெடிப்பதற்கு முன் குறிப்பிட்ட நிலைமைகளில் எதிரானவை ஒன்றாயிருக்கின்ற ஒரு பொருளாக இருக்கின்றது. ஒரு புதிய நிலைமை (நெருப்புப் பிடித்தல்) ஏற்பட்டவுடன்தான் அது வெடிக்கின்றது. பழைய முரண்பாடுகளைத் தீர்த்து, புதிய பொருட்களை உருவாக்குவதற்கு, இறுதியில் வெளிப்படையான மோதல் வடிவத்தைப் பெறும் இயற்கை நிகழ்ச்சிகளிலெல்லாம் இதையொத்த நிலைமைதான் ஏற்படுகின்றது.

மேற்கண்ட உண்மையைப் புரிந்து கொள்வது மிக முக்கியமானது. வர்க்க சமுதாயத்தில், புரட்சிகளும் புரட்சிப் போர்களும் தவிர்க்கப்பட முடியாதவை; அவை இல்லாவிட்டால், சமுதாய வளர்ச்சியின் எந்த ஒரு பாய்ச்சலையும் நிறைவேற்ற முடியாது; பிற்போக்கு ஆளும் வர்க்கங்களைத் தூக்கியெறிவது சாத்தியமாகாது; மக்கள் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதும் முடியாத காரியம். இவற்றைப் புரிந்து கொள்ள மேற்கண்ட உண்மை எங்களுக்குத் துணை செய்கிறது.

சமுதாயப் புரட்சி தேவையற்றது, சாத்தியமற்றது என்பனப் போன்ற பிற்போக்குவாதிகளின் ஏமாற்றுப் பிரச்சாரங்களைப் பொதுவுடைமையாளர்கள் அம்பலப்படுத்த வேண்டும். பொதுவுடைமையர் சமுதாயப் புரட்சிப் பற்றிய மார்க்சிய - லெனினிய தத்துவத்தை உறுதியாக உயர்த்திப் பிடிக்க வேண்டும். சமுதாயப் புரட்சி முற்றிலும் தேவையானது மட்டுமல்ல. அது முற்றிலும் செயல்படுத்தப்படவுங் கூடியதே என்பதையும் இந்த அறிவியல்பூர்வமான உண்மையை முழு மனித குல வரலாறும், சோவியத் ஒன்றியத்தின் வெற்றியும் உறுதிப்படுத்தியுள்ளது என்பதையும், மக்களுக்கு உணர்த்தும் வகையிலான நடவடிக்கைகளை பொதுவுடைமையர் மேற்கொள்ள வேண்டும்.

இருப்பினும், எதிரானவைகளின் ஒவ்வொரு குறிப்பிட்ட போராட்டத்தின் நிலைமைகளைப் பற்றி நாம் பருண்மையாக ஆராய வேண்டும். மேலே ஆராய்ந்த அந்த விதியை நாம் எல்லாவற்றிலும் தன்னிச்சையாகப் பயன்படுத்தக் கூடாது. முரண்பாடும் போராட்டமும் எங்கும் நிறைந்ததாகும். அவை சார்பற்றவை. ஆனால் முரண்பாடுகளைத் தீர்க்கும் வழிமுறைகள், அதாவது போராட்ட வடிவங்களானது, முரண்பாடுகளின் இயல்புகள் வேறுபடுவதற்கு ஏற்ப மாறுபடுகின்றன. சில முரண்பாடுகள் வெளிப்படையாக பகைமைத் தன்மையுடையவை. மற்றும் சில அப்படி இருப்பதில்லை. விஷயங்களின் திட்டவட்டமான வளர்ச்சியின் படி தொடக்கத்தில் பகைமையற்று இருந்த முரண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாடுகள் பகைமையுடையவையாய் வளர்கின்றன; அதே வேளையில் தொடக்கத்தில் பகைமையுடையதாக இருந்தவை பின்னால் பகைமையற்ற முரண்பாடுகளாக வளர்கின்றன.

ஏற்கனவே நாம் குறிப்பிட்டது போல, சமுதாயத்தில் வர்க்கங்களிலிருக்கும் வரை பொதுவுடைமைக் கட்சியில் சரியான, தவறான கருத்துகளுக்கிடையேயான முரண்பாடுகள் இருக்கும். இவை கட்சியில் வர்க்க முரண்பாடுகளின் பிரதிபலிப்பாகும். தொடக்கத்தில் அல்லது குறிப்பிட்ட பிரச்சனைகளைப் பொறுத்தவரை, இத்தகைய முரண்பாடுகள் அனைத்தும் உடனடியாக பகையுடன் வெளிப்படாமல் இருக்கலாம். ஆனால் வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியுடன் அவை, வளர்ந்து பகைமைத் தன்மையானதாக மாறலாம்.

லெனின், ஸ்டாலின் ஆகியோரின் சரியான சிந்தனைக்கும்; டிராட்ஸ்கி[32], புகாரின் ஆகியோரின் தவறான சிந்தனைக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள் முதலில் பகைமையான வடிவத்தில் வெளிப்படாமல் இருந்தன. பின்னரே பகைமைத் தன்மையானதாக வளர்ந்தன, என்பதைச் சோவியத் பொதுவுடைமைக் கட்சியின் வரலாறு நமக்குக் காட்டுகிறது. இதைப் போன்ற நிகழ்ச்சிகள் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் வரலாற்றிலும் உண்டு.

நமது கட்சி உறுப்பினர்கள் பலருடைய சரியான சிந்தனைக்கும் சென் து-சியூ (Chen Tu-hsiu), சாங் கோ-தௌ (Chang Kuo-tau)[33] முதலியோரின் தவறான சிந்தனைக்கும் இடையில் இருந்த முரண்பாடுகளும் முதலில் பகையான வடிவத்தில் தோன்றவில்லை. ஆனால் பின்னர் அவை பகைமையானதாக வளர்ந்தன. தற்போது நமது கட்சியில் சரியான சிந்தனைக்கும் தவறான சிந்தனைக்குமிடையில் உள்ள முரண்பாடு பகைமையான வடிவத்தில் வெளிப்படாமல் இருக்கிறது. மேலும் தவறிழைத்தத் தோழர்கள் தமது தவறுகளைத் திருத்திக் கொண்டால் அது பகையாக வளராது. ஆகவே கட்சியானது ஒருபுறம், தவறான சிந்தனை, மற்றும் கருத்துகளுக்கு எதிராக தீவிரமாகப் போராட வேண்டும். மறுபுறம், தவறிழைத்த தோழர்கள் விழித்தெழப் போதிய அளவு வாய்ப்பை அவர்களுக்கு அளிக்க வேண்டும். இது இப்படி இருக்க, மிதமிஞ்சிய போராட்டமும் கூட பொருத்தமானது அல்ல. ஆனால் தவறிழைத்தோர் அவற்றில் ஊன்றி நின்று, அவற்றை மோசமாக்கினால், இந்த முரண்பாடு பகைமையாக வளர்வதற்கான வாய்ப்புகளிருக்கும்.



முதலாளிய சமுதாயத்தில், நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையிலான முரண்பாடு பகைமைத் தன்மையானது. முதலாளிய சமுதாயத்தில் நடைபெறும் முதலாளிய வர்க்க ஆட்சியில் நகரங்கள் நாட்டுப்புறங்களை ஈவு இரக்கமின்றி பொருளாதார ரீதியில் கொள்ளையடிக்கின்றன.

அதேபோன்று சீனாவில் உள்ள கோமிங்டாங் கட்சியின் ஆட்சிப் பகுதிகளிலும் நகரத்துக்கும் - நாட்டுப்புறத்துக்கும் இடையிலான முரண்பாடும் பகைமையாக உள்ளது. இங்கே நடைபெறும் வெளிநாட்டு ஏகாதிபத்தியம், சீனப் பெரும் தரகு முதலாளிய வர்க்கம் ஆகியவற்றின் ஆட்சியிலும் நகரங்கள் நாட்டுப்புறங்களை மிலேச்சத்தனமாக பொருளாதார ரீதியில் கொள்ளையடிக்கின்றன.

ஆனால் ஒரு சோசலிச நாட்டிலும் சீனாவின் புரட்சிகரத் தளப் பகுதிகளிலும் இத்தகைய பகைமையான முரண்பாடு பகைமையற்ற ஒன்றாக மாறியுள்ளது. இதுவும்கூட பொதுவுடைமைச் சமுதாயம் மலரும் போது அழிக்கப்பட்டுவிடும்.

**''பகைமைத் தன்மையும், முரண்பாடும் எவ்விதத்திலும் ஒன்றல்ல. சோசலிசத்தில் முன்னையது மறைந்து விடும். பின்னையது இருக்கும்.''**[34] என லெனின் கூறினார். அதாவது பகையானது, எதிரானவைகளின் போராட்டத்தின் ஒரு வடிவமே தவிர, அது ஒரேயொரு வடிவம் மட்டுமேயல்ல. பகைமைப் பற்றிய விதியை மனம் போனபடி எங்கும், எதிலும் நாம் பயன்படுத்த முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 7. முடிவுரை

இப்போது நாம் இவையனைத்தையும் தொகுத்து சில வார்த்தைகள் கூறலாம். பொருட்களில் உள்ள முரண்பாடு பற்றிய விதியானது, அதாவது எதிரானவைகளின் ஒற்றுமை பற்றிய விதியானது, இயற்கை மற்றும் சமுதாயம் ஆகியவற்றின் அடிப்படை விதியாக இருக்கின்றது. எனவே அது சிந்தனையின் அடிப்படை விதியாகவும் இருக்கின்றது. அது, நிலையியல் உலக நோக்கிற்கு எதிரானதாகவும் இருக்கின்றது. அது, மனித அறிவு வரலாற்றில் மாபெரும் புரட்சி ஒன்றைக் காட்டுகின்றது.

இயங்கியற் பொருள் முதல்வாதத்தின் படி, புறநிலையான பொருட்கள் மற்றும் அகச்சிந்தனைக்குரியதன் வளர்ச்சிப் போக்குகள் அனைத்திலும் முரண்பாடு இருப்பதோடு, அது இப்போக்குகள் அனைத்திலும் தொடக்கம் முதல் இறுதி வரை ஊடுருவியுமிருக்கிறது. இது முரண்பாட்டின் எங்கும் நிறைந்த இயல்பும், சார்பற்ற தன்மையும் ஆகும்.

ஒவ்வொரு முரண்பாடும் அதன் ஒவ்வொரு கூறும் நமக்கே உரிய பண்பு இயல்புகளைப் பெற்றுள்ளது. இது முரண்பாட்டின் குறித்த இயல்பும் சார்பு நிலையுமாகும். குறிப்பிட்டச் சூழ்நிலைமைகளில், எதிரானவைகள் ஒத்த இயல்பைக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக இவை ஒரே பொருளுக்குள்ளேயே சேர்ந்திருந்து, தாமாகவே ஒன்று மற்றொன்றாக மாறுகின்றன. இதுவும் முரண்பாட்டின் குறித்த இயல்பும், சார்பு நிலையும் ஆகும். ஆனால் எதிர்மறைகளின் போராட்டமானது முடிவற்றது ஆகும். அது எதிர்மறைகள் சேர்ந்திருத்தல், அவை தாமாகவே ஒன்று மற்றதாக மாறுதல் ஆகிய இரண்டுமாக இருக்கிறது. அவை தாமாகவே ஒன்று மற்றொன்றாக மாறும் சமயத்தில் அது வெளிப்படையாக தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது. இதுவும் முரண்பாட்டின் எங்கும் நிறைந்த இயல்பும், சார்பற்ற தன்மையுமாகும்.

முரண்பாட்டின் குறித்த இயல்பையும், சார்பு நிலையையும் பற்றி ஆராயும் போது நாம் முதன்மை முரண்பாட்டிற்கும், முதன்மையற்ற முரண்பாட்டிற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை கவனிக்க வேண்டும். அதே நேரத்தில் முரண்பாட்டின் முதன்மைக் கூறுக்கும், முதன்மையற்ற கூறுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

முரண்பாட்டின் எங்கும் நிறைந்த இயல்பையும், முரண்பாட்டில் உள்ள எதிரானவைகளின் போராட்டத்தையும் பற்றி ஆராயும் போது, நாம் வேறுபட்ட போராட்ட வடிவங்களைப் பிரித்துப் பார்ப்பதிலுமே கவனம் செலுத்த வேண்டும். இவ்விதத்தில் நாம் அணுகாவிட்டால் தவறிழைப்பவர்களாக மாறுவோம்.

ஆராய்வின் மூலம் மேலே விளக்கப்பட்ட உட்சாரத்தை உண்மையில் நாம் விளங்கிக் கொள்வோமேயானால்; மார்க்சிய - லெனினியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு எதிரானவையாகவும், நமது புரட்சிகர குறிக்கோளுக்கு ஊறு விளைவிக்கக் கூடியவையுமான வறட்டுத் தத்துவக் கருத்துக்களை அழிக்கக் கூடியவர்களாவோம். மேலும் நடைமுறை அனுபவத்துடன் கூடிய நமது தோழர்கள் தமது அனுபவங்களைக் கோட்பாடுகளாக வரைமுறைப்படுத்துவார்கள். அத்தோடு மீண்டும் அனுபவவாதத் தவறிழைப்பதைத் தடுக்கக் கூடியவர்களாக ஆவர்.

இவைதான் முரண்பாட்டு விதி பற்றிய நமது ஆராய்ச்சியிலிருந்து பெற்ற, மிக எளிமையான சில முடிவுகள் ஆகும்.

SEELAN BOOKS SIGNATURE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அடிக் குறிப்புகள்

## விளக்கம்

*(மொழி பெயர்ப்பாளர் குறிப்பு) இயங்காவியல், இயங்கியல் என்ற இரண்டு சொற்களுக்குச் சில விளக்கங்களை வழங்கக் கடமைப்பட்டுள்ளோம்.

மார்க்சியத் தத்துவத்தில் கையாளப்படும் இச்சொற்கள் அவை நேரடியாக வழங்கும் பொருளைவிடக் கூடுதலான, ஆழமான பொருளைக் கொண்டுள்ளன. எனவே, எவற்றைக் குறிக்க இச்சொற்கள் பயன்படுகின்றனவோ அவற்றை முழுமையாக வெளிப்படுத்தும் தன்மை போதிய அளவில் இச்சொற்களுக்கு இல்லை. காலப் போக்கில் இச்சொற்களைக் கூடுதல் விளக்கத்தோடு புரிந்து கொள்வோமாக.

சிலர் 'இயக்க மறுப்பியல்' என்றே இயங்காவியலை (metaphysics)க் குறிப்பிடுகின்றனர். **(மார்க்சிய மெய்ஞ்ஞானம் - ஓர் அரிச்சுவடி, ஜார்ஜ் பொலிட்சர்** - தமிழாக்கம் ஆர்.கே. கண்ணன்)

இயங்காவியலை மாவோ கீழ்க்காணும் பொருளில் பயன்படுத்துகிறார். 1. எந்திரவியலானது, 2. படிப்படியாக வளர்ச்சியடைவது, 3. பாய்ச்சல்களையும் திருப்பங்களையும் ஒப்புக் கொள்ளாதது, 4. ஒரு பொருளின் இயக்கத்துக்கு ஒரு புறக் காரணத்தையே கற்பிப்பது, 5. ஒரு பொருளில் ஏற்படும் மாற்றத்துக்கு அதற்கு உள்ளேயே இருக்கும் அகக்காரணம்தான் காரணம் என்பதை ஏற்காதது, 6. ஒரு பொருளில் இரு முரண்பட்ட கூறுகள் உள்ளன என்பதை ஏற்காதது, 7. எதையும் மேலோட்டமாகப் பார்ப்பது, 8. பொருளின் உட்சாரத்தைக் காணாதது, 9. அதைக் காண இயலாதது, 10. உட்சாரம் இருப்பதையே ஒப்புக் கொள்ளாதது, 11. பொருட்களைத் தனித்தனியாகப் பார்ப்பது, 12. பொருட்களுக்கிடையே பரஸ்பரத் தாக்கம் உள்ளதை ஏற்காதது.

இதற்கு நேர்மாறான எதிர்மறையே இயங்கியல் கண்ணோட்டம் ஆகும்.

1. **ஹெகலின் 'தத்துவ வரலாறு பற்றிய விரிவுரைகள்'** தொகுதி I-இல் உள்ள **எலியாட்டிக்** கொள்கைக் குழாம் (Eleatic School) மீது **வி.இ. லெனின்** எழுதிய குறிப்புகளில் இருந்து எடுத்தாளப்பட்டது. **வி.இ. லெனின்** எழுதிய ''தத்துவ வரலாறு பற்றிய **ஹெகலின்** விரிவுரைகளுக்கான சுருக்கவுரை (Conspectus)'' என்பதைப் பார்க்க. **லெனின் தொகுப்பு நூல்கள்,** ருஷ்யப் பதிப்பு, மாஸ்கோ, 1958, தொகுதி, XXXVIII, பக்கம் 249.

2. ''இயங்கியற் பிரச்சனை பற்றி (1915) என்ற கட்டுரையில் **லெனின்** ''ஒரு முழுப் பொருள் இரண்டாகப் பிரிவதும், முரண்படுகிற பகுதிகளைப் பற்றி அறிந்து கொள்வதும்தான் இயங்கியலின் சாரமாகும். (**லாசாலே**யின் **ஹெராக்கி லிட்டஸ்** மெய்யியல் பற்றிய நூலின் ''அறிவைப் பற்றி'' என்ற மூன்றாம் பிரிவின் தொடக்கத்தில் உள்ள '**ஹெராக் கிலிட்டஸ்**' பற்றிய **ஃபீலோ**வின் மேற்கோள்களைப் பார்க்கவும்) (சாரங்களில் ஒன்று, பண்பியல்புகளின் சிறப்புக் கூறுகளில் முதன்மையானதாக இல்லா விட்டாலும் முதன்மையானவைகளில் ஒன்று.) **தொகுப்பு நூல்கள்,** ருஷ்யப் பதிப்பு, மாஸ்கோ, 1958, தொகுதி XXXVIII, பக். 357)

''**ஹெகலின் தருக்கம் பற்றிய அறிவியல்** நூலின் சுருக்கவுரை என்ற **லெனின்** நூலில் (செப்டெம்பர் - டிசம்பர் 1914). ''சுருங்கச் சொன்னால், எதிர்மறைகளின் (எதிரானவைகளின்) ஒற்றுமை பற்றிய கோட்பாடே (Doctrine) இயங்கியல் என்று வரையறுக்க முடியும். இது இயங்கியலின் உட்கருவைப் பிழிந்து தருகிறது. ஆனால் இதை மேலும் விளக்கவும், வளர்த்தெடுக்கவும் வேண்டும்'' — லெனின் (அதேநூல், பக். 215)

3. **டெபோரின்** (1881-1963) சோவியத் தத்துவவாதிகளில் ஒருவர். சோசலிஸ்ட் சோவியத் ருஷ்ய ஒன்றிய (USSR) அறிவியல் கழக உறுப்பினராக இருந்தவர். 1930-களில் சோவியத் ஒன்றிய மெய்யியல் வட்டாரங்கள் **டெபோரின்** கொள்கைக் குழாமை விமர்சிக்கத் தொடங்கின. கோட்பாட்டிலிருந்து நடைமுறையையும் மெய்யியலிலிருந்து அரசியலையும் பிரித்துப் பார்ப்பதில் உள்ள தவறுகளைச் சுட்டிக் காட்டின.

4. ''இயங்கியற் பிரச்சனை பற்றி'', **வி.இ. லெனின், தொகுப்பு நூல்கள்,** ருஷ்யப் பதிப்பு, மாஸ்கோ, 1958, தொகுதி XXXVIII, பக். 358.

5. **துங் சுங்-ஷு,** (Tung Chung-Shu கி.மு. 179-104). **ஹான்** வம்ச ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவர். **கன்ஃபூசியசின்** கோட்பாடுகளை நன்கு கற்றறிந்து விளக்கியவர். இது அவருடைய கூற்று.

**'தாவோ'** என்றால் சீன மொழியில் பாதை என்று பொருள். சிந்தனை வழியை அல்லது வாழும் வழியை இது குறிக்கிறது. கன்பூசியனிசம், புத்திசம் போன்ற பல தாவோக்கள் (வழிகள்) சீனாவில் உண்டு. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த **லாவோட்சு** என்பவனுடைய கருத்துகளால் தாவோயிசம் தோன்றியது. பொதுவுடைமைக் கருத்துகளைப் போலவே தாவோயிசமும் சீனப் பண்பாட்டின் ஒவ்வொரு கூற்றையும் பாதித்தது.

தொடக்கத்தில் ஒரு சிலரே பின்பற்றிய இவ்வழியைப் பின்னர் புத்தமதத் தாக்கத்தால் அதிக அளவில் பின்பற்றினர். இது பொது மதமானது. அதன்பின்னர் இது மக்கள் செல்வாக்குப் பெற்ற நாட்டுப்புற மதமானது. தாவோயிசம் சில மேனாட்டு மதங்கள் கடவுளைப் பற்றிக் கூறுவதைப் போலவே ஒரு நிலையான கடவுளைப் பற்றிக் கூறுகிறது. தாவோவுக்குப் பெயரில்லை. அதை அறியமுடியாது. அது எல்லாம் பொருட்களிலும் ஊடுருவி உள்ளது. தோற்றத்தில் வெவ்வேறாக இருந்தாலும் அடிப்படையில் எல்லாம் ஒன்றே என்கிறது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

6. ஃபிரெடரிக் எங்கெல்ஸ், ''இயங்கியல், அளவு மற்றும் பண்பு,'' டூரிங்குக்கு மறுப்பு (1877-78) ஆங்கிலப் பதிப்பு, அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ, 1959, பக்கம் 116.

7. வி.இ. லெனின், ''இயங்கியற் பிரச்சனை பற்றி'', தொகுப்பு நூல்கள், ருஷ்யப் பதிப்பு, மாஸ்கோ, 1958, தொகுதி XXXVIII, பக்கம் 357-358.

8. ஃபிரெடெரிக் எங்லெஸ், முன்னர்க் குறிப்பிட்ட நூல், பக். 166-167.

9. வி.இ. லெனின், ''இயங்கியற் பிரச்சனை பற்றி'' தொகுப்பு நூல்கள், ருஷ்யப் பதிப்பு, மாஸ்கோ, 1958, தொகுதி 38, பக். 357.

10. புகாரின் (1888-1938) ருஷ்யப் புரட்சி இயக்கத்தில் லெனினிய - எதிர்ப்புக் குழுவுக்குத் தலைமை தாங்கியவர். பிற்காலத்தில் துரோகி களோடு சேர்ந்தார். 1937-ல் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்; சோவியத் உச்சநீதி மன்றம் 1938-ல் அவருக்கு மரண தண்டனை விதித்தது. புகாரினால் நீண்ட காலமாகச் சொல்லப்பட்ட தவறான கருத்தையே மாவோ இங்கே விமர்சிக்கிறார். வர்க்க முரண்பாடுகளை மிதப்படுத்துவதும், வர்க்கப் போராட்டத்துக்கு மாறாக வர்க்க சமரசத்தை யும், வர்க்க ஒத்துழைப்பையுமே புகாரின் முன்வைத்தார். 1928-29-ஆம் ஆண்டில் சோவியத் ஒன்றியமானது வேளாண்மைத் துறையில் ஒட்டு மொத்தமான கூட்டுறவை முன்வைத்தபோது புகாரின் அதற்கு முன் இல்லாத வகையில் வெளிப்படையாகத் தன் தவறான கருத்தை வெளி யிட்டார். பணக்கார விவசாயிகளுக்கும், ஏழை மற்றும் நடுத்தர உழவர் களுக்கும் இடையில் இருக்கும் வர்க்க முரண்பாடுகளை மட்டுப்படுத்தி, பணக்கார விவசாயிகளுக்கு எதிரான, உறுதிமிக்க விடாப்பிடியான போராட்டத்தை எதிர்க்கக் கூடிய வகையில்தான் புகாரின் தன் தவறான கருத்தை வெளியிட்டார். மேலும் அவர் பாட்டாளி வர்க்கமானது பணக்கார விவசாயிகளுடன் ஒத்துழைப்பையும், ஒற்றுமை (ஓர்மை)யையும் ஏற்படுத்தி, கூட்டணி அமைத்து, ''அமைதியான வழியில் சோசலிசத்துக்கு மாறும் வளர்ச்சி'' என்று கூறினார்.

11. வி.இ. லெனின், ''இயங்கியல் பிரச்சனை பற்றி'', தொகுதி நூல்கள், ருஷ்யப் பதிப்பு, மாஸ்கோ, 1958, XXXVIII, பக். 358-359.

12. வி.இ. லெனின், ''பொதுவுடைமை'' (ஜூன் 12, 1920) என்ற கட்டுரை யைப் பார்க்கவும். அதில் ஹங்கேரிய பொதுவுடைமைக் கட்சியின் தலைவ ரான, பெலா குன்னை அவர் விமர்சிக்கிறார். அதில் அவர் ''மார்க்சியத்தின் மிகச் சாரமானதும், மார்க்சியத்தின் உயிரானதுமான, பருண்மையான பகுப்பாய்வைக் கைவிட்டு விடுகிறார்'' என லெனின் கூறினார். (தொகுப்பு நூல்கள், ருஷ்யப் பதிப்பு, மாஸ்கோ, 195, தொகுதி XXXI, பக். 143)



(மொழிப் பெயர்ப்பாளர் குறிப்பு)

* சுன்வுசு (SUN WU TSU) அல்லது சுன்வு கி.மு. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு புகழ் பெற்ற இராணுவ வல்லுநர். அவர் சுன்சு என்ற பதின் மூன்று அதிகாரங்களைக் கொண்ட, போர் பற்றிய நூல் ஒன்றை எழுதினார். இந்த மேற்கோள் ''தாக்குதலுக்கான தந்திரங்கள்'' என்ற மூன்றாவது அதிகாரத்திலிருந்து எடுக்கப்பட்டது.

13. வெய் செங் (கி.பி. 580 - 648) டாங் (Tang) வம்ச ஆட்சியில் ஓர் அரசியல் வல்லுநராகவும், வரலாற்று அறிஞராகவும் இருந்தவர்.

14. ஷுய் ஹு சுவான் (சேற்று நில வீரர்கள்) என்பது வட சுங் வம்ச ஆட்சியின் இறுதிக் காலத்தில் நடந்த உழவர் போர் பற்றி 14-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட புதினமாகும். உழவர்களின் எழுச்சிக்குத் தலைமை தாங்கி நடத்தியவரும், இப்புதினத்தின் கதைத் தலைவருமான சுங் சியாங் அமைத்த தளப்பகுதியான லியாங்ஷன் போவின் அருகில் அமைந்து இருந்தது சூ கிராமம். அந்த கிராமத்தின் தலைவனான சு செள ஃபெங் (Chu Chao Feng) ஒரு கொடிய நிலப்பிரபு.

15. வி.இ. லெனின், ''மீண்டும் தொழிற் சங்கங்களையும், இப்போதைய நிலைமையையும், டிராட்ஸ்கி, புகாரின் ஆகியோரின் தவறுகளையும் பற்றி'' (சனவரி 1921). தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, பன்னாட்டுப் பதிப்பாளர்கள், நியூயார்க், 1943, தொகுதி IX. பக். 66

16. 1924-27-ஆம் ஆண்டின் புரட்சி, 'முதலாவது புரட்சிகர உள்நாட்டுப் போர்' என்றும் அழைக்கப்படுகிறது. அது ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் நிலப்பிரபுத் துவ எதிர்ப்பு கொண்ட ஒரு புரட்சிகரப் போராட்டமாகும். அது சீனப் பொதுவுடைமைக் கட்சியும், கோமிங்டாங் கட்சியும் கூட்டு ஒத்துழைப்பின் அடிப்படையில் இணைந்து ''வடக்கு நோக்கிய படையெடுப்பை நோக்கமா கக் கொண்டு நடத்தப்பட்டதாகும்.

'குவாங்டுங்' பிராந்தியத்தில் தன்னுடைய புரட்சிகரத் தளப்பகுதியை நிலைநாட்டி உறுதிப்படுத்திய பின்பு, இரண்டு கட்சிகளும் கூட்டாக இணைந்து உருவாக்கிய புரட்சிகர இராணுவமானது 1926-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், ஏகாதிபத்திய அடிவருடிகளான வடபகுதி யுத்தப் பிரபுக் களுக்கு (Warlords) எதிராகத் தன்னுடைய 'வடக்கு நோக்கிய படையெடுப்பை'த் தொடங்கியது. இதனால் பாட்டாளிகளும், விவசாயி களும் (உழவர்கள்) உள்ளடங்கிய பரந்துபட்ட மக்களின் ஆதரவை வெற்றிகரமாகப் பெற்றது.

1926-ஆம் ஆண்டின் இறுதி மாதங்களிலும், 1927-ஆம் ஆண்டின் தொடக்க மாதங்களிலும் புரட்சிகரக் கூட்டு இராணுவம், யாங்கட்ஸி மற்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*மஞ்சள் ஆற்றுப் பகுதிகளையும் உள்ளடக்கிய பெரும்பாலான பகுதிகளை வென்றெடுத்துத் தன்வசப்படுத்தியது. புரட்சியானது வெற்றிகரமாக முன்னோக்கி நடைபோட்டுக் கொண்டிருந்தபோது, ஏகாதிபத்தியங்களின் துணையுடன், கோமிங்டாங் கட்சிக்குள்ளேயே இருந்த,* **சியாங் கே ஷேக்** *மற்றும்* **வாங் சிங்-வெய்** *(இருவரும் நிலப்பிரபுத்துவ மற்றும் தரகு முதலாளிய வர்க்கங்களின் நலன்களைப் பிரதிநிதித்துவ (சார்பு) படுத்திய வர்கள்) ஆகியவர்களின் தலைமையிலான பிற்போக்குக் கும்பல், இரண்டு எதிர்ப் புரட்சி அதிரடிக் கவிழ்ப்பு நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நடத்தினர். அவர்களின் முதலாவது கவிழ்ப்பு நடவடிக்கை 1927-ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்திலும், இரண்டாவது, அதே ஆண்டின் ஜூலை மாதத்திலும் நடந்தது.*

**சென் து - ஸு**வால் *சார்புபடுத்தப்பட்ட வலதுசாரிக் கருத்துகள் சீனப் பொதுவுடைமைக் கட்சிக்குள் தோற்றமளித்தன. பின்னர் அக்கருத்துகள் 'சரணாகதிவாத' வழியாக வளர்ச்சி பெற்றன. அதனால், கோமிடாங் பிற்போக்குக் கும்பல்களால் தொடுக்கப்பட்ட அதிரடித் திடீர்த் தாக்குதல்களை எதிர்த்து, வலுவான எதிர்ப்புப் போராட்டங்களை அமைப்பு ரீதியாகத் தொடுக்க, கட்சியாலும், மக்களாலும் முடியாமல் போய்விட்டது. இதன் விளைவாகப் புரட்சி தோல்வியடைந்தது.*

★ *(மொழி பெயர்ப்பாளர் குறிப்பு) விவசாயப் புரட்சிகரப் போர் 1927 முதல் 1937 வரை சீனப் பொதுவுடைமைக் கட்சியின் தலைமையில் சீன மக்கள் நடத்திய புரட்சிகரப் போராட்டமாகும். கோமிங்டாங் பிற்போக்குக் கும்பல்களின் ஆட்சிக்கு எதிராக ஆயுத எதிர்ப்பியக்கம் மற்றும் விவசாயப் புரட்சியைப் பரந்துபட்ட அளவில் பரப்பி விரிவாக்குவதும், சிவப்பு அரசியல் அதிகாரத்தை உருவாக்கி நிலைநாட்டி வளர்த்தெடுப்பதும்தான் இப்புரட்சியின் முதன்மையான உள்ளடக்கமாகும். இந்தப் புரட்சிப் போரானது 'இரண்டாவது புரட்சிகர உள்நாட்டுப் போர்' என்று அழைக்கப்படுகிறது.*

17. *அன்றைய நான்கு வடகிழக்கு மாகாணங்கள். இப்போதைய லியோனிங், கிரின், ஹெய்லுங் கியாங் மற்றும் ஜெகோல் ஆகும், 'ஹோ-பெய்' பிராந்தியத்தின் வடகிழக்குப் பகுதியும், உள்மங்கோலிய சுயாட்சி மண்டலத்தின் கிழக்குப் பகுதியும் உள்ளடங்கியதாகும். 1991-ஆம் ஆண்டின் செப்டம்பர் 18-ஆம் நாள் நிகழ்ச்சிக்குப் பின்னர் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள், லியோனிங், கிரின், ஹெய்யலுங் கியாங் பகுதிகளை ஆக்கிரமித்தனர். அதன் பிறகு 1933-ஆம் ஆண்டில் ஜெகோலைக் கைப்பற்றினர்.*

18. *'சியான்' நிகழ்ச்சி நவ சீன வரலாற்றில் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். சீனச் செம்படை மற்றும் மக்களின் ஜப்பானிய எதிர்ப்பு இயக்கங்களின் செல்வாக்கின் காரணமாக, கோமிங்டாங்கின் வடகிழக்கு இராணுவத்திற்குத் தலைமை தாங்கிய தளபதியான 'சங் ஹசுயே-லியாங்', கோமிங்டாங்கின் 17-வது வழி இராணுவத்திற்குத் தலைமையளித்த தளபதியான 'யங் ஹு-செங்' ஆகிய இருவரும் சீனப் பொதுவுடைமைக் கட்சியால் முன் வைக்கப்பட்ட 'ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணிக் கொள்கையை'' ஏற்றுக் கொண்டனர். அதே நேரத்தில் அவர்கள் இக் கொள்கையை வலியுறுத்தி, சீனப் பொதுவுடைமைக் கட்சியுடன் ஐக்கியப்பட்டு ஜப்பானை எதிர்க்கும்படி சியாங்கே-ஷேக்கைக் கோரினர். சியாங்கே-ஷேக் இக்கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாதது மட்டுமல்லாமல், ''கம்யூனிஸ்ட்டுகளை ஒடுக்குவது'' என்ற நடவடிக்கைக்காக மேலும் தீவிரமாக தன்னுடைய இராணுவ தயாரிப்புகளைச் செய்ய ஆரம்பித்தார். இதோடு, சியான் நகரத்தில் நடந்த மாணவர்களின் ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தையும் கடுமையாக ஒடுக்கினார்.*

*1936-ம் ஆண்டு டிசம்பர் 12-ம் தேதி இந்த இரண்டு ராணுவ தளபதிகளும் தங்களின் வரலாற்று நிகழ்ச்சிகளை நடத்த ஆரம்பித்தனர். ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தை ஒடுக்குவதற்கான இராணுவ தயாரிப்புகளை மேற் பார்வையிடுவதற்காக சியான் நகர ராணுவ முகாமிற்கு வந்த சியாங்கே - ஷேக்கை இந்த இரு தளபதிகளும் கைது செய்தனர். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர், சீனப் பொதுவுடைமைக் கட்சியானது. இவ்விரு தளபதிகளின் தேசபக்த செயலுக்கு தன்னுடைய உறுதியான ஆதரவை அளித்தது. ஆனால் அதேநேரத்தில் ஜப்பானை எதிர்ப்பதற்காக ஒரு ஐக்கியத்தை உருவாக்குவது என்ற அடிப்படையில் இந்த நிகழ்ச்சி முடிவு பெறவேண்டும் என்றும் கோரியது. டிசம்பர் 25-ம் தேதியன்றுதான், ஜப்பானுக்கு எதிராக பொதுவுடைமைக் கட்சியுடன் ஐக்கியப்படுவது என்ற கோரிக்கைக்கு சியாங்-கே-ஷேக் இணங்கினார். அதனால் அவர் விடுதலை செய்யப்பட்டு தலைநகரான நான்கிங்குக்குத் திரும்பினார்.*

19. *'சென் து-சியு வானவர், 'மே-4-ஆம் நாள் இயக்க'க் காலத்தில் ஒரு முற்போக்கு ஜனநாயகவாதியாகத் திகழ்ந்தவர். ரஷ்யாவில் நடந்த அக்டோபர் சோசலிசப் புரட்சியின் செல்வாக்கின் காரணமாக, சீனப் பொதுவுடைமைக் கட்சியை நிறுவினவர்களில் ஒருவராக பின்னர் அவர் மாறினார். கட்சி உருவான பின் ஆறு ஆண்டுகள் வரை, கட்சியின் மத்திய கமிட்டியின் முன்னணித் தலைவராக அவர் விளங்கினார். அவருடைய சிந்தனையானது, நீண்ட காலமாக ஒரு உறுதியான வலதுசாரித் தன்மையானதாக இருந்தது. 1921-27 ஆம் ஆண்டின் புரட்சியின் கடைசி காலப் பகுதியில் அவரது சிந்தனையானது 'சரணாகதிவாத' வழியாக வளர்ந்தது. சென் து-ஸுவால் தலைமை தாங்கப்பட்ட ''சரணாகதிவாதிகள்'' பரந்துபட்ட விவசாயிகள், நகர்புற சிறு முதலாளிக்கான கட்சியின் தலைமையையும், அதிலும் குறிப்பாக இராணுவ சக்திகளின் மீதான கட்சியின் தலைமையையும் உணர்வு பூர்வமாகவும் சுயமாகவும் கை விட்டுவிட்டனர். அதனால், புரட்சியின் தோல்விக்கு வழிவகுத்து சீரழிவுகளை உருவாக்கினர்.'' ('தற்போதைய சூழ்நிலைமைகளும் நமது கடமைகளும், - மாவோவின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் - தொகுதி 4)*





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1927-ஆம் ஆண்டின் புரட்சியின் தோல்விக்குப் பிறகு சென் து - ஸுவும் அவரோடு சேர்ந்த விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சில சரணாகதிவாதி களும் புரட்சியின் எதிர் காலத்தின் மீது நம்பிக்கை இழந்து, அழிவுவாதிகளாக மாறினர். அவர்கள் ஒரு பிற்போக்கு ட்ராட்ஸ்கிய வழியைக் கையிலெடுத்துக் கொண்டு, பிற ட்ராட்ஸ்கியவாதிகளுடன் இணைந்து ஒரு சிறிய கட்சி எதிர்ப்புக் குழுவாக மாறினர். அதனால் 1929-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கட்சியிலிருந்து சென் து - ஸு வெளியேற்றப்பட்டார். பின்னர் அவர் 1942-ஆம் ஆண்டு இறந்தார்.

20. **அபினிப் போர்** - பிரிட்டனுடன் சீனா தொடுத்த போரைக் குறிக்கிறது. 8-ஆம் நூற்றாண்டின் இறுதியிலான பல பத்தாண்டுகள் பிரிட்டனானது அள வுக்கு அதிகமான அபினியை சீனத்திற்கு ஏற்றுமதி செய்தது. சீன மக்களை போதைப் பொருட்களுக்கு அடிமையாக்கியது மட்டுமல்லாமல், சீனத்தின் வெள்ளியையும் கொள்ளையடித்தது. பிரிட்டனின் இத்தகைய செயலானது சீனத்திற்குள் பலமான எதிர்ப்புகளைக் கட்டவிழ்த்து விட்டது. 1840-ஆண் ஆண்டு, பிரிட்டனானது, சீனத்துடனான தன்னுடைய வர்த்தகத்தைப் பாது காத்துக் கொள்வதற்காக, சீனத்தின் மீது ஆயுத ஆக்கிரமிப்பைத் தொடுக்க ஆரம்பித்தது. 'லின் சு - ஹசு' என்ற தளபதியின் கீழ் சீனத் துருப்புகள் எதிர்த் தாக்குதல்களைத் தொடுத்தது. காண்டன் நகரத்தில் உள்ள மக்கள் தன் னெழுச்சியாக அமைப்பாகி, 'பிரிட்டிஷ் படைகளை அழித்தொழியுங்கள்!' என்ற கோஷத்துடன் பேரெழுச்சியை உருவாக்கினர். கோடிக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள அபினியை கடலில் தூக்கியெறிந்தனர். இந்நிகழ்ச்சி கள் அனைத்தும் ஆக்ரமித்த பிரிட்டிஷ் துருப்புகளுக்கு பேரிடியைத் தந்தது.

இத்தகைய பேரெழுச்சி இருந்த போதிலும் 1842-ஆம் ஆண்டு, ஊழல் மிகுந்த சிங் வம்ச ஆட்சியானது பிரிட்டிஷ் ஆக்ரமிப்பாளர்களுடன் **'நான் கிங் ஒப்பந்தத்தைச்'** செய்து கொண்டது. இவ்வொப்பந்தம் மிக மோசமான ஒன் றாகும். கடன் பாக்கிக்காக ஹாங்காங் தீவை பிரிட்டனுக்கு அளித்து விட்டது மட்டுமல்லாமல் பிரிட்டனின் வர்த்தகத்திற்காக சீனத்தின் பலபகுதிகளை திறந்துவிட்டும், மற்றும் சீனத்திற்குள் இறக்குமதி செய்யப்பட்ட பிரிட்டனின் சரக்குகளுக்கான வரி விகிதங்களை பிரிட்டனும் சீனமும் இணைந்து முடி வெடுத்துத் தீர்மானிப்பது என்றும் இவ்வொப்பந்தம் வகை செய்தது.

21. 1894-ஆம் ஆண்டில் நடந்த சீன - ஜப்பானிய போர், கொரியாவையும் சீனத் தையும் ஆக்கிரமிப்பதை நோக்கமாகக் கொண்டு, ஜப்பானிய ஏகாதிபத்தியத் தால் சீனத்தின் மீது தொடுக்கப்பட்டதாகும். அப்போது தேசபக்தி மிக்க இராணுவ தளபதிகளும், மிகப் பரவலான இராணுவ வீரர்களும் வீரஞ்செறிந்த போரினை நடத்தினர். ஆனாலும் கூட சீனா தோல்வி அடைந்தது. அதற்குக் காரணமென்னவெனில் ஊழல் மிகுந்த சிங் அரசாங்கமும், எதிர்பியக்கத்திற் கான தயாரிப்புகளைச் செய்வதில் அதற்கேற்பட்ட தோல்வியுமே ஆகும். 1895-ஆம் ஆண்டு சிங் அரசாங்கமானது. ஜப்பானுடன் தன்னுடைய



வெட்கங்கெட்ட ''ஷிமோனோவ்ஸ்கி ஒப்பந்தத்தைச்'' செய்துக் கொண்ட தன் மூலம் இப்போரானது முடிவு பெற்றது.

★★ **வி.இ. லெனின்**, என்ன செய்ய வேண்டும் என்ற நூலிலிருந்து.

22. **ஹெகலின் ''தருக்கம் பற்றிய அறிவியல்''** நூல் I, பிரிவு I-ல் ''நிர்ணயம் (Determinateness) - (பண்பு)'' என்பதைப் பற்றி **லெனின்** எழுதிய குறிப்புகளிலிருந்து, **வி.இ. லெனின்** எழுதிய **''ஹெகலின் தருக்கம் பற்றிய அறிவியல்** (அளவை அறிவியல்) ஆய்வுச் சுருக்கம்'' என்ற கட்டுரையில் இருந்து; **தொகுப்பு நூல்கள்**, ருஷ்யப் பதிப்பு, மாஸ்கோ, 1958, XXXVIII, பக். 97-98.

23. **''ஷன் ஹய் சிங்''** (மலைகளும் கடல்களும் பற்றிய நூல்) 'யுத்தம் செய்யும் அரசுகள்', காலத்தில் (கி.மு. 403-221-ல்) எழுதப்பட்டதாகும். அதன் கட்டுக் கதைகள் ஒன்றில், 'குவா பு' என்பவர் மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்ட சக்தியுடையவராக வர்ணிக்கப்படுகிறார். அவர் சூரியனுடன் ஓட்டப் பந்தயம் நடத்தி அதில் வெற்றி பெறுகிறார். கடைசியில் அவர் தாகத் தால் இறக்கிறார். அவரது கைத்தடி தெங்காடாக மாற்றப்படுகின்றது. **(இதை போன்றே நம் காவியக் கதைகளில் அனுமனும் வருணிக் கப்படுகிறான்** - மொழிபெயர்ப்பாளர்).

24. பழமையான சீனக் காவியக் (புராணக்) கதைகளில் வரும் வீரனே 'யி' ஆகும். அவன் வில்வித்தையில் வல்லமையுடையவன். கி.மு. 2-ஆம் நூற் றாண்டில் தொகுக்கப்பட்ட ''ஹுவய் நன் சு'' என்ற நூலின் படி ''யௌ'' பேரரசன் காலத்தில் வானில்பத்து சூரியன்கள் இருந்தன. இந்த சுட்டு எரிக் கும் சூரியன்கள் பயிருக்கு விளைவித்த சேதத்திற்கு ஒரு முடிவு கட்ட 'யௌ'' பேரரசன், அவற்றை எய்து வீழ்த்தும்படி 'யி'க்குக் கட்டளையிடுகிறார். வாங்யி (கி.பி. 2-ம் நூற்றாண்டு) யால் பதிவு செய்யப்பட்ட கதையின்படி 'யி' என்னும் வில்வித்தை வீரன் பத்து சூரியனில் ஒன்பதை எய்து வீழ்த்தி னான். பாக்கியிருந்த ஒன்றே தற்போதிருப்பது ஆகும்.

25. ''ஸி யு சி'' (மேற்கு யாத்திரை) 16-ஆம் நூற்றாண்டின் நாவல் ஆகும். இதன் கதாநாயகன் குரங்கு தெய்வம் ஸுன் வு-குங். அவன் தன் மனம் விரும் பியபடி பறவையாகவும், மரமாகவும், கல்லாகவும், வியக்கத்தக்க வகையில் 72 உருவ மாற்றங்களை எடுப்பான்.

26. **''லியௌ சாயின் விசித்திரக் கதைகள்''** என்பது 17 ஆம் நூற்றாண்டில் புஸுங்-லிங் ஙால் எழுதப்பட்டதாகும். அது பிரசித்திப் பெற்ற 43 கதை களைக் கொண்ட ஒரு தொகுப்பாகும். அதன் கதைகள் பெரும்பாலும் பிசாசு கள், நரிகளின் ஆவிகளைப் பற்றியவையாகும்.

27. **காரல் மார்க்சு** எழுதிய **''அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனக் கட்டுரைக்கான அறிமுகம்''** என்ற நூலிலிருந்து, ஆங்கிலப் பதிப்பு, சிக்காகோ, கெர் குழுமம், 1904, பக். 310-311.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

28. பாரீஸ் கம்யூனினாது, உலக வரலாற்றில் முதன்முதல் உருவான, முதலாவது பாட்டாளி வர்க்கஅரசு அதிகாரத்தின் அங்கமாகும். 1871-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் தேதியன்று, பிரஞ்சு பாட்டாளி வர்க்கமானது, பாரீஸ் நகரத்தில் ஒரு பேரெழுச்சியை உருவாக்கி, அதிகாரத்தைக் கைப்பற்றியது. மார்ச் 28-ஆம் தேதி பாட்டாளிகளால் தலைமை தாங்கப்பட்டு, தேர்தல் மூலம் பாரீஸ் கம்யூன் நிறுவப்பட்டது. அது முதலாளித்துவ வர்க்க அரசு இயந்திரத்தை, பாட்டாளி வர்க்கம் உடைத்தெறிந்த முதலாவது புரட்சிகர நிகழ்ச்சியாகும். மேலும் தூக்கியெறியப்பட்ட முதலாளித்துவ வர்க்க அரசு இயந்திரத்துக்குப் பதிலாக, ஒப்புவமை இல்லாத வகையில் ஒரு மாற்று வடிவமாக பாட்டாளி வர்க்க அரசு அதிகாரம் தோற்றம் பெற்றதாகவும் அது அமைந்தது.

பிரஞ்சு பாட்டாளி வர்க்கமானது, அந்த நேரத்தில் உரிய முதிர்ச்சியை அடையாத காரணத்தினாலும், விவசாய மக்களை உள்ளடக்கிய தன்னுடைய நட்பு சக்திகளை ஐக்கியப்படுத்துவதில் தோல்வியடைந்ததாலும்; எதிர்ப்புரட்சியைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ளாததாலும்; சரியான நேரத்தில் ஒரு உறுதியான ராணுவத் தாக்குதல்களை அதனால் தொடுக்க முடியவில்லை. அதனால் எதிர்ப் புரட்சியானது, அவசரப்படாமல் தன்னுடைய சக்திகளை ஒருமுகப்படுத்தி, மீட்சி பெற்று, திரும்பவும் வந்து, பேரெழுச்சியில் பங்கு பெற்ற மக்களின் மீது மிகக் கொடூரமானப் படுகொலைகளைச் செய்தது. அதனால் மே-27-ஆம் தேதியன்று பாரீஸ் கம்யூனானது வீழ்ச்சியடைந்தது.

29. **வி.இ. லெனின், ''இயங்கியற் பிரச்சனை பற்றி''** என்ற நூலிலிருந்து, **தொகுப்பு நூல்கள்,** ருஷ்யப் பதிப்பு, மாஸ்கோ, 1958, தொகுதி XXXVIII. பக். 358.

30. **''ஒன்றை ஒன்று எதிர்க்கும் பொருட்கள் ஒன்றை ஒன்று நிறைவு செய்யக் கூடியனவாகவும் உள்ளன''** என்ற கூற்று, முதலில் முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த புகழ் பெற்ற வரலாற்று அறிஞனான 'பான்குவால்' எழுதப்பட்ட ''ஆரம்பக் கால ஹன் வம்ச வரலாறு'' என்ற நூலில் காணப் பட்டது. அது நீண்ட காலம் ஒரு பிரபலமான கூற்றாக விளங்கி வந்தது.

31. வி.இ. லெனின், **''இயங்கியற் பிரச்சனை பற்றி''** என்ற நூலிலிருந்து, தொகுப்பு நூல்கள், ருஷ்யப் பதிப்பு, மாஸ்கோ, 1958, தொகுதி XXXVIII. பக். 358.

32. **ட்ராட்ஸ்கி** (1878-1940) ரஷ்ய புரட்சிகர இயக்கத்தில் லெனினிய எதிர்ப்புக் குழுவிற்குத் தலைமை தாங்கியவர். அதன்பின் சீரழிந்து, எதிர்ப் புரட்சிக் கும்பலோடு இணைந்தார். சோவியத் ஒன்றிய பொதுவுடைமைக் கட்சியின் மத்திய கமிட்டியிலிருந்து, 1927-ஆம் ஆண்டில் அவர் கட்சியால் வெளியேற்றப்பட்டார். 1929-ஆம் ஆண்டு சோவியத் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட நபரானார். பின்னர் 1932-ல் அவர் சோவியத் பிரஜா உரிமை பறிக்கப்பட்டவரானார்.



33. **சாங்கோ - தௌ** சீனப் புரட்சியிலிருந்து உருவான ஒரு துரோகியாவார். புரட்சியின் மீது கொண்ட உற்சாகத்தின் காரணமாக அவர் தன்னுடைய இளமைக் காலத்தில் சீனப் பொதுவுடைமைக் கட்சியில் இணைந்தார். கட்சியில் அவர் அதிகமான தவறுகளை இழைத்தார். அது கடைசியில், மிகப் பெரிய குற்றங்களை இழைக்கும் வகையில் முடிவு பெற்றது. 1935-ஆம் ஆண்டு, மிகவும் பயங்கரமான முறையில், 'செம்படையின் வடக்கு நோக்கிய படை நடப்பை' அவர் எதிர்த்தார். கட்சியால் முன் வைக்கப்பட்ட 'வடக்கு நோக்கிய படை நடப்புக்கு' மாறாக, 'ஹே சுயான் - சி காங்' எல்லைப் புறத்தில் இருக்கும் சிறுபான்மை தேசிய இனப் பகுதிக்கு (தற்போதைய தீபெத் சுயாட்சி மண்டலத்திற்கு) செம்படை பின் வாங்க வேண்டும் என்ற தோல்விவாத, அழிவுவாத வழியை அவர் பிரச்சாரம் செய்தார். மேலும் அவர் கட்சிக்கும் மத்திய கமிட்டிக்கும் எதிராக துரோகத் தனமான நடவடிக்கைகளில் வெளிப்படையாகவும் இறங்க ஆரம்பித்தார். அது மட்டுமல்லாமல் தன்னுடைய சொந்த போலியானதொரு மத்திய கமிட்டியையும் உருவாக்கிக் கொண்டு கட்சி மற்றும் செம்படையின் ஐக்கியத்தைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளிலும் இறங்கி, நான்காவது முன்னணிப் படைக்கு மிகப் பெரிய இழப்புகளையும் உருவாக்கினார்.

நான்காவது முன்னணி இராணுவமும், அதன் எண்ணிறைந்த ஊழியரும், மத்திய கமிட்டியின் சரியான தலைமையின் கீழ் திரும்பவும் வந்து இணைந்து கொண்டதற்கு, தோழர். மாவோவும், மத்திய கமிட்டியும் மிகவும் பொறுமையாக நடத்திய அரசியல் கல்வியே காரணமாகும். அதன் பின் அவர்கள், தொடர்ச்சியாக வந்த போராட்டங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மதிப்பு மிக்கப் பங்கினை அளித்தனர். 1938 ஆம் ஆண்டின் வசந்தத்தில் ஷென்சி - ஹன்சு - நிங்சியா எல்லைப் புற பிராந்தியத்திலிருந்து, தப்பித்துச் சென்று அதன் பின் கோமிங்டாங் ரகசிய படையில் இணைந்து கொண்டதின் மூலம் தன்னுடைய வஞ்சகத்தை நிரூபித்துக் கொண்டார்.

34. வி.இ. லெனின், ''எ.இ.புகாரினின் மாற்றக் கால கட்டப் பொருளியல் பற்றிய குறிப்புகள்'' என்ற கட்டுரையிலிருந்து. மே, 1920, தேர்ந்தெடுக்கப் பட்ட நூல்கள், பதிப்பு 1931 தொகுதி XI, பக் 357.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அ) வறட்டுவாதிகளாகவும் *(dogmatists)* (ஆ) ''மார்க்சியம் வறட்டு சூத்திரமில்லை; ஆனால் செயலுக்கான வழிகாட்டி'' என்பதை மறுத்து நீண்டகாலத்துக்குச் சீனப் புரட்சியின் அனுபவத்தைப் புறக்கணித்தவர்களாகவும் (இ) மார்க்சியப் படைப்புகளிலிருந்து இடப் பொருத்தமில்லாமல் சொற்களையும், சொற்றொடர்களையும் பிய்த்துப் பிடுங்கிப் போட்டுப் பயன்படுத்திக் கேட்போரை வாய் மூட வைக்கும் *(overawing)* மக்களாகவும் ஏராளமான தோழர்கள் கட்சியில் இருந்ததுண்டு. மேலும், ஏராளமான தோழர்கள் அனுபவவாதிகளாகவும் இருந்தனர். அவர்கள் நீண்ட காலத்துக்குத் தங்களைத் தமது துண்டு துக்காணி அனுபவத்தோடு குறுக்கிக் கொண்டனர். அவர்கள் புரட்சிகர நடைமுறைக்கான கோட்பாட்டின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளவில்லை; அல்லது புரட்சியை முழுமையாகப் பார்க்கவில்லை; ஆனால் கண்ணை மூடிக்கொண்டு கடுமையாக உழைத்தனர்.

இந்த இரண்டு வகையான தோழர்களின் கருத்துகளும் பிழையானவை. அதிலும் குறிப்பாக வறட்டுவாதிகளின் கருத்துகள் மிகவும் பிழையானவை; இதனால் 1931-34 காலப் பகுதியில் சீனப் புரட்சிக்கு அளவற்ற இழப்பு நேர்ந்தது; இருப்பினும் இவர்கள் தம்மை மார்க்சிஸ்டுகள் என்று சொல்லிக்கொண்டு மிகமிக அதிகமான தோழர்களைக் குழப்பினர். ''நடைமுறை பற்றி'' என்ற இந்தக் கட்டுரை கட்சியிலிருந்த வறட்டுவாதம் மற்றும் அனுபவவாதத்தின் அகவயப் பிழைகளை அம்பலப்படுத்த எழுதப்பட்டது; குறிப்பாக, மார்க்சிய அறிவுக் கோட்பாடு என்ற நோக்கு நிலையிலிருந்து வறட்டுவாதப் பிழைகளை அம்பலப்படுத்துவதற்காக எழுதப்பட்டது. அகவயப்பட்ட வகையான வறட்டுவாதம், நடைமுறையைச் சிறுமைப் படுத்துகிறது. இதை அம்பலப்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கவே ''நடைமுறை பற்றி'' என்று பெயரிடப்பட்டது. ஏனானிலுள்ள சப்பானிய எதிர்ப்பு இராணுவ மற்றும் அரசியல் கல்லூரியில் மாவோ நிகழ்த்திய உரை கருத்துகளே இக்கட்டுரையில் உள்ளன.



# II. நடைமுறை பற்றி ...

(ஜூலை 1937)

**மாசேதுங்**

(அறிவுக்கும் நடைமுறைக்கும் - அறிவதற்கும் செயலுக்கும் இடையிலான உறவு பற்றி)

அறிவுப் பற்றிய பிரச்சனைகளை, மனித சமுதாய இயல்புக்குப் புறம்பானது என்பது மட்டுமின்றி மனினுடைய வரலாற்று ரீதியான வளர்ச்சிக்கும் அது புறம்பானது என்று பொருள் முதல்வாதம் கருதியது. மார்க்சு காலத்திற்கு முன்பாக, பொருள் முதல்வாதம் அறிவைப் பற்றிய பிரச்சனைகளை இவ்வாறுதான் ஆய்வு செய்தது.

அறிவு, சமுதாய நடைமுறையைச் சார்ந்திருக்கிறது என்பதை, அதாவது அறிவு உற்பத்தியையும் வர்க்கப் போராட்டத்தையும் சார்ந்திருக்கிறது என்பதை, பொருள் முதல்வாதம் புரிந்து கொள்ள இயலாததாக இருந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக, '**மனிதனுடைய பொருள் உற்பத்திக்கான நடவடிக்கையே மிகவும் அடிப்படையான நடைமுறைச் செயல்; அதுதான் அவனுடைய பிற நடவடிக்கைகள் அனைத்தையும் தீர்மானிக்கும் செயல்**' என்று மார்க்சியர்கள் கருதுகின்றனர்.

மனிதனின் அறிவு என்பது அவனது பொருளுற்பத்திக்கான செயலையே முதன்மையாகச் சார்ந்திருக்கிறது. அதன் மூலமாகவே அவன் இயற்கையின் புதுமை நிகழ்வுகளையும், தன்மைகளையும் விதிமுறைகளையும் படிப்படியாக அறிந்து கொள்கின்றான். மேலும் இயற்கைக்கும் தனக்கும் இடையேயுள்ள உறவுகளையும் மனிதன் தன் நடைமுறையின் மூலம் புரிந்து கொள்கின்றான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனிதன், பொருளுற்பத்திக்கான நடவடிக்கையின் மூலம் பல்வேறு சமுதாயப் படிநிலைகளில் மனிதர்களுக்கு இடையிலான உறவை படிப்படியாக அறிந்து கொள்கின்றான். இத்தகைய அறிவை மனிதன் தன் பொருளுற்பத்திக்கான நடவடிக்கையின் மூலமாக அல்லாது வேறு எதன் மூலமும் பெற முடியாது.

வர்க்கமற்ற சமுதாயத்தில் ஒவ்வொருவரும் தான் சமுதாயத்தின் ஒரு உறுப்பினர் என்ற முறையில், பிற உறுப்பினர்களுடன் பொதுவான முயற்சியில் ஒன்றிணைந்து, அவர்களுடன் திட்டவட்டமான உற்பத்தி உறவுகளை மேற்கொண்டு, மனிதனின் பொருள் தேவைகளை நிறைவு செய்வதற்கான உற்பத்தியில் ஈடுபடுகின்றனர்.

வர்க்க வேறுபாடுகள் இருந்த எல்லாச் சமுதாயங்களிலும் கூட அவற்றின் வெவ்வேறு வர்க்க உறுப்பினர்களும் பல்வேறு வகையில், திட்டவட்டமான உற்பத்தி உறவுகளை மேற்கொண்டு அவர்களின் வாழ்வுக்கான பொருள் தேவைகளை நிறைவு செய்வதற்காக உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். மனித அறிவு வளருவதற்கு முதன்மையான ஊற்றுமுலம் இதுவேதான்.

மனிதனின் சமுதாய நடைமுறை, உற்பத்திச் செயலுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை; வர்க்கப் போராட்டம், அரசியல் வாழ்வு, அறிவியல் மற்றும் கலையியல் வெளிப்பாடுகள் போன்ற பிற வடிவங்களிலும் அவனின் சமுதாய நடைமுறை தொடருகின்றது. சுருங்கக் கூறின், சமுதாய வாழ்வில் உள்ளவன் என்ற வகையில், மனிதன் தன் சமுதாயத்தின் நடைமுறை வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் பங்கேற்கிறான். இவ்வாறாக மனிதன் பொருளாயத *(Material)* வாழ்வின் மூலமாக மட்டுமின்றி, பொருளாயத வாழ்க்கையோடு நெருக்கமாக இணைந்துள்ள அரசியல் மற்றும் பண்பாட்டு (கலாச்சார) வாழ்வின் மூலமாகவும் மனிதர்களுக்கு இடையிலான வெவ்வேறு உறவுகளை பல்வேறு படிநிலைகளில் அறிந்துகொள்கின்றான்.

இத்தகைய வெவ்வேறு வகையான சமுதாய நடைமுறைகள், குறிப்பாக வர்க்கப் போராட்டம், அதன் பல்வேறுபட்ட எல்லா வடிவங்களாலும், மனிதனின் அறிவு வளர்ச்சியில் ஆழமான செல்வாக்கைச் செலுத்துகிறது. வர்க்கச் சமுதாயத்தில் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் உறுப்பினராக வாழ்கிறார்கள். ஒவ்வொரு சிந்தனையிலும் விதி விலக்கின்றி ஒரு



வர்க்கத்தின் முத்திரைக் குத்தப்பட்டிருக்கின்றது.

'மனித சமுதாயத்தில் உற்பத்திக்கான செயல் கீழ்நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்குப் படிப்படியாக வளருகிறது; அதையொட்டி, இயற்கைப் பற்றிய அல்லது சமுதாயம் பற்றிய மனிதனின் அறிவும் தாழ்ந்த நிலையிலிருந்து படிப்படியாக உயர்நிலைக்கும் அதாவது மேலோட்டமான நிலையிலிருந்து ஆழமான நிலைக்கும் பகுதி நிலையிலிருந்து பன்முகப்பட்ட நிலைக்கும் வளருகிறது' என்று மார்க்சியர்கள் கருதுகின்றனர். வரலாற்றில் நீண்ட நெடுங்காலமாக மனிதன், சமுதாய வரலாற்றைப் பற்றி ஒருதலைப்பட்சமாகவே புரிந்து கொண்டிருந்தான். ஒருபுறம் சுரண்டும் வர்க்கம் எப்பொழுதும் வரலாற்றைத் தனக்கேற்ற வகையில் (ஒரு சார்பாக) சிதைத்து வந்திருப்பதும், மறுபுறத்தில் சிறிய அளவிலான உற்பத்தி, மனிதனுடைய கண்ணோட்டத்தைக் குறுக்கிவிட்டதும்தான் இதற்குரியக் காரணமாகும்.

நவீன பாட்டாளி வர்க்கம் மிகப்பெரிய உற்பத்திச் சக்திகளுடன் (பெரிய தொழிற்சாலை) உயிர்த்தெழும் வரையில், மனிதனால் சமுதாய வளர்ச்சியைப் பற்றிய விரிவான வரலாற்று அறிவைப் பெற இயலவில்லை; அத்தோடு இந்த அறிவை ஓர் அறிவியலாக, மார்க்சியம் என்னும் அறிவியலாக மாற்றவும் அவனால் இயலவில்லை.

மனிதனின் புற உலகத்தைப் பற்றிய உண்மையான அறிவிற்கு அவனது சமுதாய நடைமுறை மட்டும்தான் ஒரே அளவுகோலாக இருக்கிறது என மார்க்சியர்கள் கருதுகின்றனர். உண்மையில் நடைபெறுவது யாதெனில், பொருளுற்பத்தி, வர்க்கப் போராட்டம் அல்லது அறிவியல் பரிசோதனை போன்ற சமுதாய நடைமுறை நிகழ்ச்சிப் போக்குகளில் மனிதன், தான் எதிர்பார்த்த பலனை அடையும்போதுதான் அவனுடைய அறிவு சோதிக்கப்பட்டதாகின்றது. ஒருவன் தன்னுடைய வேலையில் வெற்றியடைய விரும்பினால், அதாவது எதிர்பார்த்த விளைவுகளைப் பெற விரும்பினால், தன்னுடைய கருத்துகளை புற உலகின் விதிகளுடன் இசைவுடையவையாகச் செய்யவேண்டும். அவ்வாறு அவை இசைவுடையதாக இல்லாமல் போனால் அவன் தன் கருத்துகளை நடைமுறைப்படுத்தும்போது தோல்வி அடைவான். தோல்வியடைந்த பின்னர், அவன் தோல்வியிலிருந்து தனது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படிப்பினைகளைப் பெறுவான். பின்னர் புறநிலை உலகின் விதிகளுக்கு இசைவாகத் தனது கருத்துகளை மாற்றி அவனால் தோல்வியை வெற்றியாக்கிட முடியும். **தோல்வியே, வெற்றியின் தாய்; இடறி விழுதல், அறிவில் எழுதல்** என்பனவற்றின் பொருள் இதுதான்.

அறிவுப் பற்றிய இயங்கியல் பொருள் முதல்வாத தத்துவம், நடைமுறையை முதன்மையான இடத்தில் வைக்கிறது; மனித அறிவை எந்த வழியிலும் நடைமுறையிலிருந்து பிரிக்க முடியாது என்று கருதுகிறது. மேலும், நடைமுறையின் முக்கியத்துவத்தை மறுக்கின்ற, நடைமுறையிலிருந்து அறிவைப் பிரிக்கின்ற தவறான தத்துவங்கள் அனைத்தையும் புறக்கணிக்கிறது. எனவே, **நடைமுறை, (கோட்பாட்டு) அறிவை விட உயர்ந்தது. ஏனெனில் அது எங்கும் எல்லாக் காலத்திலும் நிறைந்து இருக்கக்கூடிய உயர்ந்த மதிப்பைப் பெற்றிருக்கிறது; அது மட்டுமின்றி கண்கூடான உண்மையாகவும் இருக்கிறது,**[1] என்று லெனின் கூறியுள்ளார்!.

இயங்கியல் பொருள் முதல்வாதம் பற்றிய மார்க்சியத் தத்துவத்திற்கு இரண்டு சிறப்பியல்புகள் உண்டு.

1. **அதன் வர்க்க இயல்பு** : இயங்கியல் பொருள் முதல்வாதம் என்பது பாட்டாளி வர்க்கத்திற்கு சேவை செய்வது என்று அது வெளிப்படையாக பிரகடனம் செய்கிறது.

2. **நடைமுறைப் படுத்துவதற்கான அதன் சாத்தியப்பாடு:** தத்துவம் நடைமுறையைச் சார்ந்திருப்பதை அது வலியுறுத்துகிறது; தத்துவம் நடைமுறையை ஆதாரமாக கொண்டது; மீண்டும் நடைமுறைப் படுத்துவதற்கே பயன்படுகிறது என்று வலியுறுத்துகின்றது; எந்த அறிவின் அல்லது தத்துவத்தின் உண்மைத் தன்மையையும் ஒருவர் கொள்ளும் அக உணர்ச்சிகளைக் கொண்டு தீர்மானிப்பதில்லை; மாறாக சமுதாய நடைமுறையில் அவற்றால் விளையும் யதார்த்த பயனைக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. சமுதாய நடைமுறை மட்டும்தான் உண்மைக்கு உரைகல்லாக இருக்கமுடியும். நடைமுறை பற்றிய நிலைபாடுதான், அறிவு பற்றிய இயங்கியல் பொருள் முதல்வாத தத்துவத்தின் முதன்மையான, அடிப்படையான நிலைப்பாடாகும்.[2]



ஆனால் மனித அறிவு நடைமுறையிலிருந்து எழுந்து நடைமுறைக்கு எவ்வாறு தொண்டாற்றுகிறது?. அறிவு வளர்ச்சி எவ்வாறு நிகழ்கிறது என்பதை நாம் கவனித்தால் இது தெளிவாகத் தெரியும்.

நடைமுறை நிகழ்வுகளின்போது, மனிதன் முதன்முதலில் பல்வேறு விஷயங்களின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள், அதன் தனித்தனி அம்சங்கள். விசயங்களின் *(things)* புற உறவுகள் ஆகியவற்றை மட்டும்தான் பார்க்கிறான். உதாரணமாக சிலர், யேனானைச் சுற்றிப் பார்த்து அறிந்து கொள்வதற்காக வெளியிலிருந்து வருகின்றனர். முதல் ஒன்றிரண்டு நாட்கள் அவர்கள் யேனானின் அமைப்பை, அதன் வீதிகளை, வீடுகளைப் பார்க்கிறார்கள்; பலரைச் சந்திக்கின்றனர். கேளிக்கை விருந்துகள், மாலைக் கூட்டங்கள், மக்கள் கூட்டங்கள் ஆகியவற்றில் பங்கு கொள்கிறார்கள்; பல்வேறு வகையான உரையாடல்களைக் கேட்கிறார்கள். பல ஆவணங்களைப் படிக்கின்றனர்.

இவையெல்லாம் விஷயங்களின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்; அவற்றின் தனித் தனி அம்சங்கள் மற்றும் அவற்றுக்கிடையே உள்ள புற உறவுகள். இது புலக்காட்சி அறிவின் *(Perceptual Stage of Cognition)* கட்டம் எனப்படுகிறது. புலன்களுக்கு புலப்பட்டதை மனதில் பதியச் செய்து கொள்ளும் கட்டம் இது. அதாவது, யேனானிலுள்ள குறிப்பிட்ட இந்த விஷயங்கள் பார்வையாளர்களின் புலன் உறுப்புகளில் செயல்பட்டு, புலன் அறிவைத் தூண்டுகிறது; மூளையில் பல பதிவுகளைத் தோற்றுவிக்கிறது. அத்தோடு இந்தப் பதிவுகளின் புற உறவுகளைப் பற்றிய பொதுவானதோர் வரைபடத்தையும் தோற்றுவிக்கிறது; இது **அறிதலின் முதற் கட்டமாகும்.** இக்கட்டத்தில் ஆழ்ந்த கருத்துகளை உருவாக்கிக் கொள்ளவோ தர்க்க ரீதியான முடிவுக்கு வரவோ மனிதனால் இயலாது.

சமுதாய நடைமுறை தொடர்ந்து கொண்டிருக்கையில் நடைமுறையினூடாக மனிதனுக்குப் புலப்படுத்தி, அவனுடைய மூளையில் பதிவை ஏற்படுத்திய விஷயங்கள் திரும்பத் திரும்ப பலமுறை நிகழ்கின்றன; பிறகு மனிதனுடைய அறிதலின் நிகழ்ச்சிப் போக்கில் மூளையில் ஒரு திடீர் மாற்றம் (துரிதப்பாய்ச்சல்) ஏற்படுகிறது. கருத்துகள் உருவாகின்றன, கருத்துகள் என்பவை விஷயங்களின் புதுமை நிகழ்வுகளாக அவற்றின் தனித்தனி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அம்சங்களாக, அவற்றின் புற உறவுகளாக இனியும் இருப்பதில்லை; அந்த விஷயங்களின் சாரம்சத்தை, அவற்றின் ஒட்டு மொத்தத் தன்மையை, அவற்றின் உள்ளுறவுகளை அந்தக் கருத்துகள் உட்கொண்டிருக்கின்றன. கருத்துகளுக்கும், புலக்காட்சி அறிவுக்கும் இடையில் அளவில் மட்டுமின்றி பண்பிலும் கூட வேறுபாடு இருக்கின்றது. ஊகித்தல் *(Inference)*, முடிவுக்கு வருதல் ஆகியவற்றின் ஊடே மேலும் முன்னேறிச் செல்வதன்மூலம் ஒருவரால் தர்க்க ரீதியான முடிவிற்கு வர முடிகிறது. ''புருவத்தை நெரித்தால் புதிய உபாயம் தோன்றும்'' என்று மூன்று சாம்ராஜ்யங்களின் கதையில் *(San Kuo Yen Yi)*[3] கூறப்படுவதும் ''யோசித்துப் பார்க்கிறேன்'' என்று அன்றாட வழக்கில் நாம் கூறுவதும், நிறை குறைகளை எடை போட்டு முடிவிற்கு வருவதற்காகவும், ஊகிப்பதற்காகவும் மனிதன் தன் மூளையில் கருத்துகளைப் பயன்படுத்துவதையே குறிப்பிடுகின்றன. இது **அறிதலின் இரண்டாவது கட்டம்.**

யோனானுக்கு வந்திருக்கும் பார்வையாளர் குழுவினர் பல்வேறு தகவல்களை சேகரித்துக் கொண்டு அவற்றைச் ''சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்தபின்'', ''ஜப்பான் எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணி பற்றிய கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை ஆழமானது, நேர்மையானது, உள்ளத் தூய்மையுடையது'' என்று தீர்மானிக்க முடியும். இந்த தீர்மானத்திற்கு வந்தபின், நாட்டைக் காக்க ஒன்றுபடுவதில் அவர்களும் உண்மையானவர்களாக இருந்தால், மேலும் ஒருபடி முன்னேறி ''ஜப்பான் எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணி வெற்றி பெறும்'' என்ற முடிவுக்கும் அவர்களால் வர முடியும். ஒரு விஷயத்தைப் பற்றி மனிதனுக்கு அறிவை ஏற்படுத்துகின்ற, கருத்தை உருவாக்கி, மெய் பொய்மைகளை மதிப்பிட்டு, முடிவுக்கு வருகின்ற இந்த கட்டமே, ஒரு விஷயத்தை அறிந்து கொள்ளும் நிகழ்ச்சிப் போக்கின் மிகவும் முக்கியமான கட்டம்; இதுதான் **பகுத்தறிவுக் கட்டம்.**

புலக்காட்சி மற்றும் அறிவினூடே சிந்தனையை அடைந்து, புறநிலையான பொருட்களின் உள் முரண்பாடுகளை படிப்படியாக, விரிவாக அறிந்து கொள்வதும் அதன் விதிகளையும், ஒரு நிகழ்ச்சிப் போக்கிற்கும் மற்றொன்றிற்கும் இடையிலான உள் உறவுகளையும் அறிந்து கொள்வதும் அறிவு பெறுவதில் உண்மையான கடமையாகும். அதாவது தர்க்கரீதியான அறிவை அடைவதாகும். மீண்டும் கூறினால், தர்க்க ரீதியான அறிவு புலக்காட்சி



அறிவிலிருந்து வேறுபட்டது; புலக்காட்சி அறிவானது, விஷயங்களின் தனித்தனி அம்சங்கள், புதுமைத் தோற்றங்கள், புற உறவுகளைப் பற்றியதாகும். ஆனால் தர்க்கரீதியான அறிவு என்பது விஷயத்தின் முழுமையை, சாராம்சத்தை, உள்உறவுகளை அடைவதற்காகப் பெரும் தூரம் தாண்டி முன்னேறுவதோடு, சூழ்ந்திருக்கும் உலகின் உள் முரண்பாடுகளை வெளிப்படுத்திக் காட்டுகிறது. எனவே, தர்க்கரீதியான அறிவு என்பது சூழ்ந்துள்ள உலகின் முழுமையான வளர்ச்சிப் போக்கையும் அதன் எல்லா அம்சங்களுக்கு இடையேயும் நிலவும் உள் உறவுகளையும் உட்கொண்டதாக இருக்கிறது.

நடைமுறையை ஆதாரமாகக் கொண்டு மேலோட்டமான அறிவிலிருந்து ஆழ்ந்த அறிவிற்கு முன்னேறிச் செல்கின்ற, அறிவு வளரும் நிகழ்ச்சிப் போக்கு பற்றிய இயங்கியல் பொருள் முதல்வாத தத்துவத்தை மார்க்சியம் தோன்றுவதற்கு முன்பாக எவரும் வகுத்துத் தரவில்லை. மார்க்சியப் பொருள் முதல்வாதம்தான் முதன்முதலாக இந்தப் பிரச்சனையை சரியாக தீர்த்து வைத்தது. உற்பத்திப் போராட்டம், வர்க்கப் போராட்டம் ஆகியவை மீண்டும் மீண்டும் தொடர்ந்து நிகழும் தனது சிக்கல் நிறைந்த நடைமுறையின் போது, சமுதாயத்தில் வாழும் மனிதன் புலக்காட்சி அறிவிலிருந்து தர்க்கரீதியான அறிவிற்கு முன்னேறிச் செல்வதை, அறிவு பெறுதல் என்பது ஆழ்ந்த தன்மைபெறும் இயக்கத்தை, பொருள் முதல்வாத அடிப்படையிலும் இயங்கியல் ரீதியிலும் சுட்டிக் காட்டியதன் மூலம் மார்க்சியப் பொருள் முதல்வாதம்தான் முதன்முதலில் இப்பிரச்சனையைச் சரியாக தீர்த்து வைத்தது. **''பருப்பொருள் பற்றிய அல்லது இயற்கையின் ஒரு விதி பற்றிய பொதுக் கருத்து அல்லது மதிப்பு பற்றிய பொதுக் கருத்து முதலியன, சுருங்கக் கூறினால் எல்லா அறிவியல் (சரியான, ஆழமான, மடத்தனமற்ற) பொதுக் கருத்துகளும் இயற்கையை மேலும் ஆழமாக, உண்மையாக, முழுமையாகப் பிரதிபலிக்கின்றன''**[4] என்று லெனின் கூறியுள்ளார்.

அறிதலின் வளர்ச்சிப் போக்கின் இரண்டு கட்டங்களில் ஒவ்வொன்றுக்கும், அதற்கே உரிய தனித்தன்மைகள் உண்டு என்று மார்க்சியம்-லெனினியம் கருதுகிறது. அறிவு, முதற்கட்டத்தில் கீழ் நிலையில் புலக்காட்சி அறிவாகவும் இரண்டாவது கட்டத்தில், உயர் நிலையில் தர்க்க ரீதியான அறிவாகவும் வெளிப்படுகிறது. ஆனால் இவை இரண்டும் அறிதலின் ஒன்றிணைந்த ஒரே நிகழ்ச்சிப் போக்கின் இரு கட்டங்களாகும். புலக்காட்சி அறிவும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகுத்தறிவும் பண்பியல் ரீதியில் வேறுபட்டவை. ஆனால் ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிந்திருப்பதில்லை; நடைமுறையின் அடிப்படையில் அவை ஒன்றிணைந்திருக்கின்றன.

புலப்படுவதை உடனடியாகப் புரிந்து கொள்ள முடியாது என்பதையும், எதைப் புரிந்து கொண்டோமோ அதைத்தான் மேலும் ஆழமாகப் பார்க்க முடியும் என்பதையும் நமது நடைமுறை நிரூபிக்கிறது. புதிய தோற்றங்களின் பிரச்சனையை மட்டும்தான் புலக்காட்சி அறிவு தீர்த்து வைக்கிறது. ஆனால் சாராம்சம் பற்றிய பிரச்சனையை தத்துவத்தால்தான் தீர்க்க முடியும். இந்த இரண்டு பிரச்சனைகளின் தீர்வையும் நடைமுறையிலிருந்து அணு அளவுகூடப் பிரிக்க முடியாது. ஒருவர் எந்த ஒரு விஷயத்தை அறிய விரும்பினாலும் அவருக்கு அத்துடன் தொடர்பு கொள்வதைத் தவிர அதாவது அதன் சூழ்நிலையில் வாழ்வதைத் (நடைமுறையில் ஈடுபடுவதை) தவிர வேறு வழியில்லை.

நிலவுடைமைச் சமுதாயத்தில் முதலாளித்துவ சமுதாயத்தின் விதிமுறைகளை முன் கூட்டியே அறிந்துகொள்ள முடியவில்லை; முதலாளித்துவம் அப்பொழுது தோன்றியிருக்காததே அதற்குக் காரணமாகும். அதற்குரிய பொருத்தமான நடைமுறையும் அப்போது இல்லாமலிருந்தது. மார்க்சியம், முதலாளித்துவ சமுதாயத்தின் படைப்பாக மட்டுமே இருக்க முடியும். முதலாளித்துவத்தின் சுதந்திரமான போட்டா போட்டியின் யுகத்தில் வாழ்ந்த காரல்மார்க்சால் ஏகாதிபத்திய யுகத்திற்குரிய சில தனித்தன்மை வாய்ந்த விதிகளை முன்கூட்டியே பருண்மையாக அறிந்துகொள்ள முடியவில்லை. ஏனென்றால் முதலாளித்துவத்தின் இறுதிக் கட்டமான ஏகாதிபத்தியம் அப்பொழுது தோன்றியிருக்கவில்லை. எனவே, அதற்குரிய நடைமுறை இல்லாமலிருந்தது. லெனினாலும், ஸ்டாலினாலும்தான் இந்தக் கடமையை நிறைவேற்ற முடிந்தது.

மார்க்சு, எங்கல்சு, லெனின், ஸ்டாலின் ஆகியோர்களால் தங்களுடைய தத்துவங்களை எவ்வாறு வகுத்தளிக்க முடிந்தது? அவர்களின் நுண் அறிவு ஒரு புறமிருக்க, அவர்களின் காலத்தில் நிகழ்ந்த வர்க்கப் போராட்ட நடைமுறையிலும் அறிவியல் பரிசோதனைச் செயலிலும் அவர்கள் நேரடியாகப் பங்கேற்றதே அதற்குரிய முதன்மையான காரணம். இத்தகைய சூழ்நிலை இல்லாவிட்டால் எந்த நுண்ணறிவாளராலும் வெற்றி பெற்றிருக்க முடியாது. **படிக்கட்டைத் தாண்டமலேயே அறிவாளி, பரந்த உலக**



**விவகாரங்களை அறிகிறான்** என்ற பேச்சு, தொழில் நுட்பம் வளர்ச்சியடையாத பழங்காலத்திய வெறும் வெட்டிப் பேச்சாகும். தொழில் நுட்ப அறிவு வளர்ச்சி அடைந்திருக்கும் இன்றையக்கால கட்டத்தில் இது பொருந்துவதாக இருந்தாலும் உலகம் முழுவதும் பரவலாக நடைமுறையில் ஈடுபட்டிருக்கும் மக்கள்தான் உண்மையான, நேரடியான அறிவுடையவர்களாவார்கள். இந்த மக்கள் தமது நடைமுறையின் மூலம் ''அறிவைப் பெறும்பொழுது மட்டும்தான், மற்றும் அந்த அறிவு எழுத்து மூலமாகவும், தொழில் நுட்ப வழிகளின் மூலமாகவும் அறிவாளியிடம் *(Scholar)*, கிடைக்கும்பொழுது மட்டும்தான் அந்த அறிவாளி மறைமுகமாக ''பரந்த உலக விவகாரங்கள் எல்லாவற்றையும் அறிகிறார்.''

நீங்கள் ஒரு குறிப்பிட்ட விஷயத்தையோ, அல்லது குறிப்பிட்ட விஷயங்களின் தொகுதியையோ நேரடியாக அறிய விரும்பினால், நடைமுறைப் போராட்டத்தில் நீங்களே நேரடியாகப் பங்கு பெற்றாக வேண்டும். யதார்த்தத்தை மாற்றுவதற்கான, ஒரு குறிப்பிட்ட விஷயத்தை அல்லது குறிப்பிட்ட விஷயங்களின் தொகுதியை மாற்றுவதற்கான நடைமுறைப் போராட்டத்தில் நேரடியாக பங்கு பெற்றாக வேண்டும். இவ்வாறுதான் புதிய தோற்றங்கள் என்ற முறையில் அவற்றோடு நீங்கள் தொடர்பு கொள்ள முடியும். யதார்த்தத்தை மாற்றுவதற்காக நீங்களே நேரடியாக பங்கெடுக்கும் நடைமுறைப் போராட்டத்தில்தான் அந்த விஷயங்கள் அல்லது விஷயங்களுடைய தொகுதியின் சாராம்சத்தை உங்களால் விண்டு பார்த்துப் புரிந்து கொள்ள முடியும்.

அறிவை அடைவதற்கான இந்த வழியில்தான் ஒவ்வொருவரும் உண்மையில் செல்கிறார்கள். ஆனால் விஷயங்களை வேண்டுமென்றே திரித்துப் புரட்டுபவர்கள்தான் இதற்கு நேர்மாறாக வாதிக்கிறார்கள். ''எல்லாம் தெரிந்த மேதாவிதான்'' உலகத்தில் அதிகமான ஏளனத்திற்குரியவர். சிறிது கேள்வி ஞானத்தில் அரைவேக்காட்டு அறிவைப் பெற்றுக் கொண்டு, இவர் ''உலகத்தின் ஆதாரப்பூர்வமான முதலாம் நபராக'' தன்னை விளம்பரப்படுத்திக் கொள்கிறார். அவர் தன்னையே சரியாக எடைப் போட்டு மதிப்பிட்டுக் கொள்ளவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது.

அறிவு என்பது விஞ்ஞானம் தழுவிய ஒரு விஷயம். இதில் நேர்மையின்மையோ, செருக்கோ அனுமதிக்க முடியாதவை. நேர்மை, அடக்கம் ஆகியவை இவற்றிற்கு நேர் எதிரானவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகும்; இவையே உண்மையில் தேவையானவை ஆகும். நீங்கள் அறிவு பெற விரும்பினால், யதார்த்தத்தை மாற்றும் நடைமுறையில் பங்கு பெற்றாக வேண்டும். பேரிக்காயின் சுவையை நீங்கள் அறிய விரும்பினால் அதை நீங்களே தின்று ருசி பார்க்க வேண்டும். அணுக்களின் உள் அமைப்பையும் குணங்களையும் நீங்கள் அறிய விரும்பினால், அணுக்களின் கட்டமைப்பை மாற்றுவதற்காக நீங்கள் இயற்பியல் மற்றும் வேதியியல் பரிசோதனை செய்ய வேண்டும். புரட்சியின் தத்துவம், வழிமுறைகள் பற்றி நீங்கள் அறிய விரும்பினால், நீங்கள் புரட்சியில் பங்கு பெற வேண்டும்.

உண்மையான அறிவு முழுவதும் நேரடியான அனுபவத்திலிருந்தே தோன்றுகிறது. ஆனால் மனிதன் எல்லா விஷயங்களிலும் நேரடியான அனுபவத்தைப் பெற முடியாது. உண்மையில் நமது அறிவின் பெரும்பகுதி மறைமுக அனுபவத்திலிருந்தே வருகிறது. கடந்த காலங்களில் மற்றும் அயல் நாடுகளில் நடைபெற்ற/நடைபெறுகிற நிகழ்வுகளின் மூலமாகப் பெறப்படும் அறிவு முழுவதும் இதற்கு உதாரணங்களாகும். பண்டையகால மக்களுக்கும் அயல்நாட்டவர்களுக்கும் அத்தகைய அறிவு நேரடியான அனுபவமாக இருந்தது, அல்லது இருக்கிறது. பண்டைய கால மக்கள், அயல் நாட்டவர்கள் ஆகியோரின்— நேரடியான அனுபவம் என்ற வகையில் அந்த அறிவு ''விஞ்ஞான ரீதியான பொதுக் கருத்துக்கு'' லெனின் குறிப்பிடும் தேவைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்தால், அல்லது புறநிலை யதார்த்தத்தை விஞ்ஞான ரீதியாகப் பிரதிபலித்தால் அது நம்பத்தக்கது; இல்லாவிட்டால் அந்த அறிவை நம்ப முடியாது.

மனித அறிவு இரு பகுதிளை மட்டும் கொண்டது. ஒன்று நேரடியான அனுபவத்திலிருந்து கிடைப்பது. மற்றொன்று மறைமுகமான அனுபவத்திலிருந்து கிடைப்பது. மேலும், ஒருவருக்கு மறைமுக அனுபவமாக இருப்பது மற்றொருவருக்கு நேரடி அனுபவமாக இருக்கிறது. எனவே, அறிவு என்பதை முழுமையாகப் பார்த்தால், எந்த வகைப்பட்ட அறிவையும் நேரடி அனுபவத்திலிருந்து பிரிக்க முடியாது. மனிதன் தன் புலன் உறுப்புகளால் தன்னை சூழ்ந்திருக்கும் யதார்த்த உலகத்தை புலக்காட்சியாக அறிவதால்தான் எல்லா அறிவும் தோன்றுகிறது.



இத்தகைய புலன் அறிவை மறுப்பவன் நேரடி அனுபவத்தை மறுக்கிறான். அல்லது யதார்த்தத்தை மாற்றுவதற்கான நடைமுறையில் பங்கு கொள்வதை மறுக்கிறான். எனவே, அவன் ஒரு பொருள் முதல்வாதி அல்ல. இதனால்தான் ''எல்லாம் தெரிந்த மேதாவியைக்'' கேலிக்குரியவன் என்கிறோம். **புலிக் குகையில் புகாமல் புலிக்குட்டியைப் பிடிப்பது என்பது எவ்வாறு முடியும்?** என்றொரு சீனப் பழமொழி உண்டு. மனிதனின் நடைமுறைக்கும் இந்தப் பழமொழி உண்மையில் பொருந்தும். அறிவு பற்றிய தத்துவத்திற்கும் இது உண்மையில் பொருந்தும். நடைமுறைக்கு புறம்பான அறிவு என்பது இருக்கவே முடியாது.

யதார்த்தத்தை மாற்றியமைக்கும் நடைமுறையிலிருந்து எழும் இயங்கியல் பொருள் முதல்வாத அறிதலின் இயக்கத்தை – அறிவு பெறுவது படிப்படியாக ஆழப்பட்டுவரும் இயக்கத்தை தெளிவுபடுத்துவதற்காக கூடுதலாகச் சில பெரும்பான்மையான எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பாட்டாளி வர்க்கம் தன் நடைமுறையின் முதற்கட்டத்தில், இயந்திரங்களை உடைத்து நொறுக்கியும், தானாகக் குமுறியெழுந்தும் போராடியது. அக்காலத்தில் முதலாளித்துவ சமுதாயத்தைப் பற்றிய அதன் அறிவு, புலக்காட்சி அறிவாகவே இருந்தது. முதலாளித்துவத்தின் புதிய தோற்றங்களின் சில அம்சங்களையும் புற உறவுகளையுமே அப்போது அது அறிந்திருந்தது. அப்பொழுது பாட்டாளி வர்க்கம் **தானேயான வர்க்கமாகவே** [*Class-in-itself*] இருந்தது.

ஆனால் பாட்டாளி வர்க்கம் தனது நடைமுறையின் இரண்டாவது கட்டத்தை அடைந்தபோது பொருளாதார, அரசியல் போராட்டங்களை உணர்வு பூர்வமாகவும் அமைப்பு ரீதியிலும், நடத்தியது. அக்காலத்தில், முதலாளித்துவ சமுதாயத்தின் சாராம்சத்தையும் சமூக வர்க்கங்களிடையேயுள்ள சுரண்டல் உறவையும் தனக்கே உரிய வரலாற்று கடமையையும் பாட்டாளி வர்க்கத்தால் புரிந்துகொள்ள முடிந்தது. அதற்குக் காரணம் பாட்டாளி வர்க்கத்தின் சொந்த நடைமுறையும், நீண்ட காலப் போராட்டத்தின் மூலமாக அது பெற்ற அனுபவங்களும்தான். இதை மார்க்சும், எங்கல்சும் எல்லா வகைகளிலும் விஞ்ஞான ரீதியில் தொகுத்து பாட்டாளி வர்க்கத்தின் கல்விக்காக மார்க்சியத் தத்துவத்தை உருவாக்கினார்கள். இதற்குப் பிறகுதான் பாட்டாளி வர்க்கம் **தனக்கான வர்க்க** [*Class-for-itself*] மாக மாறியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarandam.net

சீன மக்களும் ஏகாதிபத்தியத்தைப் பற்றி இதே வழியில்தான் அறிந்து கொண்டார்கள். முதற்கட்டத்தில் மேலோட்டமான புலக்காட்சி அறிவுதான் ஏற்பட்டிருந்தது. **தய்ப்பிங் சொர்க்க சாம்ராஜ்ஜிய இயக்கம்,**[5] **யி ஹோ டுவான் இயக்கம்**[6] போன்ற கண்மூடித்தனமான அந்நிய எதிர்ப்புப் போராட்டங்கள் இதையே எடுத்துக் காட்டுகின்றன. இரண்டாவது கட்டத்தில்தான் சீன மக்கள் பகுத்தறிவின் கட்டத்தை அடைந்தார்கள். ஏகாதிபத்தியத்தின் உள், வெளி முரண்பாடுகளைக் கண்டு கொண்டார்கள். பரந்துபட்ட சீன மக்களைச் சுரண்டுவதற்காக, ஏகாதிபத்தியம் சீனத் தரகு வர்க்கத்துடனும், நிலவுடைமை வர்க்கத்துடனும் கூட்டுச் சேர்ந்திருக்கிறது என்ற அடிப்படை உண்மையைக் கண்டு கொண்டார்கள். **1919-ம் ஆண்டு மே 4-ம் நாள் இயக்கத்தின்**[7] போதுதான் இந்த அறிவு ஏற்படத் தொடங்கியது.

அடுத்து, நாம் யுத்தத்தைப் பரிசீலிப்போம். ஒரு யுத்தத்தைத் தலைமையேற்று நடத்துகிறவர்கள் யுத்த அனுபவம் இல்லாதவர்களாக இருந்தால், குறிப்பிட்டதோர் யுத்தத்தை நடத்துவதற்கான (உதாரணமாக கடந்த 10 ஆண்டுகளில் நடைபெற்ற விவசாயப் புரட்சி யுத்தம்).[8] உள்ளார்ந்த விதிகளை ஆரம்பக் கட்டத்தில் அவர்களால் புரிந்து கொள்ள முடியாது. ஆரம்பக் கட்டத்தில் அவர்களுக்கு நன்கு சண்டை செய்யும் அனுபவம் கிடைக்கிறது. அவ்வளவுதான் வேறென்ன? பல தோல்விகளையும் அடைகிறார்கள். ஆனால், அந்த அனுபவத்திலிருந்து (வெற்றி பெற்ற போராட்டங்களின் அனுபவத்திலிருந்தும், குறிப்பாகத் தோல்வியடைந்த போராட்ட அனுபவங்களிலிருந்தும்) முழு யுத்தத்தின் உள்ளோட்டமான சரடை, அதாவது அக் குறிப்பிட்ட யுத்தத்தின் விதிகளை முழுமையாக அறிந்துகொள்கின்றனர், மேலும், அதன் போர்த்தந்திரத்தையும், செயல்தந்திரத்தையும் புரிந்து கொள்கின்றனர், அதன் பயனாக அவர்களால் யுத்தத்தை மேலும் நம்பிக்கையுடன் நடத்த முடிகிறது. அத்தகையதோர் தருணத்தில், ராணுவத் தலைமைப் பொறுப்பை மாற்றி அனுபவமில்லாத ஒருவரிடம் ஒப்படைத்தால், பிறகு அவரும் கூட யுத்தத்தின் உண்மையான விதிகளை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு முன்னால் தோல்விகள் பலவற்றை சந்திக்க வேண்டியிருக்கிறது. (அனுபவங்களைப் பெற வேண்டியுள்ளது)



தன்னிடம் ஒப்படைக்கப்படும் ஒரு வேலையை ஏற்றுக்கொள்ளத் தயங்கும் தோழர் ஒருவர், ''என்னால் செய்ய முடியும் என்கிற உறுதி எனக்கு இல்லை'' என்று கூறுவதை நாம் அடிக்கடிக் கேட்கிறோம். ஏன் அவர் தன்னைப் பற்றியே உறுதியற்றவராக இருக்கிறார்? ஏனென்றால், அந்த வேலையின் உள்ளடக்கத்தையும் சூழ்நிலைமைகளையும் பற்றி அவருக்கு முறையான அறிவு இல்லை; அல்லது அத்தகைய வேலையுடன் அவருக்கு அதுவரை மிகச் சிறிதளவு தொடர்பே இருந்திருக்கிறது; அல்லது அறவே தொடர்பு இருக்கவில்லை. எனவே அந்த வேலையின் விதிகள் அவருக்கு அப்பாற்பட்டவையாய் உள்ளன. அந்த வேலையின் இயல்பையும் சூழ்நிலைமைகளையும் விவரமாக பகுத்தாராய்ந்த பின், அவருக்குத் தன்னைப்பற்றிக் கூடுதலான நம்பிக்கையும் உறுதியும் ஏற்படுவதோடு, அந்த வேலையையும் அவர் விரும்பிச் செய்வார். அவர் அந்த வேலையில் சிறிது காலத்தை செலவிட்டு அனுபவத்தை பெற்றுக் கொண்டபின், தன் மனப்போக்கிலோ, ஒருதலைப்பட்சமாகவோ, மேலோட்டமாகவோ இல்லாமல். பிரச்சனைகளை திறந்த மனதோடு அணுகும் ஒருவராக இருந்தால், பிறகு தன் வேலையை, மேற்கொண்டு எப்படிச் செய்வது என்பதைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்து மேலும் அதிக துணிவுடன் அவரால் அதை நிறைவேற்ற முடியும்.

தன் மனப்போக்கிலும், ஒருதலைப்பட்சமாகவும், மேலோட்டமாகவும் பிரச்சனைகளை அணுகுவோர் மட்டும்தான் ஓர் இடத்திற்கு வந்தவுடன் சூழ்நிலைமைகளை ஆராய மாட்டார்கள்; விஷயங்களை முழுமையாக (அவற்றின் வரலாறு, அவற்றின் நிகழ்கால, ஒட்டுமொத்த நிலைமை ஆகியவற்றை) பார்க்க மாட்டார்கள். ஆனால், விஷயங்களின் சாராம்சம், அவற்றின் இயல்பு, விஷயங்களுக்கிடையேயுள்ள உள்ளுறவுகள் ஆகியவற்றை ஊடுருவிப்பாராமல் சுயதிருப்தி மனப்பாங்கில் உத்தரவிடுவார்கள்; அல்லது கட்டளைகளைப் பிறப்பிப்பார்கள். இத்தகைய நபர்கள் இடறி விழுவது நிச்சயம்.

புறஉலக விஷயங்களோடு தொடர்பு கொள்வதுதான் அறிதல் நிகழ்ச்சிப்போக்கின் முதல் நடவடிக்கை ஆகும். இது புலக்காட்சி அறிவின் கட்டமாகும். புலக்காட்சியால் அறிந்த விவரங்களைச் சீர்படுத்திப் புணரமைப்புச் செய்வதன்மூலம் முறைப்படுத்துவது இரண்டாவது நடவடிக்கையாகும். இது கருத்துகளை உருவாக்குதல், முடிவு செய்தல், ஊகித்தல் ஆகியவற்றின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டமாகும். புலக்காட்சி அறிவின் விவரங்கள் துண்டு துண்டாகவோ, முறையற்றோ இல்லாமல் மிகவும் செழுமையாக இருக்க வேண்டும். மாயையாக இல்லாமல் யதார்த்தத்திற்கு இசைவானதாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் சரியான கருத்துகளையும், தத்துவங்களையும் உருவாக்குவதற்கு அவைகள் அடிப்படையாக இருக்க முடியும்.

இங்கு இரண்டு முக்கியமான விஷயங்களை வலியுறுத்தியாக வேண்டும். முதலாவது, முன்பே குறிப்பிட்டதுதான். இருந்தாலும் இங்கு திரும்பவும் குறிப்பிடப்பட வேண்டும். பகுத்தறிவு, புலக்காட்சி அறிவைச் சார்ந்திருக்கிறது என்பதே அது. பகுத்தறிவை புலக்காட்சி அறிவிலிருந்து பெறத் தேவையில்லை என்று எவரேனும் நினைத்தால் அவர் ஒரு கருத்து முதல்வாதி ஆவார். தத்துவத்தின் வரலாற்றில் ''பகுத்தறிவாளர்கள்'' சிந்தனை முறை இருக்கிறது. அது யதார்த்தத்தை விவேகமான விளக்கமாக மட்டும்தான் ஒப்புக்கொள்கிறதேயன்றி அனுபவமாக ஏற்றுக்கொள்வதில்லை. புத்திபூர்வமானது மட்டுமே நம்பத்தக்கது; புலக்காட்சி அனுபவம் நம்பத்தக்கதல்ல என்றே அது கருதுகிறது. பகுத்தறிவாளர்களது சிந்தனைமுறை விஷயங்களைத் தலைகீழாகப் புரட்டுவதன் மூலம் தவறிழைக்கிறது. புலக்காட்சி உணர்வைத் தனது ஊற்று மூலமாகக் கொண்டிருப்பதால்தான் பகுத்தறிவு நம்பத் தகுந்ததாக இருக்கிறது. இல்லாவிட்டால் அது ஊற்றுமூலமில்லா நீரோடையைப் போன்றதாகவும் வேர்களில்லாத மரத்தைப் போன்றதாகவும் இருக்கும்! அகநிலைப்பட்டதாகவும், தான்- தோன்றித்தனமானதாகவும், நம்பத்தகாததாகவும் இருக்கும்.

அறிதலின் நிகழ்ச்சிப் போக்கை வரிசைப்படுத்தினால், புலக்காட்சி அனுபவம் முதலில் வருகிறது. அறிதலின் நிகழ்ச்சி போக்கில் சமுதாய நடைமுறையின் முக்கியத்துவத்தை உண்மையிலேயே நாம் வலியுறுத்துகிறோம். ஏனென்றால், சமுதாய நடைமுறை ஒன்றுதான் மனித அறிவைத் தோன்றச் செய்கிறது. மேலும், புறநிலை உலகிலிருந்து புலக்காட்சி அனுபவத்தை மனிதன் பெறுவதைத் தொடங்கி வைப்பதற்கு சமுதாய நடைமுறை ஒன்றினால்தான் முடியும். தனது கண்களை மூடிக்கொண்டு காதுகளை அடைத்துக் கொண்டு. புறநிலை உலகிலிருந்து முற்றிலும் தன்னைத் துண்டித்துக் கொள்ளும் மனிதனுக்கு அறிவு என்று ஒன்று இருக்கமுடியாது. அறிவு



அனுபவத்தில் தொடங்குகிறது. இதுதான் அறிவு பற்றிய தத்துவத்தின் பொருள் முதல்வாதமாகும்.

இரண்டாவது அம்சம் என்னவென்றால். இந்த அறிவு ஆழப்படுத்தப்பட வேண்டியது அவசியம். அதாவது புலக்காட்சிக் கட்டத்தின் அறிவை பகுத்தறிவுக் கட்டத்திற்கு வளர்க்க வேண்டியது அவசியம். இதுதான் அறிவு பற்றிய தத்துவத்தின் இயங்கியல்[9] ஆகும். அறிவு, புலக்காட்சி என்ற கீழ் நிலையிலேயே நிற்க முடியும்; புலக்காட்சி அறிவு மட்டுமே நம்பத்தக்கது; பகுத்தறிவு நம்பத்தக்கதல்ல என்றெல்லாம் புரிந்து கொள்வது அனுபவவாதம் [*Empiricism*] என்ற வரலாற்று ரீதியான தவறைத் திரும்பவும் செய்வதாகும்.

புலக்காட்சி அறிவின் மூலம் அறியப்படும் விவரங்கள், புற உலகத்தின் யதார்த்தங்கள் சிலவற்றைப் பிரதிபலித்த போதிலும் (அனுபவத்தை ஆத்மசோதனை என்பதற்குள் குறுக்கிக் கொள்ளும் கருத்து முதல்வாத அனுபவத்தைப் பற்றி நான் இங்கு கூறவில்லை) அவை ஒருதலைபட்சமாகவும் மேலோட்டமாகவுமே இருக்கின்றன; அவை விஷயங்களை அரைகுறையாகத்தான் பிரதிபலிக்கின்றன; அவற்றின் சாராம்சத்தை அவை பிரதிபலிப்பதில்லை; இவற்றையெல்லாம் அந்த தத்துவம் புரிந்து கொள்ளாமல் இருப்பதால்தான் தவறு செய்கிறது.

ஒரு விஷயத்தை, அதன் ஓட்டுமொத்தமான அம்சங்களையும் தழுவி முழுமையாகப் பிரதிபலிப்பதற்கு, அதன் சாராம்சம் மற்றும் அதன் உள்ளார்ந்த விதிகளைப் பிரதிபலிப்பதற்கு, புலன் உணர்வினால் கிடைத்த எண்ணற்ற விவரங்களில் கொச்சையானவற்றைத் தள்ளிவிட்டு தேவையானதைத் தேர்ந்தெடுத்து கொள்ளவேண்டும். போலியானதை விலக்கிவிட்டு உண்மையானதைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டும். ஒரு அம்சத்திலிருந்து இன்னொரு அம்சத்திற்குத் தொடர்பு கொண்டு, புறப்பகுதியிலிருந்து உட்பகுதிக்குச் சென்று. கருத்துகள், தத்துவங்கள் ஆகியவற்றை உருவாக்கவும் சிந்தனையைப் பயன்படுத்திப் புனரமைக்கவும் வேண்டியது அவசியமாகும். புலக்காட்சி அறிவிலிருந்து பகுத்தறிவுக்கு ஒரு துரிதப் பாய்ச்சலை நிகழ்த்துவதும் அவசியமாகும். இத்தகைய புனரமைக்கப்பட்ட அறிவு, வெற்றறிவோ நம்பத்தகாத அறிவோ அல்ல. அதற்கு மாறாக நடைமுறையின் அடிப்படையிலான, அறிதலின் நிகழ்ச்சிப்போக்கில், விஞ்ஞான ரீதியாக புனரமைக்கப்பட்டது என்னவாக இருந்தாலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லெனின் கூறுவதைப் போல், அது புறநிலை யதார்த்தத்தை மேலும் அழமாக, மேலும் உண்மையாக, மேலும் முழுமையாகப் பிரதிபலிக்கின்றன.

இதற்கெதிராக கொச்சையான ''நடைமுறையாளர்கள்'' அனுபவத்தை மதிக்கிறார்கள். ஆனால் தத்துவத்தைச் சிறுமைப்படுத்துகிறார்கள். எனவே அவர்களுக்கு முழுமையான புறநிலை நிகழ்ச்சிப்போக்கைப் பற்றி அனைத்தையும் தழுவிய கருத்தோட்டங்கள் இருக்காது; தெளிவான திசைவழி இருக்காது; எப்பொழுதாவது ஏற்படுகின்ற வெற்றிகளையும் நொடிப் பொழுதே தெரியும் அரைகுறையான உண்மையையும் கொண்டு அவர்கள் திருப்தி அடைந்துவிடுகிறார்கள். இத்தகைய நபர்கள் ஒரு புரட்சியை வழி நடத்தினால் அதை ஒரு முட்டுச் சந்தில் கொண்டுபோய் விட்டு விடுவார்கள்.

**பகுத்தறிவு, புலக்காட்சி அறிவைச் சார்ந்திருக்கிறது. புலக்காட்சி அறிவைப் பகுத்தறிவாக வளர்த்தெடுக்க வேண்டியுள்ளது** - இதுதான் அறிவு பற்றிய இயங்கியல் பொருள் முதல்வாதத் தத்துவம். சித்தாந்தத்தில் ''பகுத்தறிவுவாதமோ'', ''அனுபவவாதமோ'' அறிவின் வரலாற்று இயல்பை அல்லது இயங்கியல் தன்மையைப் புரிந்து கொள்ளவில்லை. இந்தச் சிந்தனை முறைகள் ஒவ்வொன்றும் உண்மையில் ஒரு அம்சத்தை மட்டுமே கொண்டிருக்கின்றன. (இங்கு நான் பொருள் முதல்வாதப் பகுத்தறிவு வாதத்தையும், பொருள் முதல்வாத அனுபவவாதத்தையுமே குறிப்பிடுகிறேன்; கருத்து முதல்வாத பகுத்தறிவுவாதத்தையும் கருத்து முதல்வாத அனுபவவாதத்தையும் குறிப்பிடவில்லை). இவை இரண்டுமே அறிவு பற்றிய தத்துவத்தின் முழுமையைப் பொறுத்த மட்டில் தவறானவை. புலக்காட்சி அறிவிலிருந்து பகுத்தறிவுவாதமாக வளரும் இயங்கியல் பொருள் முதல்வாத அறிவு இயக்கம் அறிதலின் சிறியதோர் நிகழ்ச்சிப் போக்கிற்கும் (உதாரணமாகத் தனியொரு விஷயத்தை அல்லது கடமையை அறிவது) அறிதலின் பெரியதோர் நிகழ்ச்சிப் போக்கிற்கும் (உதாரணமாக ஒரு முழுச் சமுதாயத்தை அல்லது ஒரு புரட்சியை அறிவது) உண்மையில் பொருந்தும்.

ஆனால் அறிவின் இயக்கம் இங்கே முடிவதில்லை. இயங்கியல் பொருள் முதல்வாத அறிவு இயக்கம், பகுத்தறிவோடு நின்றுவிட்டால், பிரச்சனையின் ஒரு பாதி மட்டுமே



தீர்க்கப்படுகிறது. மார்க்சிய சித்தாந்தத்தைப் பொருத்தவரையில், பிரச்சனையின் பாதி என்பது குறைந்த முக்கியத்துவமுள்ள பகுதியே. புறநிலையான உலகத்தின் விதிகளைப் புரிந்துகொண்டு அதை விளக்கும் ஆற்றல் பெற்றிருப்பது மிக முக்கியமான பிரச்சனையல்ல. ஆனால், இந்த விதிகளைப் பற்றிய அறிவைத் தீவிரமாக பயன்படுத்தி உலகத்தை மாற்றுவதுதான் மிக முக்கியமான பிரச்சனையாக மார்க்சிய சித்தாந்தம் கருதுகிறது.

மார்க்சிய நோக்கு நிலைப்படி, தத்துவம் முக்கியமானது. **புரட்சிகரமான தத்துவம் இல்லாமல் புரட்சிகரமான இயக்கம் இருக்க முடியாது.**[10] என்ற லெனினுடைய வாசகத்தில் தத்துவத்தின் முக்கியத்துவத்தை முழுமையாகக் காணலாம். ஆனால் தத்துவம் செயலுக்கு வழிகாட்ட முடியும் என்ற ஒரே காரணத்தால்தான் மார்க்சியம் அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. நாம் ஒரு சரியான தத்துவத்தைப் பெற்றிருந்தால் அதை நடைமுறையில் பயன்படுத்தாமல் அதைப்பற்றி வெறுமனே பிதற்றித் திரிந்தால், அல்லது பூட்டி வைத்திருந்தால் அந்த தத்துவம் எவ்வளவு சிறந்ததானாலும் அதனால் ஒரு பயனும் இல்லை.

அறிவு என்பது நடைமுறையிலிருந்து தொடங்குகிறது. நடைமுறையின் மூலம் சேர்க்கப்பட்ட தத்துவ அறிவு திரும்பவும் நடைமுறைக்கே செல்ல வேண்டும். அறிவின் சுறுசுறுப்பான பாத்திரம் புலக்காட்சி அறிவிலிருந்து பகுத்தறிவாக மாறும் துரிதப் பாய்ச்சலில் வெளிப்படுகிறது. அது மட்டுமல்ல, பகுத்தறிவிலிருந்து புரட்சிகர நடைமுறைக்குச் செல்லும் துரித பாய்ச்சலிலும் அது வெளிப்பட வேண்டும். இது மிகவும் முக்கியமானது ஆகும். உலகத்தின் விதிகளை உட்கொள்ளுகின்ற அறிவை, உலகத்தை மாற்றும் நடைமுறைக்குத் திருப்பி செலுத்த வேண்டும். அதாவது பொருளுற்பத்தி நடைமுறையிலும், புரட்சிகர வர்க்கப் போராட்ட நடைமுறையிலும், புரட்சிகர தேசியப் போராட்டத்திலும், விஞ்ஞானப் பரிசோதனையிலும் திரும்பவும் அறிவைப் பயன்படுத்த வேண்டும். இதுதான் தத்துவத்தைச் சோதித்து வளர்க்கும் நிகழ்ச்சிப் போக்கும் அறிதலின் முழு நிகழ்ச்சிப் போக்கின் தொடர்ச்சியும் ஆகும்.

தத்துவம் புறநிலை யதார்த்தத்தோடு இசைவுடையதாக உள்ளதா என்ற பிரச்சனைக்கு மேலே குறிப்பிட்டுள்ள புலக்காட்சியிலிருந்து பகுத்தறிவாக வளரும் அறிவின் இயக்கத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முழுமையாகத் தீர்வு கிடைப்பதில்லை; தீர்வு காணவும் முடியாது. இந்த பிரச்சனையை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்குரிய ஒரே வழி பகுத்தறிவை சமுதாய நடைமுறைக்குத் திரும்பச் செலுத்துவதும் தத்துவத்தை நடைமுறையில் பயன்படுத்தி ஒருவர் மனதில் எதிர்பார்க்கும் பலன்களை அடைய முடியுமா என்று பார்ப்பதுமேயாகும்.

இயற்கை அறிவியலின் பல தத்துவங்கள் உண்மையானவையாகக் கருதப்படுவதற்கு காரணம் இயற்கை விஞ்ஞானிகள் அவற்றைத் தோற்றுவித்த பொழுது அவ்வாறு கருதப்பட்டது என்பது மட்டுமல்ல; ஆனால் பின்னால் நடத்தப்பட்ட விஞ்ஞான நடைமுறையில் அந்தத் தத்துவங்கள் சரிபார்க்கப்பட்ட காரணத்தினாலும்தான் அவை உண்மையானவையாகக் கருதப்படுகின்றன. அதேபோல், மார்க்சிய-லெனினியத் தத்துவம் உண்மையானதாகக் கருதப்படுவதற்குக் காரணம் அது மார்க்சு, எங்கல்சு, லெனின், ஸ்டாலின் ஆகியோரால் அறிவியல் ரீதியில் உருவாக்கப்பட்டது என்பது மட்டுமல்ல; ஆனால் பின்னால் நடந்த புரட்சிகர வர்க்கப் போராட்ட நடைமுறையிலும் புரட்சிகரத் தேசிய போராட்ட நடைமுறையிலும் சரிபார்க்கப்பட்ட காரணத்தினாலும்தான் மார்க்சிய-லெனினிய தத்துவம் உண்மையானதாக கருதப்படுகின்றது.

இயங்கியல் பொருள் முதல்வாதம் எல்லாக் காலத்திலும் அனைத்திற்கும் பொருந்தும் உண்மையாகும். ஏனெனில், எவரும் தனது நடைமுறையில் அதன் ஆளுமையிலிருந்து தப்ப முடியாது. பல தத்துவங்களின் உண்மை முழுமை பெறாததாக இருந்திருக்கிறது என்றும் முழுமை பெறாத இந்தத் தன்மை நடைமுறையில் சோதிப்பதனூடேதான் சரி செய்யப்படுகிறது என்றும் மனித அறிவின் வரலாறு எடுத்து கூறுகிறது. பல தத்துவங்கள் தவறானவையாக இருக்கின்றன: நடைமுறையில் சோதிப்பதனூடேதான் அவற்றின் தவறுகள் சரி செய்யப்படுகின்றன. அதனால்தான் நடைமுறையே உண்மைக்கு உரைகல் என்று கூறப்படுகிறது. வாழ்வின் நிலைபாடு, நடைமுறையின் நிலைபாடு ஆகியவை அறிவு பற்றிய தத்துவத்தின் அடிப்படையான, முதன்மையான நிலைபாடாக ஏன் இருக்க வேண்டும் (லெனின்).[11] ''தத்துவம் புரட்சிகரமான நடைமுறையுடன் இணையாவிட்டால் அது இலக்கற்றதாகிவிடும். அதேபோல் நடைமுறையின் பாதையில் புரட்சிகர தத்துவம் ஒளி வீசாவிட்டால் நடைமுறை இருளில் தடுமாறும்''[12] என்று ஸ்டாலின் கூறினார்.



இந்த நிலையை அடைந்தவுடன், அறிவு வளர்ச்சியின் இயக்கம் முற்றுப்பெறுகிறதா? ஆனால் இன்னும் முற்றுப் பெறவில்லை என்பதே நமது பதில். ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக்கட்டத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட புறநிலை நிகழ்ச்சிப்போக்கை (இயற்கை நிகழ்ச்சிப் போக்கையோ அல்லது சமுதாய நிகழ்ச்சிப் போக்கையோ) மாற்றும் நடைமுறையில், சமுதாயத்திலுள்ள மனிதர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். அப்பொழுது, தங்கள் மூளையில் புறநிலை நிகழ்ச்சிப் போக்கைப் பிரதிபலித்து, தங்களுடைய உணர்வுப்பூர்வமான, துடிப்பான பாத்திரத்தைச் செயலாக்குகின்றனர். இதன் விளைவாகத் தங்கள் அறிவைப் புலக்காட்சி அறிவிலிருந்து பகுத்தறிவிற்கு முன்னேற்றமடையச் செய்கின்றனர்.

இந்தக் குறிப்பிட்ட புறநிலை நிகழ்ச்சிப் போக்கின் விதிகளுக்கு பொதுவாக இசைந்தவாறு கருத்துகள், தத்துவங்கள் அல்லது திட்டங்கள், செயல்முறைகள் ஆகியவற்றை மனிதர்களால் உருவாக்க முடியும். இதன்பிறகு அவர்கள் இந்தக் கருத்துகள், தத்துவங்கள், திட்டங்கள் அல்லது செயல்முறைகள் ஆகியவற்றை இதே புறநிலை நிகழ்ச்சிப் போக்கின் நடைமுறையில் பயன்படுத்துகிறார்கள். இதே நடைமுறை நிகழ்ச்சிப் போக்கின் மூலம் அவர்கள் முன்பு வகுத்த தங்களுடைய கருத்துகள், தத்துவங்கள், திட்டங்கள் அல்லது செயல்முறைகள் ஆகியவற்றை யதார்த்த உண்மையாக மாற்ற முடியுமானால் அல்லது ஏறத்தாழ அவ்விதம் செய்ய முடியுமேயானால், அதாவது அவர்களுடைய மனதிலுள்ள குறிக்கோளை அவர்கள் அடைய முடியுமானால், இந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சிப் போக்கை பொறுத்தவரையில் அவர்களின் அறிவு வளரும் இயக்கம் பூர்த்தியாகிவிட்டதெனக் கருதலாம்.

இயற்கையை மாற்றும் நிகழ்ச்சிப் போக்கில் ஒரு பொறியியல் திட்டத்தை பூர்த்தி செய்தல், ஒரு விஞ்ஞான ரீதியான கருதுகோளை சோதித்தல், ஒரு கருவியைப் படைத்தல் அல்லது விளைந்த தானியங்களை அறுவடை செய்தல் ஆகியவற்றை இதற்கு எடுத்துக் காட்டாக கூறலாம்; அல்லது சமுதாயத்தை மாற்றும் நிகழ்ச்சிப்போக்கில் ஒரு வேலை நிறுத்தத்தின் வெற்றி, ஒரு போரின் வெற்றி அல்லது ஒரு கல்வித் திட்டத்தை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிறைவேற்றுவது ஆகியவற்றையும் இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். இவை அனைத்தும் ஒருவர் தனது மனதில் கொண்ட குறிக்கோளை அடைந்ததற்குரியவை என்று கருதலாம்.

ஆனால் பொதுவாக கூறினால் இயற்கையை மாற்றும் நடைமுறையிலும் சரி அல்லது சமுதாயத்தை மாற்றும் நடைமுறையிலும் சரி, மனிதர்கள் தொடக்கத்தில் கொண்ட கருத்துகள், தத்துவங்கள், திட்டங்கள் அல்லது செயல்முறைகள் அப்படியே எவ்வித மாறுதலுமின்றி நிறைவேறுவதில்லை. இதற்கு காரணம் யதார்த்தத்தை மாற்றுவதில் ஈடுபட்டிருக்கும் மக்கள் வழக்கமாக, எண்ணற்ற வழிகளில் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். நிலவிவரும் விஞ்ஞானத் தொழில்நுட்ப நிலைமைகளால் அவர்கள் கட்டுப்படுத்தப்படுவது மட்டுமின்றி, புறநிலை நிகழ்ச்சிப் போக்கின் வளர்ச்சியாலும், அந்த வளர்ச்சிப்போக்கு வெளிப்படும் அளவினாலும் கூட (அதாவது புறவய நிகழ்ச்சிப்போக்கின் அம்சங்களும், சாராம்சமும் இன்னும் முழுமையாக வெளிப்படாத காரணத்தால்) அவர்கள் கட்டுப்படுத்தப்படுகிறார்கள்.

இத்தகைய நிலைமையில், நடைமுறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் எதிர்பாராத சூழ்நிலைகளைக் கண்டறியும்பொழுது கருத்துகள், தத்துவங்கள், திட்டங்கள் அல்லது செயல்முறைகள் ஆகியவற்றில் வழக்கமாக ஒரு பகுதி மாற்றப்படுகின்றது. அல்லது சில நேரங்களில் அவை முழுமையாக மாற்றப்படுகின்றன. அதாவது ஆரம்பத்தில் உருவான கருத்துகள், தத்துவங்கள், திட்டங்கள் அல்லது செயல்முறைகள் ஆகியவற்றின் ஒரு பகுதியோ அல்லது முழுமையோ யதார்த்தத்துடன் இசைவாவதற்கு தவறியதாலும் அவற்றின் ஒரு பகுதியோ அல்லது முழுமையோ பிழையானதாக இருப்பதாலும் இவ்வாறு நடைபெறுகின்றன. தவறான அறிவு சரி செய்யப்பட்டு, புறநிலை நிகழ்ச்சிப் போக்கின் விதிகளுக்கு இசைவானதாக்க முயலுவதற்கு முன்பு, இதன் விளைவாக, அகநிலைப் புறநிலையாக மாற்ற இயலுவதற்கு முன்பு, அல்லது வேறு விதமாகக் கூறினால், எதிர்பார்த்த பலனை நடைமுறையில் அடைய இயலுவதற்கு முன்பு, பல சந்தர்ப்பங்களில் தோல்விகள் பல முறை திரும்பத் திரும்ப நிகழ்கின்றன. ஆயினும், இந்தக் கட்டத்தை அடைந்தவுடன் ஒரு குறிப்பிட்ட புறவய வளர்ச்சிக் கட்டத்தினுடைய மனித அறிவின் இயக்கம் முழுமை அடைந்ததாகக் கருதப்படுகிறது.



எனினும் முன்னேற்றத்தின் நிகழ்ச்சிப் போக்கைப் பொறுத்தவரையில், மனித அறிவின் இயக்கம் பூர்த்தியடையவில்லை. இயற்கை அரங்கிலும் சரி, சமுதாய அரங்கிலும் சரி ஒவ்வொரு நிகழ்ச்சிப் போக்கும் தன் உள் முரண்பாடுகள், போராட்டங்கள் ஆகியவற்றின் காரணமாக வளர்ச்சியும் முன்னேற்றமும் அடைகின்றன. இதோடு சேர்ந்தே மனித அறிவின் இயக்கமும் வளர்ந்து முன்னேற வேண்டும். சமுதாய இயக்கத்தை பொறுத்தமட்டில் உண்மையான புரட்சிகரத்தலைவர்கள் தமது கருத்துகள், தத்துவங்கள், திட்டங்கள் அல்லது செயல்முறைகள் தவறானவை என்று கண்டறியும்பொழுது மேலே குறிப்பிட்டாற் போல் அவற்றை சரிசெய்து கொள்வதில் சிறந்து விளங்க வேண்டும்.

அது மட்டுமல்ல; ஒரு குறிப்பிட்ட புறநிலை நிகழ்ச்சிப்போக்கு முன்னமேயே ஒரு வளர்ச்சிக் கட்டத்திலிருந்து இன்னொரு வளர்ச்சி கட்டத்திற்கு முன்னேறி மாறுதல் அடைந்துவிட்ட பிறகு, அதற்கேற்றாற் போல் தாமும் தமது சகப் புரட்சியாளர்கள் அனைவரும் தங்களுடைய அகநிலையான அறிவை வளர்த்து முன்னேற்றி மாற்றிக் கொள்வதிலும் அவர்கள் சிறந்து விளங்க வேண்டும். அதாவது, முன்வைக்கப்படும் புதிய புரட்சிகர கடமைகளும் புதிய செயல்முறைகளும் நிலைமைகளில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றத்திற்கு இசைவுடையனவாக இருக்கின்றனவா என்பதை அவர்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு புரட்சிகரமான காலகட்டத்தில் நிலைமைகள் மிக வேகமாக மாறுகின்றன. மாறிய நிலைமைக்குத் தக்கபடி புரட்சியாளர்களின் அறிவும் வேகமாக மாறாவிட்டால் அவர்களால் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியாது.

எனினும் சிந்தனையானது யதார்த்தத்திலிருந்து பின் தங்கி சுணங்கி விடுவது அடிக்கடி நிகழ்கிறது. மனிதனுடைய அறிதலின் நிகழ்ச்சியானது, சமுதாய நிலைமைகள் பலவற்றால் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதே இதற்குக் காரணம். மாறிக் கொண்டிருக்கும் புறநிலைமைகளுடன் தங்களுடைய சிந்தனையை முன்னேற்றத் தவறி, வரலாற்று ரீதியாக வெளிபட்டுவரும் வலதுசாரி சந்தர்ப்பவாதத்தைக் கொண்டிருக்கும் புரட்சிகர அணிகளிலுள்ள மரமண்டையர்களை நாம் எதிர்க்கிறோம். எதிர்மறைகளுக்கிடையிலான போராட்டம் முன்னமேயே புறநிலையான நிகழ்ச்சிப் போக்கை முன்னோக்கித் தள்ளிவிட்டிருக்கும் அதே நேரத்தில், தமது அறிவு பழைய கட்டத்திலேயே நின்றுவிட்டது என்பதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்கள் உணரத் தவறுகிறார்கள். எல்லா மரமண்டையர்களின் சிந்தனையின் தன்மையும் இதுதான். அவர்களுடைய சிந்தனை சமுதாய நடைமுறையிலிருந்து துண்டிக்கப்பட்டு இருக்கின்றது. எனவே, சமுதாயத் தேரை முன்னோக்கிச் செலுத்துவதற்கு இவர்கள் வழிகாட்டியாக இருக்க முடியாது. இவர்கள் வெறுமனே அதற்குப் பின்னால் வால்பிடித்துச் செல்வார்கள்; அது மிக வேகமாகப் போகிறதென்று புலம்புவார்கள்; அந்தத் தேரைப் பின்னுக்கிழுக்கவோ அல்லது எதிர்திசையில் திருப்பி விடவோ முயலுவார்கள்.

இடதுசாரி வாய்ச்சவடால்தனத்தையும் நாம் எதிர்க்கிறோம். ''இடதுசாரிகளின் சிந்தனை''யானது, புறநிலையான நிகழ்ச்சிப் போக்கின் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தைக் கடந்து செல்கிறது. அவர்களில் சிலர் தமது கற்பனையில் தோன்றியவற்றை உண்மையென்று கருதுகிறார்கள். அதே நேரத்தில் மற்றவர்கள், எதிர்காலத்தில் மட்டுமே கைக்கூடக்கூடிய ஒரு இலட்சியத்தை நிகழ்காலத்திலேயே அடைந்து விடுவதற்காக கஷ்டப்படுகிறார்கள். இவர்கள் பெரும்பான்மை மக்கள் ஈடுபட்டுள்ள நடை முறையிலிருந்தும் இன்றைய யதார்த்தத்திலிருந்தும் தங்களைத் துண்டித்துக் கொண்டு தமது நடவடிக்கைகளில் அதி தீவிர சாகசவாதிகளாகக் *(adventurists)* காட்சியளிக்கிறார்கள்.

கருத்து முதல்வாதம், எந்திரவியல் பொருள் முதல்வாதம் *(Mechanical Materialism)* சந்தர்ப்பவாதம், அதிதீவிர சாகசவாதம் போன்றவை அனைத்தும் அகத்திற்கும், புறத்திற்கும் உடைவு ஏற்படுவது; அறிவு நடைமுறையில் இருந்து துண்டிக்கப்படுவது ஆகியவற்றின் இயல்பாகும். விஞ்ஞான பூர்வமான சமுதாய நடைமுறையின் இயல்பாக இருந்து வருகின்ற அறிவு பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவம் இத்தகைய தவறான கருத்தியல் (சித்தாந்தங்களை) உறுதியாக எதிர்க்காமலிருக்க முடியாது. சார்பற்றதும், *(absolute)* பொதுவானதுமான பிரபஞ்ச வளர்ச்சிப் போக்கில் ஒவ்வொரு குறிப்பான வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கும் சார்புத் தன்மையுடையது. எனவே, சார்பற்ற பேருண்மையின் முடிவற்ற ஓட்டத்தில், ஒரு குறிப்பான நிகழ்ச்சிப் போக்கின் வளர்ச்சியில், எந்தவொரு குறிப்பிட்ட கட்டத்தைப் பற்றியும் மனிதன் பெறும் அறிவு என்பது சார்புத் தன்மையுடைய உண்மையாகத்தான் இருக்க முடியும் என்று மார்க்சியர்கள் அறிந்தேற்கிறார்கள். எண்ணற்ற சார்புத் தன்மையான



உண்மைகளை உள்ளடக்கிய ஒட்டு மொத்தமே சார்பற்ற பேருண்மையின் முழுமையை உருவாக்குகிறது.[13]

புறவயமான ஒரு நிகழ்ச்சிப் போக்கின் வளர்ச்சியானது முரண்பாடுகளும், போராட்டங்களும் நிறைந்தது ஆகும். மனிதனின் அறிவு இயக்கமும் அதைப் போன்றதே ஆகும். புற உலகின் இயங்கியல் இயக்கங்கள் அனைத்தும் விரைவிலோ அல்லது காலந்தாழ்ந்தோ மனித அறிவில் பிரதிபலிக்க முடியும். சமுதாய நடைமுறையில் தோற்றம், வளர்ச்சி, மறைவு ஆகிய நிகழ்ச்சிப் போக்குகள் முடிவற்றனவாய் இருக்கின்றன; அதைப் போலவே, மனித அறிவிலும் தோற்றம், வளர்ச்சி, மறைவு ஆகிய நிகழ்ச்சிப் போக்குகள் முடிவற்றனவாயிருக்கின்றன. குறிப்பிட்ட கருத்துகள், தத்துவங்கள், திட்டங்கள் அல்லது செயல்முறைகளுக்கு ஏற்ப புறநிலை யதார்த்தத்தை மாற்றும் மனிதனுடைய நடைமுறை மேலும் மேலும் முன்னேற முன்னேற, புறநிலை யதார்த்தத்தைப் பற்றிய மனிதனின் அறிவும் மேலும் மேலும் ஆழமாகிறது. புறநிலை உலகில் மாற்றத்தின் இயக்கங்கள் ஒரு பொழுதும் முற்றுப் பெறாது. நடைமுறையின் மூலம் மனிதன் உண்மையை அறியும் நிகழ்ச்சிப் போக்கும் அதைப் போன்றதுதான்.

மார்க்சியம் - லெனினியம் எந்த வகையிலும் உண்மைப் பற்றிய முழு அறிவையும் அப்படியே திரட்டிக் கொடுத்து விடவில்லை. மாறாக, அது முழு நடைமுறையின் வாயிலாக உண்மையை அறியும் வழியை இடைவிடாமல் திறந்துவிடுகிறது. அகமும், புறமும், தத்துவமும் நடைமுறையும், அறிவதும், செய்வதும் பருண்மையின் வரலாற்று ரீதியான ஒற்றுமையில் இருக்கிறது என்பதே நமது முடிவு; பருண்மையான வரலாற்றிலிருந்து பிரிந்து செல்லும் தவறான சித்தாந்தங்கள் *(ideologies)* அவை வலதாக இருந்தாலும் சரி, இடதாக இருந்தாலும் சரி, நாம் அவற்றை எதிர்க்கிறோம்.

சமுதாய வளர்ச்சியின் இன்றைய யுகத்தில் உலகத்தைப் பற்றி சரியாகப் புரிந்துக்கொண்டு அதை மாற்றும் பொறுப்பை, வரலாறு, பாட்டாளி வர்க்கத்தினதும், அதனுடைய, கட்சியினதும் தோள்களின்மீது சுமத்தியிருக்கிறது. அறிவியல் பூர்வமான அறிவை ஆதாரமாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்ற, உலகத்தை மாற்றும் நடைமுறையினுடைய இந்த நிகழ்ச்சிப் போக்கு, உலகத்திலும் சீனத்திலும் ஒரு வரலாற்றுத் தருணத்தை ஏற்கனவே நெருங்கி விட்டது. இந்த மகத்தான தருணம் மனித வரலாறு காணாதது, அதாவது உலகத்திலிருந்தும் சீனத்திலிருந்தும் கரிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருளை முற்றாக அகற்றிவிட்டு, உலகத்தை முன்பு எப்பொழுதும் இருந்திராத ஒரு ஒளிமயமான உலகமாக மாற்றும் தருணமே இது.

உலகத்தை மாற்றுவதற்கான பாட்டாளி வர்க்கம் மற்றும் புரட்சிகர மக்கள் ஆகியோரின் போராட்டம் கீழ்கண்ட கடமைகளை நிறைவேற்றுவதைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. ***புற நிலை உலகத்தை மாற்றும் அதே நேரத்தில் தனது சொந்த அகநிலை உலகத்தையும் மாற்றுவது; அறிந்து கொள்ளும் திறனை மாற்றி, அகநிலை உலகத்திற்கும், புறநிலை உலகத்திற்கும் இடையிலான உறவை மாற்றுவது*** ஆகியவைகளே அக்கடமைகள் ஆகும்.

உலகின் ஒரு பகுதியான, சோவியத் யூனியனில் இத்தகையதோர் மாற்றம் முன்னமேயே ஏற்பட்டு விட்டது. அங்குள்ள மக்கள் மாற்றத்தின் இந்த நிகழ்ச்சிப் போக்கை முன்னோக்கித் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். சீன மக்களும் உலகத்தின் இதர பகுதியில் வாழும் மக்களும் இத்தகைய நிகழ்ச்சிப் போக்கினூடே சென்று கொண்டிருக்கிறார்கள் அல்லது செல்வார்கள். மாற்றப்பட வேண்டிய புறநிலை உலகம் என்பதற்குள் இந்த மாற்றத்தின் விரோதிகளும் அடங்குவர். இவர்கள் தாமாக முன்வந்து உணர்வுப் பூர்வமாக மாறுவதற்கு முன்னால் நிர்பந்தமாக மாறும் ஒரு கட்டத்தைக் கடந்தாக வேண்டும். மனிதகுலம் முழுமையும் தாமாக முன்வந்து உணர்வுப்பூர்வமாக தங்களை மாற்றிக்கொள்வதோடு உலகத்தையும் மாற்றும்பொழுதுதான் உலகம் பொதுவுடைமை யுகத்தை அடைய முடியும்.

நடைமுறையினூடே உண்மையைக் கண்டறிவது; மீண்டும் நடைமுறையினூடே உண்மையைச் சரிபார்த்து வளர்ப்பது; புலக்காட்சி அறிவிலிருந்து தொடங்கி, அதைத் தீவிரமாக வளர்த்துப் பகுத்தறிவாக்குவது; பிறகு பகுத்தறிவிலிருந்து தொடங்கி அகநிலை உலகையும், புறநிலை உலகையும் மாற்றும் புரட்சிகர நடைமுறைக்குத் தீவிரமாக வழிகாட்டுவது; நடைமுறை, அறிவு; மீண்டும் நடைமுறை, மீண்டும் அறிவு. இந்த வடிவம் தானாகவே முடிவற்று வளரும் சுழற்சிகளாக மீண்டும் மீண்டும் ஏற்படுகின்றது; ஒவ்வொருச் சுழற்சியிலும் நடைமுறை, அறிவு ஆகியவற்றின் உள்ளடக்கத்தை உயர்ந்த மட்டத்திற்கு உயர்த்துகிறது. இத்தகையதுதான், இயங்கியல் பொருள் முதல்வாத அறிவு தத்துவத்தின் முழுமையாகும். இதுவே அறிவதற்கும் செய்வதற்கும் இடையேயுள்ள ஒற்றுமைப் பற்றிய இயங்கியல் பொருள் முதல்வாதக் கோட்பாடு ஆகும்.



## அடிக்குறிப்புகள்

1. ஹெகலின் தர்க்க அறிவியல் என்ற III புத்தகம், பதிவு 3-ல் உள்ள **கருத்து** என்பதைப் பற்றி லெனின் எழுதிய குறிப்புகளிலிருந்து வி. இ. லெனின் எழுதிய ஹெகலின் தர்க்க அறிவியல் பற்றிய சுருக்க உரையைப் பார்க்கவும் (செப்டெம்பர் - டிசம்பர்1914), தொகுப்பு நூல்கள், ருஷ்யப்பதிப்பு, மாஸ்கோ 1958, தொகுதி XXXVIII, பக். 205.

2. காரல் மார்க்ஸ் எழுதிய " ஃபாயர்பாக் பற்றிய ஆய்வுரை" (1845 ஆம் ஆண்டு வசந்தகாலம்), காரல் மார்க்ஸ் மற்றும் ஃபிரெடெரிக் எங்கெல்சு, தேர்வு நூல்கள், இரண்டு தொகுதிகள், ஆங்கில பதிப்பு, மாஸ்கோ, அயல் மொழிப்பதிப்பகம், 1958 தொகுதி II, பக் 40 3; மற்றும் "பொருள் முதல்வாதமும் அனுபவவாத விமர்சனமும்" (1908ன் இரண்டாம் பாதி), ஆங்கிலப் பதிப்பு, அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ, 1952, பக் 136-142.

3. **சொன் குவோ யென் யி** (மூன்று அரசுகளின் கதைகள்) என்ற புகழ் மிக்க சீன வரலாற்றுப் புதினம், இதை (ஏறத்தாழ 1330 -1400ல் வாழ்ந்த) லோ குவான்-சுங் எழுதினார்.

4. ஹெகலின் "தர்க்க அறிவியல் புத்தகம் III -ல் உள்ள அகவயத் தர்க்கவியல் அல்லது கற்பனையின் கொள்கை" என்பது பற்றி லெனின் எழுதிய குறிப்புகளிலிருந்து **ஹெகலின் தர்க்க அறிவியல் பற்றிய சுருக்க உரை** என்ற வி. இ. லெனினின் கட்டுரையைப் பார்க்கவும், தொகுப்பு நூல்கள், ருஷ்யப் பதிப்பு, மாஸ்கோ, 1958, தொகுதி XXXVIII, பக் 161.

5. தைப்பிங் துறக்க (சொர்க்க) அரசு இயக்கம் என்பது 19ஆம் நூற்றாண்டு நடுவில் நடந்தது. இது சிங் அரசவம்சத்தின் நிலப் பிரபுத்துவ ஆட்சியையும், தேசிய ஒடுக்கு முறையையும் எதிர்த்து நடந்த புரட்சிகர உழவர் இயக்கம். 1851 சனவரியில் ஹுங் சியு - சுவான், யாங் சியு சிங், மற்றும் பிற தலைவர்கள் **குவாங் சி** மாநிலத்தில் கைப்பிங் மாவட்டத்திலுள்ள சிண்ட்டியன் கிராமத்தில் ஒரு பேரெழுச்சியைத் தொடுத்தனர்; தைப்பிங் துறக்க அரசை நிறுவிப் பிரகடனம் செய்தனர். குவாங்சியில் இருந்து வடக்கு நோக்கி நகர்ந்த உழவர் படை 1852ல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஹூனான், ஹூப்பே ஆகிய இடங்களைக் கைப்பற்றியது. 1853ல் அப்படை **கியாங் சி** மற்றும் **அன்வெயி** வழியாக நடந்து **நான்கிங்கைக்** கைப்பற்றியது, பிறகு படையின் ஒரு பகுதி வடக்கு நோக்கி மேலும் சென்று டியான் சினின் எல்லையை அடைந்தது. எனினும், தைப்பிங் படை கைப்பற்றிய பகுதிகளில் நிலையான தளப் பகுதிகளை அமைக்கத் தவறிவிட்டது; மேலும், அதன் தலைநகரை நான் கிங்கில் நிறுவிய பிறகு, அதன் தலைமைக்குழு பல அரசியல் மற்றும் இராணுவத் தவறுகளை இழைத்தது, எனவே, சிங் அரசாங்கம் மற்றும் பிரிட்டிஷ், அமெரிக்கா, பிரான்சு ஆக்கிரமிப்பாளர்களுடைய எதிர்ப் புரட்சிப் படைகளின் கொடுந்தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை; இறுதியில் 1864ல் அப்படை தோற்கடிக்கப்பட்டது.

6. **யி ஹோ துவான் இயக்கம்** ஏகாதிபத்திய - எதிர்ப்பு ஆயுதப் போராட்டமாகும். அது 1900ல் வட சீனாவில் நடைபெற்றது. உழவர்கள், கைவினைஞர்கள் மற்றும் பிற பகுதி மக்களை உள்ளடக்கிய பரந்துபட்ட மக்கள் இந்த இயக்கத்தில் பங்கேற்றனர். அவர்கள் சமயஞ்சார்ந்த மற்றும் பிற வழிகளின் மூலம் ஒருவரோடொருவர் தொடர்பு கொண்டனர், இரகசியச் சங்கங்களை ஆதாரமாகக் கொண்டு அவர்கள் அமைப்பாகத் திரண்டனர். அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ஜெர்மனி, ருஷ்யா, பிரான்ஸ், இத்தாலி, ஆஸ்திரியா ஆகிய எட்டு (ஏகாதிபத்திய) வல்லரசுகளின் கூட்டு ஆக்கிரமிப்பு படைகளை எதிர்த்து வீரஞ் செறிந்த போராட்டத்தை நடத்தினர். ஆக்கிரமிப்புக் கூட்டுப்படைகள் டியென்ஸ்டீனையும், பீகிங்கையும் கைப்பற்றிய பிறகு விவரிக்க இயலாத அளவுக்கு காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைகளின் மூலம் அந்த இயக்கம் ஒடுக்கப்பட்டது.

7. **மே 4-ஆம் நாள் இயக்கம்** என்பது ஏகாதிபத்திய எதிர்ப்பு - நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சிகர இயக்கம். இது 1919 மே 4-ல் தொடங்கியது. முதலாம் உலகப் போரில் வெற்றி பெற்ற பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, ஜப்பான், இத்தாலி மற்றும் பிற ஏகாதிபத்திய நாடுகள் பாரிசில் கூடின; போரில் கபளீகரம் செய்ததைப் பங்கு போட்டுக் கொள்வதற்காகவே அங்கே கூடின. சீனத்துக்குச் சொந்தமான ஷாண்டுங் மாநிலத்தில் முன்பு ஜெர்மனி அனுபவித்து (துய்த்து) வந்த எல்லா



உரிமைகளையும் ஜப்பான் எடுத்துக் கொள்ள வேண்டும் **என்று முடிவு** செய்தார்கள். பீகிங் மாணவர்கள் முதலாவதாக இந்தத்**திட்டத்தை** வைராக்கியத்தோடு எதிர்த்துப் பேரணிகளையும் ஆர்ப்பாட்டங்களையும் மே 4-ல் நடத்தினார்கள். இந்த எதிர்ப்பை அடக்குவதற்கான முயற்சியில் முப்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களை வடபகுதி யுத்தப் பிரபு அரசாங்கம் கைது செய்தது. இதை எதிர்த்து பீகிங் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். நாட்டின் பிற பகுதியைச் சேர்ந்த ஏராளமான மாணவர்களும் இதற்கு ஆதரவாகத் திரண்டனர். ஜூன் 3 ஆம் நாளன்று வட பகுதி யுத்தப் பிரபு அரசாங்கம் பீகிங்கில் மாணவர்களைக் கூட்டங் கூட்டமாகக் கைது செய்யத் தொடங்கியது; இரண்டு நாட்களுக்குள் ஆயிரம் பேரைக் கைது செய்தனர். இச்செயல் நாடு முழுவதும் மேலும் சினத்தை மூட்டிக் கிளறிவிட்டது.

ஜூன் 5 முதல் ஷாங்காய் மற்றும் பல பிற நகரங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்; இந்நகரங்களைச் சேர்ந்த வணிகர்களும் கடையடைப்பு செய்தனர். இவ்வாறாக, தொடக்கத்தில் முக்கியமாகப் படிப்பாளிகளைக் கொண்டு தொடங்கிய **தேசப்பற்று இயக்கமானது,** விரைந்து வளர்ந்து, பாட்டாளி வர்க்கம், நகர்ப்புறக் குட்டி முதலாளிகள் (சிறு உடைமையாளர்கள்) மற்றும் முதலாளிகள் ஆகியோரைக் கொண்ட தேசப்பற்று இயக்கமாக மாறியது. இந்தத் தேசப்பற்று இயக்க வளர்ச்சியின் கூடவே, மே 4க்கு முன்பே நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராகவும், அறிவியல் மற்றும் சனநாயகத்தை உயர்த்துவதற்காகவும் தொடங்கப்பட்ட புதிய பண்பாட்டு இயக்குமும் கூட வலிமை மிக்கதும், திறன் மிக்கதுமான **புரட்சிப் பண்பாட்டு இயக்கமாக** வளர்ந்தது; இந்த இயக்கத்தின் உயிரோட்டம் மார்க்சிய - லெனினியத்தைப் பரப்புவதாக இருந்தது.

8. **உழவர் புரட்சிப்போர்** *(Agrarian revolutionary war)* என்பது சீனமக்கள் பொதுவுடைமைக் கட்சித் தலைமையின் கீழ் 1927 முதல் 1937 வரையில் தொடுத்தப் புரட்சிப் போராட்டமாகும். அதன் தலையாய உள்ளடக்கம் சிவப்பு அரசியல் அதிகாரத்தை நிறுவி வளர்த்தல், உழவர் புரட்சியை வளர்த்தல், கோமிங்டாங் பிற்போக்கு ஆட்சியை ஆயுதந்தாங்கி எதிர்த்தல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகியவையாகும். இந்தப் புரட்சிப் போர் **இரண்டாவது புரட்சிகர உள்நாட்டுப் போர்** என்றும் அறியப்படுகிறது.

9. ஹெகலின் தர்க்க அறிவியல் என்ற III புத்தகம் *3* வது பரிவில் உள்ள "கருத்து" என்பதைப் பற்றி லெனின் எழுதிய குறிப்புகளைக் காண்க. அதில் அவர், "ஒன்றைப் புரிந்து கொள்வதற்கு அதை அனுபவம் மூலம் *(empirically)* புரிந்து கொள்ளத் தொடங்குவதும், படிப்பதும், அனுபவவாதத்திலிருந்து அனைத்தும் தழுவிய தன்மைக்கு உயர்வதும் இன்றியமையாததாகும்". (வி.இ.லெனின் எழுதிய "ஹெகலின் தர்க்க அறிவியல் பற்றிய சுருக்க உரை," தொகுப்பு நூல்கள், ருஷ்யப் பதிப்பு, மாஸ்கோ, *1958*, தொகுதி XXXVIII, பக். *197*

10. வி.இ. லெனினின், ***என்ன செய்ய வேண்டும்?*** (இலையுதிர்காலம், *1901* - பிப்ரவரி *1902*) தொகுப்பு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அயல் மொழிப் பதிப்பகம், மாஸ்கோ *1961*, தொகுதி V பக். *369*

11. வி.இ. லெனினின் **பொருள் முதல்வாதமும், அனுபவவாத விமர்சனமும்,** ஆங்கிலப்பதிப்பு, அயல் மொழிப் பதிப்பகம், மாஸ்கோ *1952*, பக். *141*.

12. ஜே. வி. ஸ்டாலின், **லெனினியத்தின் அடிப்படை அம்சங்கள்,** (ஏப்ரல், மே *1924*) ஆங்கிலப் பதிப்பு, அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ, *1954*, பக். *31*.

13. லெனின் எழுதிய **பொருள் முதல்வாதமும் அனுபவவாத விமர்சனமும்** (ஆங்கிலப் பதிப்பு, மாஸ்கோ அயல்மொழிப் பதிப்பகம் *1952*) பக்கம் *129-136*ஐப் பார்க்கவும்.



# III. சரியான கருத்துகள் எங்கிருந்து வருகின்றன?

(மே 1963)

**மாசேதுங்**

சரியான கருத்துகள் எங்கிருந்து வருகின்றன? அவை வானத்திலிருந்து கீழே விழுகின்றனவா? இல்லை. நீங்கள் பிறக்கும்போதே அவை உங்கள் மனதில் தோன்றுகின்றனவா? இல்லை. அவை சமுதாய நடைமுறையிலிருந்தே வருகின்றன. சமுதாய நடைமுறையிலிருந்து மட்டுமே வருகின்றன. அவை மூன்று வகையான சமுதாய நடைமுறையிலிருந்து வருகின்றன. அவை **உற்பத்திக்கான போராட்டம், வர்க்கப் போராட்டம், அறிவியல் ஆய்வு** (பரிசோதனை) என்பவை. மனிதனின் சமூக வாழ்நிலையே அவனுடைய சிந்தனையைத் தீர்மானிக்கிறது. முன்னேறிய வர்க்கத்துக்கே உரித்தான சரியான கருத்துகளை ஒருமுறை மக்கள் பற்றிக் கொண்டவுடன், அக் கருத்துகள் ஒரு **பொருளாயத விசையாக** *(Material Force* - பொருளியல் சக்தி, பருப்பொருள் ஆற்றல்) மாறிவிடுகின்றன; அவை சமுதாயத்தையும், உலகையும் மாற்றுகின்றன.

தங்களுடைய சமுதாய நடைமுறையில் மனிதர்கள் பல்வேறு வகையான போராட்டங்களில் இருந்து செழுமையான அனுபவத்தைப் பெறுகிறார்கள். அவர்களுடைய வெற்றிகளிலிருந்தும், தோல்விகளிலிருந்தும் இந்த அனுபவத்தைப் பெறுகிறார்கள். மனிதனுடைய ஐம்புலன்களினூடாக (கண், காது, மூக்கு (தோல்) மெய், வாய் (நாக்கு) - அதாவது பார்வை, கேட்பு, முகர்வு, தொடு உணர்வு, சுவை - ஊடாக எண்ணற்ற புற உலக நிகழ்வுகள் *(phenomena* - புதுமைத் தோற்றங்கள்) அவனுடைய மூளையில் பிரதிபலிக்கின்றன. முதலில் அறிவு *(knowledge)* புலன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உணர்வுத் தன்மை உள்ளதாகிறது. போதிய அளவு புலன் அறிவு *(perceptual knowledge)* சேர்ந்தவுடன் கருத்தியல் *(conceptual)* அறிவுக்கான பாய்ச்சல் உண்டாகிறது. அதாவது கருத்துகள் தோன்றுகின்றன. இது அறிதலின் *(cognition)* ஒரு நிகழ்முறையாகும். முழு அறிதல் நிகழ்ச்சியில் இது முதல்படி ஆகும்; அதாவது புறவயப் பருப்பொருளில் இருந்து அகவய விழிப்புணர்வுக்கு *(conciousness* - பிரக்ஞை), இருத்தலில் *(existence)* இருந்து கருத்துகளுக்கு மாறும் நிகழ்முறையாகும். ஒருவருடைய விழிப்புணர்வு அல்லது கருத்துகள் (கோட்பாடுகள், கொள்கைகள், திட்டங்கள் அல்லது நடவடிக்கைகள் - *measures*) புற உலக விதிகளைச் சரியாக பிரதிபலிக்கின்றனவா என்பது இந்தக் கட்டத்தில் இன்னமும் மெய்ப்பிக்கப்படவில்லை; அவை சரியா, தவறா என்பதை இன்னமும் உறுதி செய்ய இயலவில்லை.

இதன் பிறகு அறிதல் நிகழ்முறையின் இரண்டாவது கட்டம் வருகிறது. இந்தக் கட்டத்தில் விழிப்புணர்விலிருந்து மீண்டும் பருப்பொருளுக்கு இட்டுச் செல்கிறது. கருத்துகளிலிருந்து மீண்டும் இருத்தலுக்கு இட்டுச் செல்கிறது. முதல் கட்டத்தில் ஈட்டிய அறிவு இக்கட்டத்தில் சமுதாய நடைமுறைக்குப் பயன்படுத்தப்படுகிறது. அதன் மூலம் கோட்பாடுகள், கொள்கைகள், திட்டங்கள், அல்லது நடவடிக்கைகள் எதிர்பார்த்த வெற்றியைத் தருகின்றனவா என்று உறுதி செய்யப்படுகின்றன.

`பொதுவாகச் சொன்னால், **சரியானவை வெல்லும்; தவறானவை தோல்வியடையும்**; இயற்கையுடனான மனிதனின் போராட்டத்தில் இது குறிப்பான உண்மையாகும். சமுதாயப் போராட்டத்தில் முன்னேறிய வர்க்கத்தைச் சார்பு படுத்தும் சக்திகள் சில நேரங்களில் தோல்வியடைகின்றன; அவர்களுடைய கருத்துகள் தவறானவை என்பதால் இப்படி நேர்வதில்லை; ஆனால் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இருதரப்பு சக்திகளையும் சீர்தூக்கிப் பார்த்தால், அந்த நேரத்தில் முன்னேறிய வர்க்க சக்திகள் பிற்போக்கு சக்திகளின் அளவுக்கு வலிமை பெற்றிருக்கவில்லை என்பதே காரணமாகும்.

எனவே, அவை தற்காலிகமாகத் தோற்கடிக்கப்படுகின்றன; ஆனால் விரைவிலோ அல்லது சிறிதுகாலம் கழித்தோ அவை வெற்றி பெறும்.

மனித அறிவு, நடைமுறைச் சோதனைமூலம் இன்னொரு துரிதப்



பாய்ச்சலை நிகழ்த்துகிறது. இந்தப் பாய்ச்சல் **முன்னதைவிட மிக** அதிக முக்கியத்துவம் உடையது. ஏனென்றால், அறிதலின் **முதல்** துரிதப் பாய்ச்சல் சரியா அல்லது தவறா என்பதை இந்தப் **பாய்ச்சல்** மட்டுமே மெய்பிக்க முடியும்; அதாவது, புறஉலகைப் பிரதிபலிக்கும் நிகழ்ச்சிப் போக்கில் உருவாக்கப்பட்ட கருத்துகள், கோட்பாடுகள், கொள்கைகள், திட்டங்கள் அல்லது நடவடிக்கைகள் சரியா அல்லது தவறா என்பதை இது மட்டுமே மெய்ப்பிக்க முடியும். உண்மையைச் சோதித்து அறிவதற்கான வேறு வழி இல்லை.

மேலும் பாட்டாளி வர்க்கம் உலகை அறிவதன் ஒரே ஒரு நோக்கம் அதை மாற்றுவதற்காகத்தான். பெரும்பாலும் ஒன்றைப் பலமுறை திரும்பத் திரும்பச் செய்த பிறகுதான் சரியான அறிவை அடைய முடியும்; அதாவது பருப்பொருளிலிருந்து விழிப்புணர்வுக்கும், அதன் பிறகு மீண்டும் பருப்பொருளுக்கும் செல்லுவதன்மூலமே, அதாவது, நடைமுறையிலிருந்து அறிவுக்கும், மீண்டும் அறிவிலிருந்து நடைமுறைக்கும் செல்லுவதன்மூலம் மட்டும்தான், சரியான அறிவை அடைய முடியும். இதுதான் அறிவு பற்றிய மார்க்சியக் கோட்பாடு; இயங்கியல் பொருளியல் அறிவுக் கோட்பாடு.

இந்த அறிவுக் கோட்பாட்டை இன்னமும் புரிந்து கொள்ளாத தோழர்கள் நம்மிடையே பலர் உள்ளனர். அவர்களுடைய கருத்துகள், நம்பிக்கைகள், கொள்கைகள், முறைகள், திட்டங்கள் மற்றும் முடிவுகள், நேர்த்தியான உரைகள், நீண்ட கட்டுரைகள் ஆகியவை எங்கிருந்து வந்தன என்று அவர்களைக் கேட்டால், இக்கேள்விகள் அவர்களுக்குப் புதுமையாகத் தெரிகின்றன. எனவே அவர்களால் விடைகூற முடியாது. பருப்பொருளை விழிப்புணர்வாகவும், விழிப்புணர்வைப் பருப்பொருளாகவும் மாற்றக்கூடிய துரிதப் பாய்ச்சல்கள் புதுமை நிகழ்வுகளாக அன்றாட வாழ்வில் நடந்தால் கூட, அவர்களால் இதை விளங்கிக்கொள்ள முடிவதில்லை.

எனவே, அறிவுப்பற்றிய இயங்கியல் பொருளியல் கோட்பாட்டை நம் தோழர்களுக்குக் கற்பிப்பது இன்றியமையாததாகும்; அப்போதுதான், அவர்கள் சரியான வழியில் சிந்திக்க முடியும்; துருவி ஆராய்வதிலும், கற்பதிலும், பட்டறிவைத் தொகுப்பதிலும் சிறந்து விளங்க முடியும்; கஷ்டங்களைத் தாண்டிவர முடியும்; மிகக் குறைவான தவறுகளைச் செய்ய முடியும்; அவர்களுடைய வேலையை சிறப்பாகச் செய்ய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடியும்; மேலும் சீனாவை ஒரு மாபெரும் ஆற்றல் மிக்க சோசலிச சமுதாயமாக கட்டியமைக்க, கடுமையாகப் போராட முடியும். நம்முடைய மாபெரும் பண்ணாட்டுக் கடமையை நிறைவேற்றும் பொருட்டு உலகெங்கிலும் உள்ள ஒடுக்கப்படுகிற மற்றும் சுரண்டப்படுகின்ற பரந்துபட்ட மக்களுக்கு உதவவும் முடியும்.

- *மாசேதுங்கின் தேர்வு நூல்கள், தொகுதி* (IX), *பக்கம் 1-2*

*(நமது இப்போதய நாட்டுப்புற வேலையில் உண்டாகும் ஒருசில சிக்கல்களைப் பற்றிய சீனப் பொதுவுடைமைக் கட்சியின் மையக்குழுவின் வரைவுத் (நகல்) தீர்மானம்" என்பதிலிருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டது. இத்தீர்மானம் தோழர் மா சே துங்கின் வழிகாட்டுதலின் கீழ் வரையப்பட்டது. இப்பகுதி தோழர் மா சே துங் அவர்களாலேயே எழுதப்பட்டது.)*

– மொழிபெயர்ப்பு: **சே. கோச்சடை**

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோழர் **மாவோ** பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தத்துவம் நடைமுறை இரண்டிற்கும் மாபெரும் பங்களிப்புகளை வழங்கியவர்.

லெனினுக்குப் பின்பு இயங்கியலை வளர்த்த பெருமை மாவோவுடையது. முரண்பாடுகளில் முதன்மையான முரண்பாடு, முரண்பாட்டின் முதன்மைக் கூறு, பகை முரண்பாடு, பகைத் தன்மையற்ற முரண்பாடு என வேறுபடுத்திப் புரட்சிகர மார்க்சிய இயங்கியலைச் செழுமைப்படுத்தியவர் மாவோ.

நீண்டகாலப் போர், புதிய சனநாயகப் புரட்சி, மாபெரும் முன் நோக்கிய பாய்ச்சல், செம்மைப்படுத்தும் இயக்கங்கள் மாபெரும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சி முதலியன, அவரது மாபெரும் பங்களிப்புகள். அரசியல், அமைப்பு, செயல்பாடு, சிந்தனை, அறநெறி முதலிய அனைத்திலும் அவர் இயங்கியல் முறையையே கையாண்டார். இயங்கியலைக் கைவிடுவது, வறட்டுக் கொள்கைக்கும் திருத்தல்வாதத்துக்கும் வழி வகுக்கும் என்பதை எடுத்துக் காட்டியவர் மாவோ.

**வெளியீடு : சரவண பாலு பதிப்பகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்